உரைவேந்தரின் உரைமாட்சி

- முனைவர் சோ.ந. கந்தசாமி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

உரைவேந்தரின் உரைமாட்சி

பேரா. **சோ.ந.கந்தசாமி,** எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,
டிப்.மொழியியல், டிப்.வடமொழி, பிரவீண் (இந்தி)
மொழிப்புலத் தலைவர் (ஓய்வு)
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 010

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113

பத்மஸ்ரீ டாக்டர் அவ்வை நடராசன் அறக்கட்டளைச்
சொற்பொழிவு

அறக்கட்டளை நிறுவியவர் : சீனக் கவிஞர் யுசி

வரிசை எண் : 6

நூல் விவரக் குறிப்பு

நூலின் பெயர்	:	**உரைவேந்தரின் உரைமாட்சி** உரைவேந்தர் ஔவை சு.துரைசாமிப் பிள்ளை
நூலாசிரியர்	:	முனைவர் சோ.ந.கந்தசாமி பேராசிரியர் & மொழிப் புலத் தலைவர் [ஓய்வு] தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
அறக்கட்டளைப் பொறுப்பாளர்	:	முனைவர் சு. தாமரைப்பாண்டியன் உதவிப் பேராசிரியர் தமிழ் இலக்கியம் (ம)சுவடியியல் புலம் தரமணி, சென்னை - 600 113.
வெளியீட்டாளர்	:	உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இரண்டாவது முதன்மைச் சாலை, சி.ஐ.டி. வளாகம், தரமணி, சென்னை - 600 113
ISBN NO	:	978-93-93736-83-3
வெளியீடு எண்	:	1138
மொழி	:	தமிழ்
முதற்பதிப்பு	:	நவம்பர், 2022 திருவள்ளுவர் ஆண்டு: கார்த்திகை, 2053
அளவு	:	1/8 டெம்மி
பக்கம்	:	x+137
படிகள்	:	500
விலை	:	120
அச்சு	:	ASX அச்சகம்
பொருண்மை	:	திறனாய்வு

அறக்கட்டளை சொற்பொழிவாளர் கருத்துக்களுக்கு நிறுவனம் பொறுப்பன்று

உள்ளுறை

	வாழ்த்துரை	iv
	வாழ்த்துரை	v - vi
	அணிந்துரை	vii - viii
	முன்னுரை	ix - x
1.	*ஐங்குறுநூறு மருதம் உரைத்திறம்*	*1 - 38*
2.	*நற்றிணை உரைத்திறம்*	*39 - 67*
3.	*மணிமேகலை உரைத்திறம்*	*68 - 132*
	பின்னிணைப்புகள்	
	அ. மேற்கோள் நூல்கள்(தமிழ்)	*133 - 134*
	ஆ. ஆங்கில நூல்கள்	*135 - 136*
	இ. சுருக்கச்சொல் விளக்கம்	*137*

முனைவர் ந.அருள், எம்.ஏ., பிஎச்.டி., 19.11.2023
இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை
தமிழ் வளர்ச்சி வளாகம்
எழும்பூர் - 600 008

வாழ்த்துரை

என் வணக்கத்திற்கு உரிய பிதாமகர் ஔவை சு.துரைசாமிப் பிள்ளை அவர்களின் பன்மாண் சிறப்புக்களையும் என் தந்தை மரியாதைக்குரிய ஔவை நடராசன் அவர்கள் பலமுறை எனக்கு எடுத்துரைத்துத் தமிழ் வளர்ச்சித் துறையின் மேம்பாட்டிற்குப் பணிபுரியும்படி ஊக்கப்படுத்தி வந்துள்ளார். ஔவை அவர்களின் இலக்கிய உரைகளிலும், சித்தாந்த சாத்திர உரைகளிலும், தமிழ்த்தொண்டிலும் பெரிதும் ஈடுபாடு கொண்டுள்ள திருமதி வைதேகி ஹெர்பர்ட் [அமெரிக்கா] அவர்கள், பேரறிஞர் ஔவை துரைசாமி அறக்கட்டளையினை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 2017ஆம் ஆண்டில் அமைத்து, ஆண்டுதோறும் வல்லுநர் ஒருவரை வரவழைத்து, ஔவை அவர்களின் நூல்களைப் பற்றிய ஆய்வுரையினை நிகழ்த்தி அதனை நூல் வடிவில் வெளியிடுவதற்கும் வகை செய்துள்ளார். அவ்வகையில், 2018இல், பேராசிரியை நிர்மலா மோகன் அவர்கள், 'உரைவேந்தர் ஔவை துரைசாமி' என்ற பொருளிலும், 2020 இல் பேராசிரியர் கு.சிவமணி அவர்கள் 'ஔவையும் புலமையும்' என்ற தலைப்பிலும், 2021 இல் முனைவர் ரா.இராமன் அவர்கள், 'உரைவேந்தர் பார்வையில்' என்ற தலைப்பிலும் உரையாற்றியுள்ளனர். எனினும்,

> **"தோள்கண்டார் தோளே கண்டார் தொடுகழற் கமலம்**
> **அன்ன தாள்கண்டார் தாளே கண்டார் ,தடக்கை**
> **கண்டாரும் அஃதே, வாள்கொண்ட கண்ணார் யாரே**
> **வடிவினை முடியக் கண்டார் "**

என்ற கவிச்சக்கரவர்த்தி கம்பரின் கருத்திற்கு ஏற்ப உரைவேந்தரின் தமிழ்க்கொடை விரிந்து பரந்துள்ளது; 'விரிப்பிற் பெருகும், தொகுப்பின் எஞ்சும்' என்ற புறநானூற்றுப் பாடலுக்கு எடுத்துக்காட்டாக அமைந்தது. பன்மொழிப் புலமையும் பல்துறைப் பேரறிவும் சான்ற பேராசிரியர் சோ.ந.கந்தசாமி அவர்கள், 'உரைவேந்தரின் உரைமாட்சி' என்ற தலைப்பில் நூலினை உருவாக்கி இந்த ஆண்டில் [2022] உரை நிகழ்த்துதல் நமக்குப் பேருவகை பயக்கின்றது. அப்பெருமகனார்க்கு என் நன்றி உரியது.

ந.அருள்

முனைவர் வி.திருவள்ளுவன் எம்.ஏ., பிஎச்.டி.,
துணைவேந்தர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613010.

வாழ்த்துரை

தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை உள்ளிட்ட செவ்வியல் இலக்கியங்கள் [Classical Literature] தோன்றிய காலத்திலேயே அவற்றுக்குரிய உரைகள் எழுதப்படவில்லை. இதற்குக் காரணம் அக்காலத்து வாசகர்கள் அவற்றைப் படித்துப் புரிந்துகொள்ளக் கூடிய அறிவு படைத்திருந்தமையே ஆகும். சங்கம் மருவிய காலத்தில் தமிழகம் அயலாராகிய களப்பிரராலும் அவர்களுக்குப் பின்னர் பல்லவர்களாலும் ஆளப் பெற்றமையால் தமிழ்க்கல்வி குன்றிவிட்டது. எனினும், ஆசிரியர் மாணவர் மரபில் [-குருகுலத்தில்] இலக்கிய, இலக்கணக் கல்வி தொடர்ந்து பேணப் பெற்றுள்ளது. கி.பி. 11ஆம் நூற்றாண்டினராகக் கருதப்பெறும் இளம்பூரணர்தான் தொல்காப்பியம் முழுமைக்கும் உரை வரைந்து உரையாசிரியர் என்னும் சிறப்புப் பெயரினைப் பெற்றவர். இவர் அடிச்சுவட்டில் சேனாவரையர், நச்சினார்க்கினியர் உள்ளிட்டோரின் விரிவான இலக்கண உரைகள் தோன்றின. இலக்கிய உரையாசிரியர்களில் அடியார்க்கு நல்லார், பரிமேலழகர், நச்சினார்க்கினியர் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர். சித்தாந்த சாத்திரங்களுக்கு உரை எழுதியோரில் மாதவச்சிவஞான முனிவர் பெரிதும் பாராட்டப் பெற்றவர்.

மேலே சுட்டப்பெற்ற உரையாசிரியர்களின் வரிசையில் வைத்து இன்றைய அறிஞர் பெருமக்களால் பாராட்டப் பெறுபவர் உரைவேந்தர் ஔவை சு.துரைசாமிப் பிள்ளை அவர்கள். பாட்டும் தொகையும் ஆகிய சங்க இலக்கியங்களில் பதிற்றுப்பத்து, புறநானூறு ஆகிய புறப்பொருள் நுதலிய இலக்கியங்களுக்கும், ஐங்குறுநூறு, நற்றிணை என்னும் அகப்பொருள் குறித்த இலக்கியங்களுக்கும் விரிவாகவும் விளக்கமாகவும் தெளிவாகவும் திறமாகவும் உரை வரைந்த சிறப்புக்கு உரியவர் ஔவை அவர்களே ஆவர். ஐம்பெருங்காப்பியங்களில் பௌத்தக் காப்பியமாகத் திகழும் மணிமேகலையின் பின்னான்கு காதைகளுக்கும் ஔவை

அவர்களின் விளக்கவுரைகள் அவர்தம் தமிழ்ப் புலமையோடு தத்துவப் புலமைக்கும் தருக்கப் புலமைக்கும் சிறந்த எடுத்துக்காட்டாக இலங்குவன ஆகும்.

உரைவேந்தரின் உரைமாட்சி என்ற இந்தத் திறனாய்வு நூலின் முதல் பகுதி, "ஐங்குறுநூறு (மருதம்) உரைத்திறம்" பற்றி அமைந்துள்ளது. இதற்குப் பழைய உரை உண்டு. ஆயினும் ஔவை அவர்கள் உரை மேலும் ஒளியூட்டுவதாக அமைந்துள்ளது. இரண்டாவது பகுதி, நற்றிணைக்கு இப்பெருமகனார் எழுதிய விளக்க உரை பற்றிய ஆய்வாக விளங்குகிறது. மூன்றாம் பகுதி, மணிமேகலை காப்பியத்தின் உரைத்திறமாக ஒளிர்கிறது.

இந்நூலாசிரியர் பேராசிரியர் சோ.ந.கந்தசாமி அவர்கள் நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கும் முதுபெரும் தமிழறிஞர். அண்ணாமலைப் பல்கலைக்கழகம், மலாயாப் பல்கலைக்கழகம், தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பல்லாண்டுகள் பணிபுரிந்தவர்; நன்மாணக்கர் பலரை உருவாக்கியவர்; பன்மொழிப்புலமை வாய்க்கப் பெற்றவர்; பௌத்த தத்துவ ஆய்வில் டாக்டர் பட்டம் பெற்றவர்; தமிழிலும் ஆங்கிலத்திலும் பற்பல ஆய்வு நூல்களை எழுதியவர். இவர்தம் நுண்மாண் நுழைபுலத்தினைப் புலப்படுத்திக்காட்டும் உரைவேந்தரின் உரைமாட்சியை யாவரும் கற்றறிந்து பயன்பெற விழைகிறேன்.

தஞ்சாவூர்: 613010 — வி. திருவள்ளுவன்

கோபிநாத் ஸ்டாலின், எம்.ஏ.,
இயக்குநர் (கூ.பொ.)
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை - 600 113.

அணிந்துரை

இளம்பூரணர், அடியார்க்கு நல்லார், நச்சினார்க்கினியர், சேனாவரையர், பரிமேலழகர் முதலியோர் உரையாசிரியர்களாகத் திகழ்ந்தவர்கள். இவர்களின் வரிசையில் வைத்துப் போற்றத் தக்கவர் ஔவை துரைசாமிப் பிள்ளை. இவர் உரைவேந்தர் என்றும், சித்தாந்த கலாநிதி என்றும் பாராட்டப்படுபவர். பதிற்றுப்பத்து, புறநானூறு, ஐங்குறுநூறு, நற்றிணை, மணிமேகலை முதலிய நூல்களுக்கு விரிவாகவும், விளக்கமாகவும், தெளிவாகவும் உரை எழுதியுள்ளார்.

ஔவை துரைசாமியார் நூலாசிரியர், உரையாசிரியர் மாணாக்கர் மனம் கொள்ளத்தக்க வகையில் பாடம் நடத்தும் போதகாசிரியர் எனும் முத்திறத்தில் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத வகையில் விளங்கியவர்.

தமிழ்த்தாத்தா உ.வே.சா. பதிப்பு வேந்தர் என்றால் ஔவை துரைசாமியார் உரைவேந்தர் என்று தமிழறிஞர்களிடையே பாராட்டப்பட்டவர். சங்க இலக்கியங்கள் சிலவற்றுடன் மேலும் மணிமேகலை, சூளாமணி, யசோதர காவியம், திருவருட்பா முதலிய நூல்களுக்கும் பேருரை எழுதிப் புகழ் பெற்றவர்.

பரந்துபட்ட இலக்கியப் புலமை, ஆய்வுத்திறன் கல்வெட்டு அறிவு, ஒப்பியல் முறை, பன்மொழிப் புலமை என்பன வாய்க்கப் பெற்றவர். பாடவேறுபாடுகளை அறிந்து வெளிப்படுத்துவதில் வல்லவர்.

நல்லாசிரியர், ஆய்வுத் துறைபோகியவர், பன்மொழிச் செல்வர், சமயத் தத்துவத் துறை ஆகியவற்றில் முத்திரை பதித்தவர். அவர் தம் உரைகளின் மாட்சியால், அவர் நூல்களின் திறத்தால் தமிழ் என்றும் ஒளிவீசும்.

ஐங்குறுநூறு மருதத்திணைக்குரிய உரையை, இவரின் மாணவர் தமிழகச் சட்டமன்ற மேனாள் அவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் பதிப்பித்துள்ளார்.

அமெரிக்காவில் வாழும் திருமதி வைதேகி ஹெர்பர்ட் அவர்கள் ஔவை துரைசாமியாரின் இலக்கிய உரைகளிலும், சித்தாந்த சாத்திர உரைகளிலும், தமிழ்த் தொண்டிலும் பெரிதும் ஈடுபாடு உடையவர். அவ் அம்மையார் 2017இல் ஔவை துரைசாமியாரின் பெயரில் ஓர் அறக்கட்டளையை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நிறுவியுள்ளார். ஆண்டுதோறும் தக்கார் ஒருவரைக் கொண்டு ஔவை துரைசாமியின் நூல்கள், உரைகள் பற்றி உரை நிகழ்த்தி, அதனை அன்றே நூலாக வெளியிட வேண்டும் என்று வேண்டுகோள் வைத்துள்ளார். அவ்வகையில் 2022 ஆம் ஆண்டில் பேராசிரியர் சோ. ந. கந்தசாமி அவர்கள் "உரைவேந்தரின் உரைமாட்சி" என்ற நூலை எழுதியுள்ளார்.

ஔவை துரைசாமியாரின் உரைகளின் மேன்மையை விளக்க எழுதப்பட்டதே இந்நூலாகும். பேராசிரியர் சோ. ந. கந்தசாமி அவர்கள் இலக்கியப் புலமை வளம் மிக்க தமிழறிஞர். இவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகம், தமிழ்ப் பல்கலைக்கழகம், மலாயாப் பல்கலைக்கழகம் முதலியவற்றில் பணியாற்றியவர். தமிழிலும், ஆங்கிலத்திலும் நூல்கள் பல படைத்தவர். பௌத்த சமயத் தத்துவ ஆய்வுக்காக முனைவர் பட்டம் பெற்றவர். இந்நூல் வாயிலாக இவரின் நுண்மாண் நுழைபுலம் நன்கு விளங்கும். இந்நூலில் துரைசாமியாரின் உரையின் மாட்சிகளை மிகச் சிறப்பாக, விளக்கமாக, தெளிவாக எடுத்தியம்பியுள்ளார். இந்நூலாசிரியர்க்குப் பாராட்டும் வாழ்த்தும் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இவர் மேலும் இது போன்ற நூல்களைப் படைக்கவேண்டும் என்பதே எம் விருப்பமும் வேண்டுகோளுமாகும்.

சென்னை - *600 113*

இயக்குநர் (கூ.பொ.)

பேரா. சோ.ந.கந்தசாமி
61, ஐந்தாம் தெரு, நடராசபுரம் [தெற்கு]
தஞ்சாவூர் - 613 007.

முன்னுரை

ஆசிரியப் பெருமக்களை நூலாசிரியர், உரையாசிரியர், போதகாசிரியர் என்று மூவகையராக இலக்கணக் கொத்தின் ஆசிரியர் சுவாமிநாத தேசிகர் வகைப்படுத்தினார். நூலினையும் உரையினையும் ஆழ்ந்து பயின்று மாணாக்கர் மனங்கொள்ளும் பாங்கில் பாடம் பயிற்றுவோர் போதகாசிரியர் ஆவர். இம்முத்திறமும் வாய்த்த சான்றோராகச் சித்தாந்த கலாநிதி, உரைவேந்தர் ஔவை சு.துரைசாமிப் பிள்ளை அவர்கள் ஒளிவீசுகிறார்.

பழுத்த தமிழ்ப் புலமை படைத்த ஔவை அவர்கள், திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய காலத்தில் உடன் பணிபுரிந்த வடமொழிப் பேராசிரியர்களிடம் சமஸ்கிருதம், பாலி மொழிகளைக் கற்று மேற்கோள் காட்டும் அளவிற்குப் போதிய புலமை பெற்றிருந்ததாகக் குறித்துள்ளார். சமணர்க்குரிய பிராகிருத மொழியில் அந்நெறி சார்ந்த முதலாம் மகேந்திரவர்ம பல்லவன் [கி.பி. 600] எழுதியுள்ள மத்தவிலாசப் பிரகசனம் என்னும் எள்ளல் நாடகத்தினை இனிய தமிழாக்கம் செய்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் ஆய்விதழில் 1950 இல் வெளியிட்டிருத்தலால், பிராகிருத மொழியிலும் பிள்ளை அவர்கள் புலமை பெற்றிருந்தார் என்பது புலனாகும்.

குறிப்புரை மட்டுமே அமைந்த பதிற்றுப்பத்திற்கும், புறநானூற்றிற்குப் பழைய உரை கிடைக்காத பாடல்கள் [269-400] மற்றும் முந்தைய பாடல்கள் [1-266] ஆகியவற்றுக்கும், ஐங்குறுநூற்றிற்குப் பழைய உரை கிடைக்காத பாடல்கள் [470-500] மற்றும் முந்தைய பாடல்கள் [1-469] ஆகியவற்றுக்கும் ஔவை அகல உரை வரைந்துள்ளார். நற்றிணைக்குப் பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர் முதல் உரை வரைந்திருப்பினும், விரிவான விளக்கவுரை வரைந்த சிறப்பும் ஔவைக்கு உண்டு.

மணிமேகலை காப்பியத்தின் பின்னான்கு காதைகளுக்கு ஔவை அவர்கள் விரிவாக எழுதியுள்ள விளக்கவுரை, உரை வரலாற்றில் சிறப்பிடம் பெறும் தகுதி மிகுதி படைத்தது. சமணக் காப்பியமாகிய யசோதர காவியத்திற்கு இவர் வரைந்துள்ள உரை சுட்டத்தக்கது. இவர்தம் சைவ சித்தாந்தப் புலமைக்கு ஞானாமிர்தம், சிவஞானபோதம் [சிற்றுரை] ஆகிய சாத்திரங் களுக்குரிய ஆராய்ச்சியுடன் கூடிய செம்பதிப்புகள் சான்றாக விளங்குகிறது. இவர் ஆராய்ந்து எழுதியுள்ள சைவ இலக்கிய வரலாறு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தாரால் வெளியிடப் பெற்றது..

தமிழ்நாடு அரசு தமிழ்வளர்ச்சித் துறை செயலராகவும், தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும் சீரிய பணியாற்றிய சொல்லின் வேந்தர் முனைவர் ஔவை நடராசன் அவர்கள் தம்தந்தை வரைந்துள்ள மணிமேகலையின் உரைத்திறம் குறித்து எழுத வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். அவர்தம் அருமைப் புதல்வரும் தமிழ்வளர்ச்சித் துறை இயக்குநரும் ஆகிய முனைவர் ந.அருள் அவர்கள் தம் பெருமைமிகு பிதாமகரின் உரைவளம் குறித்து உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அறக்கட்டளைச் சொற்பொழிவு நிகழ்த்த வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொண்டார். அவர்தம் அழைப்பினை ஏற்று, 1. ஐங்குறுநூறு மருதம் 2. நற்றிணை 3. மணிமேகலை என்ற செவ்வியல் இலக்கியங்கட்கு ஔவை வரைந்துள்ள உரைத்திறம் பற்றிய இந்நூலினை எழுதியுள்ளேன். இது மாதிரிக்கணக்குத்தான். மற்றவை இந்நூலைப் பயில்பவரின் வீட்டுக் கணக்கிற்கு விடப்பட்டன.

இந்நூலினை எழுதச் செய்த தமிழ்வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள் அவர்கட்கும், அணிந்துரை வழங்கிச் சிறப்பித்த தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மதிப்பிற்குரிய துணைவேந்தர் முனைவர் வி.திருவள்ளுவன் அவர்கட்கும், அலுவலக உதவியை அன்புடன் வழங்கிய பாராட்டுக்குரிய பதிவாளர் முனைவர் சி.தியாகராசன் அவர்கட்கும் என் நன்றி உரியது.

இந்நூல் சிறப்புற வெளிவருவதற்குக் காரணமாக இருந்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் பொறுப்பு இயக்குநர் திரு. கோபிநாத் ஸ்டாலின் எம்.ஏ., அவர்களுக்கு என் பாராட்டும், நன்றியும் உரியன.

1. ஐங்குறுநூறு மருதம் உரைத்திறம்

1. அறிமுகம்

சங்க இலக்கியத்தில் அகத்திணை பற்றிய பனுவல்கள் பலவற்றுள் அடிவரையறையால் தொகை வகை செய்யப் பெற்றவை நான்கு ஆகும். அவையாவன: 1. ஐங்குறுநூறு, 2. குறுந்தொகை, 3. நற்றிணை, 4. அகநானூறு என்பன. இவற்றுள் அடி நிமிர்ந்து வந்த நெடும்பாட்டுக்கள் நானூறு இடம்பெற்ற தொகை இலக்கியம் நெடுந்தொகை என்று வழங்கப் பெற்றுப் பின்னர்ப் பொருண்மை அடிப்படையில் அகநானூறு எனப் பெயர் பெற்ற இலக்கியம் ஆகும். இதனுள் 13 அடி முதல் 31 அடி வரை அமைந்த ஆசிரியப்பாக்கள் நானூறு தொகுக்கப் பெற்றுள்ளன. இதற்கு அடுத்த நிலையில் 9 அடி முதல் 12 அடி வரை அமைந்த ஆசிரியப்பாக்கள் நானூறு இடம்பெற்ற இலக்கியமாக நற்றிணை திகழ்கிறது. இதன் பின் 4 அடி முதல் 8 அடி வரை அமைந்த ஆசிரியப்பாக்கள் நானூறு அமைந்த தொகை இலக்கியமாகக் குறுந்தொகை விளங்குகிறது. இதனைச்சார்ந்து 3 அடிச்சிறுமையும் 6 அடிப் பெருமையும் கொண்ட அக இலக்கியமாக ஐந்நூறு பாக்களைக் கொண்ட ஐங்குறுநூறு அமைந்துள்ளது.

ஐங்குறுநூற்றிற்குப் பல தனிச் சிறப்புக்கள் உண்டு. ஒவ்வொரு திணைக்கும் நூறு நூறு பாக்களாகப் புலவர் ஐவர் பாடியிருத்தல் முதல் சிறப்பு. மருதத்திணை குறித்த நூறு பாக்களைக் கொண்ட முதல் நூறாகிய மருதம் நூற்றினைப் பாடிய புலவர் ஓரம்போகியார் ஆவார். இவர் அகநானூற்றில் ஒரு பாடலையும் (286), நற்றிணையில் இரு பாடல்களையும் (20, 360), குறுந்தொகையில் ஐந்து பாடல்களையும் புறநானூற்றில் ஒரு பாடலையும் (284) யாத்துள்ளார். ஐங்குறுநூற்றின் இரண்டாம் பகுதியாகிய நெய்தல் நூற்றினை யாத்தவர் அம்மூவனார். இவர் பாடிய இருபத்தேழு பாடல்கள் ஏனைய தொகை இலக்கியங்களில் காணப்படுகின்றன. [அகம். 10, 35,140, 280, 370, 390; குறுந். 49, 125, 163, 303, 306, 318, 327,

340, 351, 397, 401; நற். *4, 35, 76, 138, 275, 307, 315, 327, 395, 397*]. குறிஞ்சித்திணை குறித்த நூறு பாக்களை இயற்றியவர் கபிலர். சங்கப்புலவர்களில் மிகுதியாகப் பாடியசிறப்பு இப்பெரும்புலவர்க்கு உண்டு. இத்திணையினைப் பாடுவதில் இவர் துறைபோகியவர். இவர் பாடியவை *235* பாடல்கள். பரிபாடலைத் தவிர ஏனைய தொகை இலக்கியங்களில் இவர் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

பாலை நூற்றினைப் பாடியவர் ஓதலாந்தையார். இவர் குறுந்தொகையில் மூன்று பாடல்கள் வரைந்துள்ளார் *(12, 21, 329)*. ஐங்குறுநூற்றின் ஐந்தாம் பகுதியாகிய முல்லை நூற்றின் ஆசிரியர் பேயனார் ஆவர். இவர் பாடல்கள் நான்கு குறுந்தொகையில் இடம்பெற்றன *(233, 339, 359, 400)*.

சேரவேந்தன் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையின் ஆதரவில் சேர நாட்டவராகிய புலத்துறை முற்றிய கூடலூர்கிழார் ஐந்து நூறுகளையும் ஒருங்கிணைத்து ஒரு பெரும் இலக்கியமாகத் தொகுத்துள்ளார். இவ்வேந்தனைப் பற்றிய இவர் பாடல் புறநானூற்றில் இடம்பெற்றுள்ளது (229). ஐங்குறுநூற்றினைச் சேரநாட்டுச் செந்தமிழ் இலக்கியம் என்று கருதுவோரும் உளர்.

2. ஐங்குறுநூற்றின் அமைப்பியல்

ஐங்குறுநூறு கலித்தொகையினைப் போல ஐவர் பாடிய ஐந்திணைப் பாடல்களின் தொகுப்பு. ஒவ்வொரு நூறும் ஒரு நூலாகக் கருதுவதற்கு உரியது. எனவே, தமிழில் தோன்றிய முதல் சதக இலக்கியமாக ஐங்குறுநூற்றின் ஒவ்வொரு நூறும் விளங்குகிறது எனலாம். ஐங்குறுநூற்றின் காலம் கி.பி. முதல் நூற்றாண்டாகும். கூடக்குறைய இதே காலப் பகுதியில் வடமொழியில் தோன்றிய அவதான சதகம் அம்மொழியின் முதல் சதக இலக்கியமாக எண்ணப்பெறுகிறது.

ஐங்குறுநூற்றின் ஒவ்வொரு நூறும் பத்துப் பாக்களின் பத்துத் தொகுதியாகப் பாடப் பெற்றுள்ளது. எடுத்துக்காட்டாக, வேட்கைப் பத்து, வேழப்பத்து என வருவன முதலாகத் தேர்வியங் கொண்ட பத்து, வரவுச் சிறப்புரைத்த பத்து முடிய அமைந்துள்ள பகுதிகளைக் குறிப்பிடலாம். ஒரு பொருள் குறித்துப் பத்துப் பத்தாகப் பாடும் மரபு பதிற்றுப்பத்திலும் திருக்குறளிலும் காணப்படுகிறது. இப்பாடல் மரபு திருமுறைகளிலும், பிள்ளைத்தமிழ் உள்ளிட்ட சிற்றிலக்கியங்களிலும் பெரிதும் வளர்ச்சி பெற்றுள்ளமை காணலாம்.

ஐங்குறுநூற்றின் தொண்டிப்பத்து *(171-180)* அந்தாதி அமைப்பில் பாடப்பெற்றது. இவ்வாறே பதிற்றுப்பத்தில் நான்காம் பத்தும் *(31-40)* அந்தாதியாக அமைந்துள்ளது. அந்தாதியைச் சொற்பொருள் தொடர்ச்சி என்று பதிற்றுப்பத்தின் பழைய உரையாசிரியர் சுட்டியுள்ளார். காலப்போக்கில் தமிழில் நூற்றுக்கணக்கான அந்தாதிகள் தோன்றியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. அந்தாதி வடசொல் ஆயினும் வடமொழியில் அந்தாதி இலக்கியம் காணப்படவில்லை என்பது அறியத்தக்கது.

சங்கப்புலவர்கள் பாடியுள்ள பாட்டும் தொகையும் ஆகிய சங்க இலக்கியம் தமிழின் **மூல இலக்கியம்** (Original Literature), **செவ்வியல் இலக்கியம்** (Classical Literature), **மூத்த இலக்கியம்** (Ancient Literature) ஆகும். நெடுங்காலமாக ஆசிரியர் மாணவர் மரபில் பயிலப் பெற்று ஓலைச்சுவடிகளில் பேணிக்காக்கப் பெற்று வந்த சங்கத் தொகை இலக்கியங்களைச் செம்பதிப்பாகக் கொண்டு வந்த பெருமக்களில் பதிப்புவேந்தர் எனப் போற்றப்பெறும் டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர் அனைவரின் பாராட்டுக்கும் உரியராவார்.

3. உரைவேந்தர்

உ.வே.சா. பதிப்புவேந்தர் எனின், சென்ற நூற்றாண்டின் உரைவேந்தர் என்று அறிஞர் பெருமக்களால் பாராட்டப் பெறுபவர் சித்தாந்த கலாநிதி ஔவை சு.துரைசாமிப் பிள்ளை ஆவர். குறிப்புரை தவிர விரிவுரை அமையாத ஐங்குறுநூறு உள்ளிட்ட தொகை இலக்கியங்களுக்கும், மணிமேகலை, சூளாமணி, யசோதரகாவியம் உள்ளிட்ட காப்பியங்களுக்கும் ஆறு திருமுறையாக அமைந்துள்ள திருவருட்பா என்னும் ஞானஅருட் பெருங்களஞ்சியத்திற்கும் பேருரை வகுத்துப் பெரும்புகழ் படைத்தமையால் உரைவேந்தராக ஒளிவீசும் ஔவை சு.துரைசாமிப் பிள்ளை அவர்கள் முதன்முதல் உரை எழுதி வெளியிட்ட ஐங்குறுநூற்றின் உரைத்திறம் குறித்து முதலில் உற்றுநோக்குவோம்.

4. ஐங்குறுநூற்றுப் பதிப்பும் முதல் உரையும்

எட்டுத்தொகையில் ஒன்றாகிய ஐங்குறுநூற்றினைப் பல்வேறு ஓலைச்சுவடிகளை ஒப்பிட்டு நோக்கி டாக்டர் உ.வே.சா. *1903*இல் வெளியிட்டார். பின்னர் *1920, 1944, 1949, 1957*-இல்

புதுப்பிக்கப்பட்ட பதிப்புக்கள் வெளிவந்தன. 1943-இல் யாழ்ப்பாணம் தமிழறிஞர் ஜி.சதாசிவ ஐயர் புதிய உரையுடன் ஒரு பதிப்பினைக் கொணர்ந்தனர். இப்பதிப்பு 1999-இல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தால் மறுபதிப்பாக வெளியிடப்பட்டது. பேராசிரியர் ச.வையாபுரிப் பிள்ளையின் வழிகாட்டலில் அறிஞர் குழு பாட்டும் தொகையும் ஆகிய பண்டைய இலக்கியத்தினை அகர நிரற்படுத்தி, ஆசிரியர் வரிசையில் தொகுத்து, 1940-இல் சங்க இலக்கியம் என்று பெயரிட்டு இரு பெருந்தொகுதிகளாகச் சென்னை சைவ சித்தாந்த மகாசமாசம் வெளியிட்ட பின் அறிஞர்கள் பண்டைத் தமிழ்ப் பனுவல்களைக் குறிக்கும் ஒரு பொதுப்பெயராகச் சங்க இலக்கியம் என்ற சொல்லையே பயன்படுத்தி வருகின்றனர். 1938-இல் உரைவேந்தர் ஔவை சு.துரைசாமிப் பிள்ளை அவர்கள் ஐங்குறுநூறு (மருதம்) என்ற நூலினைத் தம் உரையுடன் வெளியிட்டனர். இந்நூல் இவர்தம் மாணவர் திருவத்திபுரம் திரு.கா.கோவிந்தன் அவர்கள் முயற்சியால் திருவத்திபுரம் ஸ்ரீஇலட்சுமி அச்சகத்தில் பதிப்பிக்கப் பெற்றது. புலவர் கா.கோவிந்தன், எம்.ஏ. அவர்கள் பேரறிஞர் அண்ணா 1968-இல் தமிழக முதலமைச்சராக ஆட்சி அமைத்த பொழுது பேரவைத் தலைவராகப் பொறுப்பேற்றுப் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் தம் பதிப்புரைப் பகுதியில் "யாங்கள் சேயாறு [- செய்யாறு] போர்டு உயர்கலா சாலையில் கல்வி பயின்று வரும் பொழுது, ஆசிரியர் ஔவை சு.துரைசாமிப் பிள்ளை அவர்கள் இவ்விளக்க உரையினை எழுதிவரக் கண்டோம். அவர்கள் எங்களுக்குத் திருக்குறளும் தொல்காப்பியச் சேனாவரையமும் கற்பித்து வருகையில், இடையிடையே இந்நூற் செய்யுள்களின் பொருள் நலங்களை எடுத்துக்கூறுவர். யாங்களும் கேட்டுப் பெருமகிழ்வு கொள்வோம். மேலும், யாங்கள் மதுரைத் தமிழ்ச் சங்கப் பரீட்சைக்குப் படிக்க விரும்பிய காலத்தில், அப்பரீட்சைக்காக வரையறுக்கப் பெற்ற மருதப் பகுதியின் உரையினைப் படிக்க நேர்ந்த பொழுது, இவ்வுரை எங்கட்குப் பேரின்பம் பயந்தது. இன்னோரன்ன நலங்களால் பேருக்கம் கொளுத்தப் பெற்ற யாங்கள் இதனை வெளியிடுவது தக்கதெனத் துணிந்து இவ்வெளியீட்டுச் செயலை மேற்கொள்ளத் தொடங்கினோம்" என்று குறிப்பிடுதல் (22.6.1938) நோக்கத்தக்கது. பின்னர் எஞ்சிய நான்கு நூறுகட்கும் உரைவேந்தர் எழுதிய உரையினையும் ஒருங்கிணைத்து 'ஐங்குறுநூறு மூலமும்

உரையும்' என்ற தலைப்பில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தாரால் 1957 - 1958-இல் வெளியிடப் பெற்றமை சுட்டத்தக்கது.

ஐங்குறுநூற்றின் பழைய உரை முதல் 469 பாடல்களுக்கு மட்டுமே கிடைத்துள்ளது. இடையில் சில பாடல்களுக்குரிய உரை கிடைக்கவில்லை. 129, 130-ஆம் எண்ணுள்ள பாக்கள் பிரதிகளில் காணப்படவில்லை. டாக்டர் உ.வே.சா. அவர்கள், 'இன்னார் என்று பெயர் அறியப்படாத இப்பழைய உரையாசிரியர் பேராசிரியர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர் ஆகிய உரையாசிரியர்கள் வரிசையில் வைத்து மதிக்கத்தக்கவர்' என்று தம் பதிப்புரையில் குறிப்பிட்டுள்ளார். இப்பின்புலத்துடன் ஔவை அவர்களின் மருதம் நூற்றின் உரையில் காணப்படும் சிறப்புக் கூறுகளை ஆராய்ந்து காண்போம்.

5. கடவுள் வாழ்த்து

அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, நற்றிணை ஆகிய தொகை இலக்கியங்களுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடியுள்ள பாரதம் பாடிய பெருந்தேவனார், ஐங்குறுநூற்றுக்கும் கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார். இத்தொகை இலக்கியத்தின் பாடல் அடிகளின் சிற்றெல்லை மூன்றடி என்பதால், இதன் கடவுள் வாழ்த்தினையும் அதே அமைப்பில் பாடியுள்ளார். அப்பாடல் இதுவே,

“நீல மேனி வாலிழை பாகத்து
ஒருவன் இருதாள் நிழற்கீழ்
மூவகை உலகும் முகிழ்த்தன முறையே”

'நீல நிறமான திருமேனியினையும், வாலிய இழையினையும் உடைய உமைநங்கையைத் தன் கூறாக உடைய ஒப்பற்ற சிவபெருமானுடைய இரண்டாகிய திருவடி நிழற்கீழ், மூவகை உலகும் முறையே தோன்றி நிலவுவவாயின ....' இங்ஙனம் பாடலின் நேர் பொருளை ஒரு தொடராக அமைத்துள்ளனர். “ஆகலின், யாமும் அவ்வுலகருள் முதல்வனை வணங்கி அவனது தாள் நிழல் வாழ்க்கையைப் பெறுவோமாக என்றவாறு” என்று இப்பாடலின் நோக்கப் பொருளையும் குறித்துள்ளார்.

இப்பாடல் உலகிற்கு அம்மை அப்பராக விளங்கும் முழுமுதற்கடவுள் வாழ்த்து ஆகும். தொல்பழங்காலத்துத் தமிழர்க்குரிய சிந்துவெளி நாகரிகக் காலத்தின் அளவுக்கு அம்மை

அப்பர் வழிபாடு தொன்மைமிக்கது என்பர் அகழ்வாராய்ச்சியாளர். **இயங்கும் ஆற்றலை** (Dynamic Aspect) **அம்மை** (Cosmic Mother) **என்றும் இருப்பு ஆற்றலை** (Static Aspect) **அப்பன்** (Cosmic Father) என்றும் தமிழ்ப் பெருமக்கள் பரம்பொருளை வழிபட்டுள்ளனர். ஒருவன், இருதாள் மூவகை உலகு என்று பெருந்தேவனார் எண்ணலங்காரம் தோன்றப் பாடியுள்ளார். ஔவை அவர்கள், "உலகுகள் நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தனவாயினும் மேல், கீழ், நடு என வகையால் மூன்றாய் அடங்குதலின் மூவகை உலகும் என்றார்" என்று விளக்கியுள்ளார்.

> சித்தாந்த நூலாகிய சிவஞானபோதம் முதற்சூத்திரத்தில், 'அவன், அவள், அது எனும் அவை' என வரும் தொடர்க்கு விளக்கம் தரும் வகையில், அவன் என்றும் அவள் என்றும் அது என்றும் மூவகைப் பகுப்புடைய உலகு என்று பேராசிரியர் கா.சு.பிள்ளை கூறியுள்ளார்.[1]

ஔவை அவர்கள், "இக்கூறியவாற்றால் உயிர்கள் செய்யும் வினைக்கு ஈடாக இன்ப துன்பங்களை வரைந்து கொடுப்பான் (ஆகிய) பரமன் மூவகை உலகும் தன் திருவடி நீழற்கண் முறையே முகிழ்வித்தான் (- தோற்றுவித்தான்) என்பது முடிபாம்" என்று விளக்குதல் நோக்குதற்குரியது. அறத்தகை முதல்வன் ஆகிய இறைவன், Moral Governor என்று சுட்டப்பெறுதல் எண்ணத்தக்கது. எவரும் எது வேண்டுமானாலும் செய்யலாம் என்று செயற்படுதலைத் தமிழர் நெறி உடன்படவில்லை. விலக்கத்தக்கவற்றை விலக்கியும் விதித்தனவற்றை மேற்கொண்டும் வாழ்தலைக் கண்காணிக்கும் பேராற்றல் வடிவமாக விளங்கும் முழுமுதலின் (Overseer) பார்வையினின்றும் ஒன்றும் விடுபடுவதில்லை. நல்லன புரிவோர்க்கு அருள் புரிதலை அறக்கருணை என்றும் அல்லன புரிவோர்க்கு அருள் புரிதலை மறக்கருணை என்றும் சைவ சித்தாந்தச் சாத்திரங்கள் வரையறுத்துக் கூறுதல் எண்ணத்தக்கது.

இனி, மருதம் நூற்றின் முதற்பத்தில் சில பகுதிகளுக்கு ஔவை வரைந்துள்ள உரைத்திறம் குறித்து நோக்குவோம்.

---

1. Subramania Pillai,G., Saiva Siddhanta Lectures, Annamalai University Publication, 1948, p.*1*

6. வேட்கைப் பத்து

வேட்கை என்ற சொல்லிற்கு விருப்பம் என்பது பொருள். இச்சொல்லினடியாகத் தோன்றிய வேட்டல் என்பது விரும்பி ஒழுகுதல் எனப் பொருள்படும். தலைவன் புறத்தொழுக்கம் கொண்டொழுகி நெடுநாள் கழித்துத் தலைவியை நாடி வந்தான். அவளும் ஊடல் தணிந்து இருவரும் கூடி இன்புற்றிருந்தனர். அப்பொழுது தலைவன் தோழியை நோக்கி, "யான் பரத்தையர் ஒழுக்கம் மேற்கொண்டிருந்த பொழுது நீவிர் இருவரும் யாங்ஙனம் பொழுது போக்கினீர்?" என்று வினவினான். அவனுக்குத் தோழி விடை சொல்லும் பாங்கில் அமைந்த பத்துப் பாக்களின் தொகுதிக்கு ஓரம்போகியார் வேட்கைப்பத்து என்று பெயரிட்டுள்ளார். இதனுள் முதல் ஐந்து பாடல்களும் கற்புக் காலத்துக்கு உரியவை என்றும் பின் ஐந்தும் களவுக் காலத்துக்கு உரியவை என்றும் பழைய உரையாசிரியர் விளக்கம் தந்துள்ளார். இப்பத்தும் தோழி கூற்றாக அமைந்துள்ளன. புறத்தொழுக்கம் அகத்தொழுக்கம் என்பன முறையே தலைவியைப் பிரிந்து பொதுப்பெண்டிருடன் கூடி ஒழுதலையும், பொதுப் பெண்டிரை நீத்துத் தன் உரிமை மனைவியோடு ஒழுகுதலையும் குறிக்கும்.

தலைவன் பரத்தையரோடு ஒழுகுதலைச் சங்க காலச் சமுதாயம் சார்ந்திருப்பினும், அதனைக் கொடுமை ஒழுக்கம் (தொல். பொருள். 145), அடங்கா ஒழுக்கம் (தொல். பொருள். 148) என்று தொல்காப்பியரும், போற்றா ஒழுக்கம் என்று இளங்கோ அடிகளும் (சிலம்பு. 16.81) குறித்துள்ளனர். திருவள்ளுவர் வரைவின் மகளிர் (92) என்ற அதிகாரத்தில் இதனைக் கண்டித்துள்ளார். புறநானூற்று வேந்தர் சிலரும் இதனை உடன்பட்டிலர் (புறம். 71.5 - 6; 73. 11 -14).

6.1. முதற்பாடல்

முதற்பாடலின் முதற்பகுதியைக் காண்போம்:

"வாழி ஆதன் வாழி அவினி!
நெல்பல பொலிக! பொன்பெரிது சிறக்க!
எனவேட் டோளே யாயே".

பழைய உரை

"காவற்பொருட்டு அரசன் வாழ்க; விருந்தாற்றுதற் பொருட்டு நெற்பல பொலிக; இரவலர்க்கு ஈதற் பொருட்டுப் பொன் மிக

உண்டாகுக” என யாய் இல்லறத்திற்கு வேண்டுவன விரும்பி ஒழுகியதல்லது பிறிது நினைத்திலள்”.

ஔவை உரை

“ஆதன் வாழ்க; அவன் குடியிற் பிறந்த அவினி வாழ்க; நெல் மிக்கு விளைக; பொன் மிக உண்டாகுக என்று தலைவி இல்லறமே நினைந்து ஒழுகினள்.”[2]

அவினி சேரமான்களில் ஒருவன் என்றும் ஆதன் (2) சேர மன்னர் சிலரின் குடிப்பெயர் என்றும் கூறி அகநானூற்றினையும் (216.14), புறநானூற்றினையும் (71.13) மேற்கோள் காட்டினார். வேட்டாள் வேட்டோள் என்றாதற்குத் தொல்காப்பிய விதியினையும் (தொல். சொல். 211) எடுத்துரைத்தனர். தலைவி அரசனை வாழ்த்தியதற்கும் நெல் விளைய வாழ்த்தியதற்கும் பொன் மிகுதல் வேண்டும் என்றதற்கும் பாடலில் காரணம் கூறப்படவில்லை. அந்தக் குறையினைப் பழைய உரையும் புதிய உரையும் நிறை செய்கின்றன.

ஔவை வழங்கும் உரை விளக்கம் நோக்குவோம்:

“அந்தணர், சான்றோர், அருந்தவத்தோர், அரசர் முதலாயினாரை இன்னவாறு வழிபடுக எனக் கணவன் முதலாயினார் கற்பித்தவற்றால் வழிபடுதல் கற்பாகலின் வாழி ஆதன் வாழி அவினி என்றும்; இல்லிருந்து நல்லறம் புரிவார்க்கு விருந்தோம்பல் தலையாய அறம் ஆகலின், அது செய்தற்கு நெற்பல பொலிக என்றும்; தங்கண் வந்து இரந்தார்க்குப் பொன் முதலாயின கொடுத்து இசை நடுதல் இல்வாழ்வின் பயனாதல் குறித்துப் பொன் பெரிது சிறக்க என்றும் தலைமகள் வேட்டாள் என்றாள்.”[3]

பழைய உரைக்கு ஒளி பாய்ச்சுவதாக இப்புதிய விளக்கவுரை திகழ்கின்றது. இவ்வுரைகளின் வெளிச்சத்தில் அரும் பொருள் சிலவும் நம் உள்ளத்தில் மலர்கிறது. /வாழ்க/ என்னாமல் /வாழி/ என்றது நெடுங்காலம் வாழ்க என்ற கருத்தியல் என்பதற்குத் தொல்காப்பியம் இடம் தருகின்றது (தொல். எழுத்து. 211). பாட்டுடைத் தலைவன் ஆதன் அவினி; கிளவித்தலைவன் ஊரன். தலைவியை உயிர்த்தோழி /யாய்/ என்றதற்கு அவளிடம் கொண்ட

2. ஔவை துரைசாமிப் பிள்ளை, சு., ஐங்குறுநூறு [மருதம்] மூலமும் உரையும், திருவத்திபுரம், 1938. ப.8-9

3. அதே நூல். ப. 10

அளவற்ற அன்பும் பாசமுமே காரணம். /யாய்/ என்பதை செல்லப் பெயராகவும் (Term of Endearment) எடுத்துக்கொள்ளலாம் (தொல். பொருள். 242).

நெல்லும் பொன்னும்

சங்க காலத்து விளங்கிய நிலமானியச் சமுதாயத்தில் [Agrarian Society] நாட்டின் பொருளாதாரத்தைத் தீர்மானித்தவை நெல்லும் பொன்னுமே ஆகும். (காண்க: புறம். 384. 11) மருதநிலத்துக்குரிய நெல்லும் அந்த நெல்லின் நிறத்துடன் பொலிவுறும் பொன்னும் இடைக்காலத் தமிழகத்திலும் பெரிதும் போற்றப் பெற்றன என்பதற்குப் பின்வரும் திருமுறைப் பாடற் பகுதிகள் சான்று பகர்வன:-

1. விளை **செந்நெல்** துன்னி வளர் செம்பொன்
   எங்கும் நிகழ. **திருமுறை** 2. 85. 11.

2. **அன்னம் பாலிக்கும்** தில்லைச் சிற்றம்பலம்
   பொன்னம் பாலிக்கும். **திருமுறை**. 5.1.1.

3. அ. குண்டை யூர்ச் சில **நெல்லுப்** பெற்றேன்.
   திருமுறை. 7.20.1

   ஆ. பொன்னும் மெய்ப் பொருளும் தருவானை.
   திருமுறை. 7.59.1.

எனவே, சங்க காலத்துச் சமுதாய மதிப்பீடு திருமுறைகளின் காலத்திலும் தொடர்ந்துள்ளமை புலனாகும். இன்றளவும் நெல்லும் பொன்னுமே மேம்பட்டனவாக மதிக்கப் பெறுகின்றன.[4]

இனி, இப்பாடலின் இரண்டாம் பகுதி தோழியும் ஆயத்தாரும் விரும்பி ஒழுகிய திறத்தினைப் புலப்படுத்துகிறது. காண்க:

"யாமே,
நனைய காஞ்சிச் சினைய சிறுமீன்
யாணர் ஊரன் வாழ்க
பாணனும் வாழ்க எனவேட் டேமே".

---

4. கந்தசாமி, சோ.ந., ஐங்குறுநூறு ஆராய்ச்சித் தெளிவுரை, மெய்யப்பன் பதிப்பகம், சென்னை, 2014, ப. 10-11

பழைய உரை

"நீ ஒழுகிய ஒழுக்கத்தால் நினக்கும் நின்னொழுக்கத்திற்குத் துணையாகிய பாணனுக்கும் தீங்கு வரும் என்றஞ்சி, யாணர் ஊரன் வாழ்க, பாணனும் வாழ்க" என விரும்பினேம் யாங்கள் ......"

"...... தோழி யாங்கள் (- யாமே) என உளப்படுத்தது ஆயத்தாரை நோக்கி எனக் கொள்க. பூவும் புலாலும் ஒக்க விளையும் ஊரன் என்றது, குலமகளிரைப் போலப் பொது மகளிரையும் ஒப்பக் கொண்டொழுகுவான் என்பதாம் .....".

ஔவை உரை

"....... யாங்கள் பூக்களை நிறைய உடைய காஞ்சியும், சினைகளையுடைய சிறுமீன்களும் உடைய ஊரன் வாழ்க; அவற்கு வாயிலாகும் பாண்மகனும் வாழ்க என்று விரும்பி உறைந்தேம்."[5]

"......... காஞ்சியின் பூவும் மீனின் சினையும் (- முட்டையும்) ஒப்ப விளையும் ஊரன் என்றதனால் குலமகளிரையும் பொது மகளிரையும் ஒப்பக் கருதுகின்றான் என உள்ளுறை உவமம் கொள்ளப்படும்."

பரத்தையர் ஒழுக்கத்தில் தலைவனை ஈடுபடுத்துபவன் பாணன். எனவே, கொடுமை ஒழுக்கத்தில் ஈடுபட்ட தலைவனும், அவனுக்குத் துணைபோகிய பாணனும் தீங்கு அணுகாதபடி நலமுடன் விளங்க வேண்டும் என்ற உயரிய வேட்கையினை உடையவளாகத் தோழி விளங்கினாள் என்பது புலனாகும். ஊரன் - மருதநிலத்துத் தலைவன், வசதி படைத்தவன். ஆதலால், இன்பம் நாடிப் பெரும் பொருள் வழங்கும் இயல்பினனாதல் சுட்டத்தக்கது.

உள்ளுறை உவமம்

தெய்வம் நீங்கலாக ஏனைய கருப்பொருள்களின் வழியே வெளிப்படுவது உள்ளுறை ஆகும். வெளிப்படையாகக் கூறப்படும் உவமத்தினைக் கொண்டு வெளிப்படையாகக் கூறப்படாத உவமிக்கப்படும் பொருள் ஒத்து முடியும் வகையில் அமைவது உள்ளுறை. (There should be regularity of correspondence

---

5. ஐங்குறுநூறு [மருதம்] மூலமும் உரையும், ப. 9,11

between the objects of comparison and the objects compared). உவமை தெற்றெனப் புலப்பட்டும் உவமிக்கப்படும் பொருள் வெளிப்படாமல் உள்ளே உறைந்தும் கிடத்தல் உள்ளுறையின் இயல்பு. அகமாந்தர்தம் பண்பட்ட உரையாடலில் தலைவனைப் புண்படுத்தாமல் பண்படுத்தும் பாங்கில் இத்தகைய உள்ளுறைப் பொருள் அமைந்திருக்கும். இப்பாடலின் உள்ளுறையினைப் பின்வருமாறு காட்டலாம்.

கருப்பொருள்	உள்ளுறை
1. மணம் கமழும் காஞ்சிமலர்	தலைவி
2. புலால் நாறும் சிறுமீன்கள் இவை வெளிப்படையாகக் கூறப்பட்டவை.	பரத்தை இவர்கள் முறையே காஞ்சிமலர், சிறுமீன்கள் என்ற குறியீடுகளால் சுட்டப்பட்டவர்கள்.

உள்ளுறைக்கு உரிய இலக்கணத்தினைத் தொல்காப்பியர் தெளிவாகக் கூறியுள்ளார் [தொல். பொருள். 50, 51. இளம்.] இத்தகைய விழுமிய பண்பாட்டுப் புலப்பாட்டு முறைமை செந்தமிழ்க்கே சிறப்புரிமை வாய்ந்தது என்பதும் வேற்று மொழியில் காணப்படவில்லை என்பதும் சுட்டத்தக்கவை."[6]

6.2. இரண்டாம் பாடல்

ஓரம்போகியார் ஒவ்வொரு பாடலையும் இரு கூறுகளாக அமைத்திருக்கும் பாங்கு நோக்குதற்குரியது. முதற்கூறு தலைவியின் விருப்பத்தையும் இரண்டாம் கூறு தோழியின் விருப்பத்தையும் தலைவனுக்குத் தோழி எடுத்துரைப்பனவாக அமைந்துள்ளன. இந்த அமைப்பொழுங்கு ஓரம்போகியாரின் படைப்பாற்றலுக்கும் அழகுணர்வுக்கும் சான்று பகர்வதாக விளங்குகிறது.

தலைவன் பரத்தையர் ஒழுக்கத்தில் ஈடுபட்டிருந்த பொழுது, தலைவி என்ன நினைத்திருந்தாள் என்பதைப் புலப்படுத்துகிறது:-

"வாழி ஆதன் வாழி அவினி!
விளைக வயலே வருக இரவலர்
எனவேட் டோளே யாயே ...."

6. ஐங்குறுநூறு ஆராய்ச்சித் தெளிவுரை, ப. 11-12

பழைய உரை

"தலைவி இல்லறமே நினைந்து ஒழுகினாள்."

ஔவை உரை

"ஆதன் அவினி வாழ்க என்றும் வயல்மிக்கு விளைக என்றும், இரவலர் பலரும் வருக என்றும் தலைமகள் இல்லறத்திற்கு வேண்டுவனவே நினைந்து ஒழுகினாளேயன்றி, பிறிதொன்றும் நினைத்திலள் ...."

தலைவி தலைவனின் கொடுமை ஒழுக்கத்தினை மறப்பதற்கு உலக நாட்டம் உடையவளாய் அறச்சிந்தனையுடன் காலம் கழித்தனள்.

> "அறமும் இன்பமும் எய்துதற்குரிய பொருள்வருவாயாகலின், விளைக வயலே என்றும், புகழ் வளர்ச்சிக்கு உரிய ஈகைக்கு இடமாதலின், வருக இரவலர் என்றும் வேட்டாள். இது விருந்து புறந்தருதலும் சுற்றம் தழாலும் இசை (புகழ்) வளர்த்தலும் கூறிற்று."[7]

இவ்வுரைப் பகுதி மதுரை மாநகரில் மாதரி இல்லத்தில் காப்பியத் தலைவி கண்ணகி நல்லாள் தன் கையினால் சமைத்த உணவினைக் கணவன் கோவலனுக்குப் படைத்து, வெற்றிலைச் சுருளும் அடைக்காயும் ஈத்தபின் பல்வகைக் கடமைகளையும் ஆற்றாமைக்கு உள்ளகம் வெதும்பிக் கோவலன் 'எழுகென எழுந்தாய்! என் செய்தனை!' எனப் புலம்பிய பொழுது,

> **"அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்**
> **துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்**
> **விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை ...."**
>
> (சிலம்பு. 16. 71 -73)

என்று பேசிய கண்ணகியின் கூற்றினை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளமை பாராட்டத்தக்கது. ஔவை அவர்களின் பரந்துபட்ட புலமைத்திறத்திற்கு இவ்வுரைப் பகுதியும் ஒரு சான்றாகிறது. இனி, இப்பாடலின் இரண்டாம் கூறினை நோக்குவோம்.

> **"யாமே,**
> **பல்இதழ் நீலமொடு நெய்தல் நிகர்க்கும்**

---

7. ஐங்குறுநூறு [மருதம்] மூலமும் உரையும், ப. 14

தண்துறை ஊரன் கேண்மை
வழிவழிச் சிறக்க எனவேட் டேமே".

இப்பகுதி, தலைவன் பிரிந்துரை காலத்துத் தலைவியின் நலத்தைப் பேணும் பொறுப்பினை மேற்கொண்டிருந்த தோழி விரும்பி ஒழுகிய திறத்தினை அவள் கூற்றாக வெளிப்படுத்துகிறது.

பழைய உரை

"யாங்கள் நின் காதல் அவள் மேல் சுருங்குகின்ற திறம் நோக்கி, நின்கேண்மை வழிவழிச் சிறக்க"

என விரும்பினோம் என்றவாறு.

"சிறப்புடைய கருங்குவளையுடனே சிறப்பில்லாத நெய்தல் நிகர்க்கும் ஊரன் என்றது, குலமகளிருடனே பொது மகளிர் இகலும் ஊரன் என்றவாறு."[8]

ஔவை உரை

"யாங்கள் பலவாகிய இதழ்களை உடைய கருங்குவளையுடன் நெய்தல்கள் ஒப்ப மலரும் தண்ணிய துறையினை உடைய ஊரனது நட்புப் பிறப்புத்தோறும் இடையறாது சிறக்குமாக என விரும்பி ஒழுகினேம் என்றவாறு."[9]

"தலைமகன் புறத்தொழுக்கம் உடையனாகலின், அவன் காதல் பொதுமகளிர்பால் செல்லுமுகத்தால் தலைமகள்பால் சுருங்குதல் கண்டு, அது நிகழாமை குறித்து, ஊரன் கேண்மை வழிவழிச் சிறக்க எனத் தோழி வேட்டாள். உறுகண் ஓம்பல் தன் இயல்பு ஆகலின்" [தொல்.பொருள். 239] என்பதனால், தோழி உரன் உடையளாய் அவன் கேண்மை சிறக்க வேண்டுதல் அமையும் என்க."[10]

வழிவழிச் சிறக்க - ஊரனது நட்புப் பிறப்புத்தோறும் இடையறாது சிறத்தல் வேண்டும் என்ற கருத்து சங்க காலத்துச் சமுதாயப் பண்பினைப் புலப்படுத்துதற்குப் பின்வரும் பாடற்பகுதிகள் சான்று பகர்வன:

---

8. ஐங்குறுநூறு [மருதம்] மூலமும் உரையும், ப. 13

9. அதே நூல்

10. அதே நூல், ப. 14

1. இம்மை மாறி மறுமை யாயினும்
நீ ஆகியர் என் கணவனை;
யான் ஆகியர் நின்நெஞ்சு நேர்பவளே. (குறு. 49. 3-6)

2. சாதல் அஞ்சேன்; அஞ்சுவன், சாவின்
பிறப்புப் பிறிது ஆகுவது ஆயின்
மறக்குவென்கொல் என் காதலன் எனவே (நற். 397. 7-9)

3. இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்
கண்நிறை நீர்கொண்டனள் (திருக். 1315)

/வழிவழிச் சிறக்க/ என்ற தொடர் சங்க காலச் சான்றோர் வழக்காற்றில் வந்துள்ளமைக்குப் பின்வருவன சான்றுகள் ஆகும்.

1. அழிவில் உள்ளம் வழிவழிச் சிறப்ப .... (அகம். 47.1)

2. வழிவழிச் சிறக்க நின் வலம்படு கொற்றம். (மது. 194)

3. வைகல் தோறும் வழிவழிச் சிறப்ப. (மது. 324)

இப்பாடலில் பொதிந்துள்ள உள்ளுறைப் பொருளை நோக்குவோம்.[11]

கருப்பொருள்		**உள்ளுறை**
1. கருங்குவளை மலர் [- சிறப்புடையது]	-	தலைவி
2. நெய்தல் மலர் [- சிறப்பில்லாதது]	-	இற்பரத்தை [- காதல் பரத்தை]

தலைவன் பார்வையில் குவளை மலரை நிகர்க்கும் நெய்தல் மலர் என்றது தலைவியை நிகர்த்தவள் இற்பரத்தை [- காதற் பரத்தை] என்பதாகும். தொல்காப்பியத்தில்,

1. தங்கிய ஒழுக்கத்துக் கிழவனை வணங்கி எங்கையர்க்கு உரைஎன இரத்தற் கண்ணும்- **[தொல். பொருள். 145]**

[எங்கையர் - எம்தங்கையர் எனத் தலைவி, தலைவனின் பரத்தையரைக் குறித்தனள்.]

2. மனையோள் ஒத்தலின் தன்னோர் அன்னோர்
மிகைஎனக் குறித்த கொள்கைக் கண்ணும் -
[தொல். பொருள். 149]

11. ஐங்குறுநூறு ஆராய்ச்சித் தெளிவுரை, ப. 12

என வரும் பகுதிகளால், தலைவன் தன் உரிமை மனைவியாகிய தலைவிக்கும், காதற் பரத்தைக்கும் ஒத்த மதிப்பு வழங்கியவன் என்பது புலனாகும்.

6.3. மூன்றாம் பாடல்

இப்பாடலும் முன்னைப் பாடல்களைப் போலவே முற்பகுதி தலைவியோடும் பிற்பகுதி தோழியோடும் தொடர்புடையது. முற்பகுதியை முதலிற் காண்போம்.

"வாழி ஆதன் வாழி அவினி!
பால்பல ஊறுக பகடுபல சிறக்க!
எனவேட் டோளே யாயே ...."

பழைய உரை

"தலைவி இல்லறமே நினைந்தொழுகினாள் ...."

ஔவை உரை

"ஆதன் அவினி வாழ்க என்றும் ஆனிரைகள் பால்வளம் சுரக்க என்றும், எருமைகள் பல மிகுக என்றும் தலைவி இல்லறமே நினைந்தொழுகினாள் ....

சிறிதாகிய நீரைச் சின்னீர் என்பது போல, 'பால்பல' (பாலின் பெருக்கம்) எனப்பட்டது. பகடு - எருமை ....

பொருளும் உழவுத் தொழிலும் மேம்படுதற்குப் பாலும் பகடும் வேண்டினாள். பாலின் பெருக்கம் விருந்தோம்பற்கும் பகடு அழிவில் செல்வத்து ஆக்கத்திற்கும் என்க."[12]

விளக்கக் குறிப்பு

"தலைவி இல்லறமே நினைந்து ஒழுகினாள்" என்பதற்கு விளக்கம் அளிப்பதாக ஔவையின் உரை விளங்குகிறது. பண்டைய வேளாண்மைச் சமுதாயத்திற்குப் பால்வளம், கால்நடை வளம் இன்றியமையாத தேவைகள் ஆகும். /மாடு/ என்ற சொல்லிற்குச் செல்வம் என்ற பொருளும் உண்டு. மருதநிலத்தில் உழவுத் தொழிலுக்குப் பயன்படும் எருமை சிறப்புறுதல் வேண்டும் என்ற பொருளாதாரச் சிந்தனை வாய்ந்தவளாகத் தலைவி படைக்கப்பட்டிருக்கிறாள். /பகடு/ என்ற பல பொருள் ஒரு சொல் எருதினையும் எருமையினையும் குறிக்கும். எனினும், முல்லை நிலத்துக்

12. ஐங்குறுநூறு [மருதம்] மூலமும் உரையும், ப. 15-16

கொல்லையில் உழுவதற்கு எருதும், மருதக் கழனிகளில் உழுவதற்கு எருமையும் உரியன என்பதால் இங்குப் /பகடு/ என்ற சொல் எருமைக்கடாவினைக் குறித்தது [தொல். பொருள். 76]. மருதவயலில் நெற்பயிரினை நடுதல் என்பதற்கு மாறாக நெல்லை விதைத்தனர் என்ற செய்தி கருதத்தக்கது."[13]

இனி, இப்பாடலின் பிறபகுதியைக் காண்போம்.

"யாமே, வித்திய உழவர் நெல்லொடு பெயரும்
பூக்கஞல் ஊரன் தன்மனை
வாழ்க்கை பொலிக எனவேட் டேமே".

பழைய உரை

"....... அவன் பொதுமனையில் வாழ்க்கை ஒழிந்து தன்மனையிலே வாழ்வானாக எனவேட்டேம் யாங்கள் .... மேல் விளைதற்கு வித்திய உழவர் முன்பு விளைந்த செறுவின் நெல்லொடு பெயரும் என்றது. பின்வரும் பரத்தையர்க்கு வருவாய் பண்ணி அக்காலத்து உளராகிய பரத்தையரோடு இன்பம் நுகர்வான் என்பதாம்."[14]

இங்ஙனம் உள்ளுறைப் பொருள் கண்டனர்.

ஔவை உரை

"......... யாங்கள் பின்விளைவு வேண்டி விதைத்தலைச் செய்த உழவர், முன்னே விளைந்து முதிர்ந்துள்ள நெல்லைக் கொண்டு போதரும் பூக்கள் நிறைந்த ஊரன், புறத்தொழுக்கம் தவிர்ந்து, தன்மனையிலே இருந்து விளங்குவானாக என விரும்பி ஒழுகி வந்தோம்.

.... வித்திய சென்ற உழவர் நெல்லொடு பெயர்வர் என்னும் இக்கருத்து,

"அரிகால் மாறிய அங்கண் அகல்வயல்
மறுகால் உழுத ஈரச் செறுவின்
வித்தொடு சென்ற வட்டி பற்பல
மீனொடு பெயரும் யாணர் ஊர!" -[நற். 210]

என்பதனோடு ஒத்து நிற்றல் காண்க."[15]

---

13. ஐங்குறுநூறு ஆராய்ச்சித் தெளிவுரை, ப. 13
14. ஐங்குறுநூறு [மருதம்] மூலமும் உரையும், ப. 15
15. அதே நூல்

விளக்கம்

கழனியில் நெல் விதைத்த உழவுத் தொழிலாளி கூலி நெல்லொடு பெயர்ந்து செல்வதற்கு இடமாகிய பூக்கள் நெருங்கிய மருதநிலத்துத் தலைவனின் மனைவாழ்க்கை பொலிவு பெறுக என்று யாம் விரும்பிருந்தோம்........

உழவுத் தொழிலாளர்க்கு ஊதியமாக நெல்லினை அளந்து கொடுக்கும் வழக்கத்தினைத் தோழியின் உரையில் காணலாம். கூலம் - கூலி, மனைவாழ்க்கை - இல்வாழ்க்கை [திருக்குறள் அதிகாரம். 5].

உள்ளுறை உவமம்

"வயலில் விதைக்கும் தொழிலைச் செய்த உழவர் நெல் விளைந்து பெரும் பயன் தருவதில் கருத்தின்றி விதைத்த ஒரு நாள் கூலியை மட்டும் பெற்றுச் செல்லுவர். தலைவன் உழவனைப் போன்றவன். வயலில் பெரும் விளைவினை எதிர்பாராத உழவன் ஒரு நாள் கூலியைப் பெற்று மகிழ்தல் போல, தலைவன் தலைவியொடு கூடி வாழ்நாள் பெரும் பயனைப் பெறாதவனாய், ஒரு நாள் இன்பத்தைக் கருதிப் பரத்தைக்குச் செலுத்த வேண்டிய பொருளைக் கொண்டு போகிறான் என்பது இப்பாடற் பிற்பகுதியில் பொதிந்துள்ள உள்ளுறைப் பொருள் ஆகும். இவ்வாறு தோழி தலைவனின் புறத்தொழுக்கத்தினை இடித்துக் கூறினாள்."[16]

6.4. நான்காம் பாடல்

தலைவி விரும்பி ஒழுகிய திறத்தினைக் குறிக்கும் இப்பாடலின் முற்பகுதி இதுவே:

"வாழி ஆதன் வாழி அவினி!
பகைவர் புல்லார்க பார்ப்பார் ஓதுக
எனவேட் டோளே யாயே ...."

என ஒவ்வொரு பாடலின் தொடக்கத்திலும் நாட்டுவாழ்த்துப் பாடுதல் போல அரசவாழ்த்தினைப் பாடிவிட்ட பின்னரே தலைவி பேசுகிறாள் என்பது நோக்கத்தக்கது.

பழைய உரை

"இவள் இல்லறமே விரும்பி ஒழுகினாள் ...."[17]

---

16. ஐங்குறுநூறு ஆராய்ச்சித் தெளிவுரை, ப. 13

17. ஐங்குறுநூறு [மருதம்] மூலமும் உரையும், ப. 17

ஔவை உரை

"ஆதனவினி வாழ்க என்றும், பகைவர்தம் பெருமிதம் இழந்து புல்லரிசிச் சோறு உண்க என்றும் பார்ப்பார் மறை ஓதுக என்றும் தலைமகள் இல்லறத்திற்கு வேண்டுவனவே நினைந்து ஒழுகினாள் .... புல் – புல்லரிசி. இக்கருத்தே கொண்டு சேனாவரையரும், "புல்தின்றல் உயர்திணைக்கு இயைபின்று எனப்படாது [தொல். சொல். 173. உரை] என்றார். பார்ப்பார் வேதியர்: இவர் நன்றும் தீதும் ஆராய்ந்து நோக்கி உறுதி கூறுவார் என்பர் பேராசிரியர் [தொல். பொருள். 501. உரை].

.... உலகு புரக்கும் வேந்தனை வாழ்த்தும் விருப்பினோர், அவன் பகைவர் கேடும் ஒருவாற்றான் அவற்கு ஆக்கமாம் என்று கருதுபவாகலின், பகைவர் புல்லார்க என்று கூறப்பட்டது. "குணமுதல் தோன்றிய ஆரிருள் மதியின், தேய்வன கெடுகநின் தெவ்வர் ஆக்கம்" [மதுரை. 195-6] என்று பிறரும் கூறுதல் காண்க."[18]

விளக்கக் குறிப்பு

ஆதன் அவினியின் பகைவர்கள் போரில் புறங்காட்டி ஓடி, காடுகளில் ஒளிந்துகொண்டு அங்குக் கிடைக்கும் புல்லரிசியை உண்ணுக என்று தலைவி விரும்பியிருந்தாள் என்பதால் அவளது நாட்டுப்பற்று வெளிப்படக் காணலாம்.

எயினக்குடி பெண்கள் புல்லரிசியைத் திரட்டிய செய்தி, "நுண்புல் அடக்கிய வெண்பல் எயிற்றியர்" [பெரும். 94] எனவரும் பகுதியால் அறியப்படும். புறநானூற்றின் பழைய உரையாசிரியர், "நெல்லலா உணவெல்லாம் புல் என்றல் மரபு" என்று வரைந்துள்ளனர் (புறம். 248). "என்னை புற்கை உண்டும் பெருந்தோளன்" [புறம். 84.1] என்ற பகுதி காணத்தக்கது.

பார்ப்பார் – Seer என்ற பொருண்மைத்து. சிவஞான சித்தியாரில், "பரமே பார்த்திருப்பார் பதார்த்தங்கள் பாரார்" எனவரும் பகுதி இயைபு கருதி இவண் எண்ணத்தக்கது. பார்ப்பார் - நூல் பார்ப்பார் ஆகிய அந்தணர். தமக்குரிய மறைகளை ஓதுவதால் நாடு நலம்பெறும் என்பது ஒரு நம்பிக்கை. சங்க காலத்தே வடமொழியாளர் தமிழக மக்களுடன் கலந்துவிட்டனர் என்பதற்கு இக்குறிப்பும் ஒரு சான்று.

இனி, இப்பாடலின் பிற்பகுதியை நோக்குவோம்:

18. ஐங்குறுநூறு [மருதம்] மூலமும் உரையும், ப. 18

"யாமே, பூத்த கரும்பின் காய்த்த நெல்லின்
கழனி ஊரன் மார்பு
பழனம் ஆகற்க எனவேட் டேமே".

இப்பகுதி, தோழி விரும்பி ஒழுகிய திறத்தினைப் புலப்படுத்துகிறது.

பழைய உரை

"இவள் இல்லறமே விரும்பி ஒழுகினாள்; அவன் மார்பு ஊரவர்க்கெல்லாம் பொதுவாகிய பழனம் போலாது இவட்கே உரித்தாக என விரும்பினேம் யாங்கள் என்றவாறு.

பூத்துப் பயன்படாக் கரும்பினையும் காய்த்துப் பயன்படும் நெல்லினையும் உடைய ஊரன் என்றது, ஈன்று பயன்படாப் பொது மகளிரையும் மகப்பயந்து பயன்படும் குலமகளிரையும் ஒப்ப நினைப்பான் என்றவாறு."[19]

ஔவை உரை

"........ யாங்கள், பூத்து விளங்கும் கரும்பும், விளைந்து கிடக்கும் நெல்லும் உடைய ஊரனது மார்பு எல்லார்க்கும் உரித்தாகிய பழனம் ஆகாது ஒழிக என வேட்டொழுகினேம் என்றவாறு ....

இனி, பூத்துப் பயன்படாக் கரும்பினையும் காய்த்துப் பயன்படும் நெல்லினையும் உடைய ஊரன் என்றது மகப்பயந்து பயன்படும் குலமகளிரையும், அஃதில்லாத பொது மகளிரையும் ஒப்பக் கருதி ஒழுகுவான் என்றாளாம். பொது மகளிர் ஈன்று பயன்படா இயல்பினர் என்பதனை,

"அவரும், பைந்தொடி மகளிரொடு சிறுவர்ப் பயந்து
நன்றி சான்ற கற்போடு
எம்பா டாதல் அதனினும் அரிதே" - (நற். 330)

எனவரும் சான்றோர் கூற்றான் அறிக."[20]

விளக்கக் குறிப்பு

பூத்த கரும்பு

"விரிபூங் கரும்பின் கழனி ..."- (பதிற். 13–13)

---

19. ஐங்குறுநூறு [மருதம்] மூலமும் உரையும், ப. 17

20. அதே நூல் ப. 17 - 19

காய்த்த நெல்

"காய்நெல் லறுத்துக் கவளம் கொளினே" – (புறம். 184.1)

[- காய்த்த நெல்லை யறுத்துக் கவளமாகக் கொள்ளின் – பழைய உரை]

கழனி ஊரன் மார்பு

"கழனி ஊரன் மார்பு பலர்க்கு
இழைநெகிழ் செல்லல் ஆக்கும் அன்னாய்!" (ஐங்.25. 3-4)

கழனி - வயல். பழனம் - இங்குப் பொது நிலத்தைக் குறித்தது. உரையாசிரியர்கள் இருவராலும் சுட்டப்பட்ட உள்ளுறை உவமத்தினை இவ்வாறு அமைத்துக்காட்டுதல் சாலும்.

	கருப்பொருள்	உள்ளுறை
1.	பூத்துப் பயன்படாத கரும்பு	-மகவு ஈன்று பயன்படாப் பொதுப் பெண்டிர்
2.	காய்த்துப் பயன்படும் நெல்	-மகவு ஈன்று பயன்படும் குலமகளிர்
3.	கழனி	-தலைவன் மார்பு

தலைவனின் கழனியில் கரும்பும் நெல்லும் ஒருங்கே இருத்தல் போல, இவன் பொது மகளிரையும் குல மகளிரையும் ஒப்ப நினைப்பவன் என்று உள்ளுறைப் பொருளைப் பழைய உரையாசிரியர் குறித்துள்ளார். ஆனால், அவனுடைய மார்பு எல்லார்க்கும் பயன்படும் பொது நிலம்போல் ஆகிவிடக் கூடாது என்பது தோழியின் வேணவா ஆகும். அவன் மார்பு தனக்கு உரிமை பூண்ட குல மகளிரைத் தவிரப் பொதுப் பெண்டிரால் தழுவப் பெறுதல் கூடாது என்பது கருத்து.[21]

6.5. ஐந்தாம் பாடல்

தலைவன் புறத்தொழுக்கம் பூண்டிருந்த பொழுது, தலைவி எவ்வாறு இருந்தனள் என்பதைப் புலப்படுத்தும் இப்பாடலின் முற்பகுதியை நோக்குவோம்.

---

21. ஐங்குறுநூறு ஆராய்ச்சித் தெளிவுரை, ப. 14

"வாழி ஆதன் வாழி அவினி
பசிஇல் லாகுக பிணிசேண் நீங்குக
எனவேட் டோளே யாயே ...."

பழைய உரை

'இவள் இல்லறமே விரும்பி ஒழுகினாள்.'

ஔவை உரை

"ஆதன் அவினி வாழ்க என்றும், பசி இல்லை ஆகுக என்றும், பிணி நெடிது நீங்குக என்றும் தலைமகள் இல்லறத்திற்கு உரியனவே நினைந் தொழுகினாள்............

பசியின் உண்மையும், இன்மையும் காரணம் பற்றித் தோன்றுவன ஆகலின் ஆக்கம் கூறினார். சேய்மை இடம்.... பசியும் பிணியும் நல்வாழ்வின்சீர் குலைப்பன ஆயினும், பிணிக்குரிய காரணங்களுள் பசி சிறந்தமையின் பசி இல்லாகுக என்றும், பசியின்றியும் சிறுபான்மை பிணியுண்டாதல் உண்மையின் பிணி சேண் நீங்குக என்றும் வேட்டாள். பிணி போலாது, எல்லா நன்மையும் கெடுக்கும் இயல்பிற்றாகலின் பசியை முற்கூறினாள் என்க."[22]

விளக்கக் குறிப்பு

திருவள்ளுவப் பெருந்தகை,

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா(து) இயல்வது நாடு. ***(734)***

என்று நலம்சார் நாட்டிற்கு (Welfare State) இலக்கணம் கூறினார். அவர் வழியில் வந்த இளங்கோ அடிகள்,

"பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி"- (சிலம்பு. 5. 72 – 73)

என்று இயம்புதல் எண்ணத்தக்கது. பௌத்தப் பெருங்காப்பியம் பாடிய சாத்தனார், சிலப்பதிகார அடிகளைச் சொல் தவறாமல்,

"பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி"- (மணி. 1. 70 – 71)

என்று எடுத்தாண்டுள்ளமை நோக்கத்தக்கது.

---

22. ஐங்குறுநூறு [மருதம்] மூலமும் உரையும், ப. 17-18

ஓரம்போகியார், "பசிஇல்லாகுக பிணி சேண் நீங்குக" என்று பாடுதற்கு முன்பே, "பகைவர் புல் ஆர்க" (4.27) எனப் பாடியிருப்பதால் பகை, பசி, பிணி இல்லாத நாடே நல்ல நாடு என்பதைத் தெளிவுறுத்தியுள்ளமை போதரும்.

தலைவன் பிரிந்துறையும் காலத்துத் தலைவியின் உசாத்துணை ஆகிய தோழி எதனை விரும்பி ஒழுகினாள் என்பதை,

"யாமே, முதலைப் போத்து முழுமீன் ஆரும்
தண்துறை ஊரன் தேர் எம்
முன்கடை நிற்க எனவேட் டேமே".

என வரும் பகுதி உணர்த்துகிறது. இப்பகுதிக்குப் பழைய உரையாசிரியர் வழங்கும் உரை வருமாறு:

"யாங்கள் அவன்தேர் பிற மகளிர் முன்கடை நிற்றல் ஒழிந்து எம் முன்கடை நிற்க என விரும்பினோம் என்றவாறு. 'முதலைப் போத்து ..... ஊரன்' என்றது, ஒருங்கு வாழ்வாரைப் பழமை நோக்காது உயிர்கவர்வான் என்பதாம்."[23]

[- இவர் கருத்தின்படி பரத்தை இன்பத்தின் பொருட்டு உரிமை மனைவியின் உயிரைக் கவரக்கூடத் தலைவன் தயங்கமாட்டான் என்பதாம்.]

ஔவை உரை

"…. யாங்கள், முதலைப் போத்துத் தன்னொடு வாழும் முதிர்ந்த மீன்களை உண்ணும் குளிர்ந்த துறையினை உடைய ஊரனது தேர், பிற மகளிரின் முன்கடை நிற்றல் ஒழிந்து எம்முடைய முற்றத்தே நிற்க என விரும்பினேம்."[24]

\ ".....துறைக்கண் வாழும் முதலைப் போத்து உடனுறையும் முழு மீன்களின் முதுமை கருதாது உண்டொழுகும் ஊரன் என்றதனால், தலைமகன் தன்மனைக்கண் தன்னோடு உடன் உறையும் தலைமகளின் தலைமை கருதாது அவள் நலம் கெடுக்கின்றான் எனத் துனியுறு கிளவி தோன்ற உள்ளுறுத்து உரைத்தவாறு."[25]

---

23. ஐங்குறுநூறு [மருதம்] மூலமும் உரையும், ப. 19
24. அதே நூல், ப. 19-20
25. அதே நூல், ப. 21

விளக்கக் குறிப்பு

துனி - முதிர்ந்த கலாம் - பரிமேல், [திருக். 1306]. முற்றிய ஊடல் துனி எனப்பட்டது. எனவே, துனியுறு கிளவி என்பது முற்றிய ஊடலைப் புலப்படுத்தும் சொல்லாகும். ஊடல் என்பது மகளிரின் உரிமைப் போராட்டம். வழிதவறிப் போகும் தலைவனைத் தட்டிக் கேட்கவும், தடுத்து நிறுத்தவும், நல்வழிக்குத் திரும்பவும் ஊக்கும் சொல்லே துனியுறு கிளவி என்க.

இப்பாடலில் அமைந்துள்ள உள்ளுறை உவமத்தினை இவ்வாறு காட்சிப்படுத்தலாம்.

உள்ளுறை உவமம்

கருப்பொருள்		உள்ளுறை
[நிலத்திற் கருக்கொள்ளும் பொருள்கள்]		[கருப்பொருளின் உள்ளே உறைந்து கிடக்கும் குறிப்புப் பொருள்]
1. முதலைப் போத்து	-	தலைவன்
2. முழுமீன்	-	தலைவி
3. தின்னுதல்	-	கொன்றனைய துன்பம் செய்தல்
4. நீர் நிலை (தண்துறை)	-	இல்லம்

ஒரே நீர் நிலையில் இருப்பினும் முதலை உடன் உறையும் மீனைத் தின்று விடுதல் போல், ஒரே இல்லத்தில் வாழினும் தலைவன் பரத்தையர் பிரிவினால் தலைவிக்குக் கொன்றன்ன இன்னாமை செய்தொழுகினான் என்பது உள்ளுறைப் பொருளாகும். தலைவி,

"கொன்றன்ன இன்னா செயினும் அவர் செய்த
ஒன்று நன்(று) உள்ளக் கெடும்"- (திருக். 109)

என்ற கொள்கையினைக் கடைப்பிடிப்பவளாதலின், தலைவன் பரத்தையரிடமிருந்து திரும்பி வரும்பொழுது அவன் பிழையினை மறந்து அன்புடன் ஏற்றுக்கொள்வதால், பெண்ணின் பெருமை என்பது போதரும்.[26]

---

26. ஐங்குறுநூறு ஆராய்ச்சித் தெளிவுரை, ப. 15

இதுகாறும் கற்புக் காலத்துத் தோழி பேசுவனவாக அமைந்த பாடல்களின் பொருட்கூறுகள் ஆராயப்பெற்றன. இனிவரும் பாடல்களில் களவுக் காலத்து அவள் ஆற்றிய உரைகளாக விளங்கும் பாடல்களின் பாங்கினை நோக்குவோம்.

6.6. ஆறாம் பாடல்

இப்பாடலின் அடியில் காணப்படும் கொளு பாட்டு என்னும் பூட்டினைத் திறக்கப் பயன்படும் திறவுகோலாகும். கொளு வருமாறு:

"களவினில் பலநாள் ஒழுகிவந்து வரைந்து கொண்ட தலைமகன் தோழியோடு சொல்லாடி, யான் வரையாது ஒழுகுகின்ற நாள் நீயிர் இங்கு இழைத்திருந்த திறம் யாது? என்றாற்கு அவள் சொல்லியது."[27]

தலைவன் களவொழுக்கத்தில் மறைந்தொழுகிய காலத்தில் தலைவி என்ன நினைந்திருந்தாள் என்பதைத் தோழி தலைவனுக்கு உரைப்பதாக,

"வாழி ஆதன் வாழி அவினி
வேந்துபகை தணிக; யாண்டுபல நந்துக
எனவேட் டோளே யாயே"

என வரும் பாடலின் முற்பகுதி விளங்குகிறது.

பழைய உரை

"நின்னை எதிர்ப்பட்ட அன்றே வரைந்தாய் எனக் கொண்டு இல்லறத்திற்கு வேண்டுவன விரும்பி ஒழுகியது அல்லது தலைவி பிறிதொன்றும் நினைத்திலள்."[28]

தலைவியின் நோக்கத்தினை உட்கொண்டு உரைத்ததே யன்றி இவ்வுரையில் முதல் இரண்டடிகளின் பொருள் இடம் பெறவில்லை. இக்குறையினை ஔவை உரை போக்குகிறது.

ஔவை உரை

"எம்முடைய யாய் நின்னை எதிர்ப்பட்ட ஞான்றே நீ வரைந்தாய் என உட்கொண்டு, ஆதன் அவினி வாழ்க என்றும் வேந்தன் பகைமை ஒழிக என்றும் அவன் பல யாண்டுகள்

---

27. ஐங்குறுநூறு [மருதம்] மூலமும் உரையும், ப.21 - 23.
28. அதே நூல், ப. 21

வாழ்க என்றும் தனக்குரிய அறநெறியே வேண்டி ஒழுகினாள்.

......தலைமகன் வரைவிடை வைத்துப் பிரிந்தானாதல் அறிக. இவ்வாறே எதிர்ந்த ஞான்றே வரைந்தாய் எனக் கற்புக்கடம் பூண்டாள்."[29]

விளக்கக் குறிப்பு

தலைமக்கட்குச் சான்றோர் வகுத்த பத்து வகை இலக்கணமும் (தொல். பொருள். 269) பொருந்திய காதலர்கள் ஆதலின் ஒருவரை விட்டு ஒருவர் பிரிதல் இல்லை. ஒரு சில காரணங்களால் தலைவன் பிரிய நேரிடினும் தலைவியை ஒரு ஞான்றும் மறவான். தலைவியும் தலைவன் நினைவோடு செயற்படுவாள். ஆதலின், களவொழுக்கத்தின் முதற்படி ஆகிய இயற்கைப் புணர்ச்சி நிகழும் நாளே இருவரும் தமக்குள் மணந்த நாள் ஆகும். சில காலம் சென்று உற்றாரும் ஊராரும் அறிய மணத்தல் என்பது இவர்தம் கற்புக் காதலை உலகறியச் செய்தற் பொருட்டே ஆகும். ஆதலின், தம் காதல் வாழ்வின் தொடக்கம் முதலே இல்லறச் சிந்தனையினைத் தவிர, தலைவிக்குப் பிறிது எண்ணம் எழுவில்லை. பழைய உரையாசிரியர்,

"நின்னை எதிர்ப்பட்ட அன்றே வரைந்தாய் எனக் கொண்டு இல்லறத்திற்கு வேண்டுவன விரும்பித் தலைவி ஒழுகினாள்"

எனத் தோழி தலைவனுக்கு உணர்த்தினள் என்ற வகையில் வரைந்துள்ள உரைப்பகுதி சிறந்ததுவே.

வேந்து பகை தணிக - தன்னாட்டு வேந்தர்க்குப் பகையாவன: வேற்று நாட்டு வேந்தர், உள்நாட்டில் உருவெடுக்கும் பல குழுப்பகை, உட்பகை உள்ளிட்டவை. அவை அகலவேண்டும் என்று தலைவி விரும்பினாள் என்று தோழி தலைவனிடம் கூறினாள். இங்குத் தலைவியை அரசியல் ஞானம் வாய்ந்தவளாக ஓரம்போகியார் படைத்துள்ளார்.

தோழி என்ன நினைத்திருந்தாள் என்பது,

"யாமே, மலர்ந்த பொய்கை முகைந்த தாமரைத்
தண்துறை ஊரன் வரைக
எந்தையும் கொடுக்க எனவேட் டேமே".

என வரும் பாடற் பகுதியால் புலனாகிறது.

---

29. ஐங்குறுநூறு [மருதம்] மூலமும் உரையும், ப. 22-23

பழைய உரை

'யாங்கள், அகன்ற பொய்கைக்கு அணியாகத் தாமரையை உடைய ஊரனாதலால், அத்தண்துறை ஊரன் மனைக்கு அணியாம் வண்ணம் இவளை வரைவானாக; எந்தையும் கொடுப்பானாக என விரும்பினேம்....'

குறிப்பு: பொய்கைக்கு அணிதருவது தாமரை. அதுபோல, மனைக்கு அணிதருபவள் தலைவி என்று உவமவாசகத்தில் பழைய உரைகாரர் வரைந்திருத்தல் பாராட்டத்தக்கது.

ஔவை உரை

.... அகன்ற பொய்கைக்கண் முகைகள் [- அரும்புகள்] கொண்ட தாமரையினை உடைய ஊரன் இவளை விரைய வரைவானாக என்றும், அவன் அது வேண்டியவிடத்து எந்தையும் மறாது கொடுப்பானாக என்றும் யாங்கள் விரும்பி ஒழுகினோம்.

.... தண்துறை ஊரன் வரைக என்றதனால், தலைமகள் ஒருதலை உரிமை வேண்டி நிற்றலும், 'எந்தையும் கொடுக்க' என்று கூறவே, 'அம்பலும் அலரும் களவு வெளிப்படுக்கும் என்று' அஞ்சுதல் முதலியனவும் ஏதுவாகத் தலைமகள் வரைதல் வேட்கையுடையவள் ஆயினமை தோன்றத் தோழி கூறினாளாம்.'[30]

குறிப்பு: தலைவன் களவொழுக்கத்தினை நீட்டிப்பதால் பல்வகை இடர்கள் இருபக்கமும் தோன்ற வாய்ப்பு உள்ளதால் அவன் விரைந்து வரைதலையே தலைவி விரும்பியவள் என்பது தோழியின் கணிப்பு.

தந்தை மகட்கொடை நேர்தல் வேண்டும் என்பதால், வேற்றார் மகள் கேட்டுவரின் தோழி செவிலித்தாய்க்கும், செவிலித்தாய் நற்றாய்க்கும் அறத்தொடு நிற்றல் வேண்டிய நிலை உருவாகித் தந்தைக்கு உண்மையினை உணர்த்த வேண்டிய சூழல் தோன்றக்கூடும். சேக்சுப்பியர்

"The Course of true love never did run smooth" [- A Midsummer Night's Dream] என்று காதல் கனிவதில் உள்ள இடரினைக் குறிப்பிடுதல் நோக்கத்தக்கது.

30. ஐங்குறுநூறு [மருதம்] மூலமும் உரையும், ப. 21-23

உள்ளுறைப் பொருள்

பொலிவுடைய பொய்கையில் அரும்புவிட்டிருக்கும் தாமரையை உடைய தண்துறைக்குத் தலைவன் என்றதால், பொலிவுடைய தலைவிபால் அன்பு முகிழ்த்திருக்கும் தலைவன் என்று உள்ளுறைப் பொருள் காணலாம்.[31]

6.7. ஏழாம் பாடல்

களவுக் காலத்தில் தலைவியின் மனநிலை எவ்வாறு இருந்தது என்று வினவிய தலைவனுக்குத் தோழி கூறுவதாக அமைந்த ஏழாம் பாடலின் முற்பகுதி இங்கே தரப்படுகிறது.

"வாழி ஆதன் வாழி அவினி
அறம்நனி சிறக்க; அல்லது கெடுக
எனவேட் டோளே யாயே ...."

பழைய உரை - ஔவை உரை

"நின்னை எதிர்ப்பட்ட ஞான்றே நீ வரைந்தாய் எனக் கொண்டு, ஆதன் அவினி வாழ்க என்றும், அறவினை மிக ஓங்குக என்றும் அல்லதாகிய பாவம் முற்றவும் கெடுக என்றும் தலைமகள் இல்லறமே வேண்டி ஒழுகினாள்......

.... எதிர்ப்பட்ட பொழுதே வரைந்தாய் என உட்கொண்டு கற்புநெறி நின்றாள், தான் நுகர்தற்குரிய இன்பம் அறத்தான் அன்றி எய்தாது என்பதனை உணர்ந்துளாள் என்பாள், அறம் நனிசிறக்க என்றும், அறவினையே செய்தொழுகுவாரைப் பாவம் பற்றாதாயினும், பற்றுமாறு பிறர்பழிமொழி கூறினும் அஃது அவரைச் சாராதாகலின், நனி சிறக்க என்றும் வேட்டாள் ...."[32]

விளக்கக் குறிப்பு

ஒவ்வொரு நிகழ்ச்சியையும் நாட்டுப்பாடல் [- தேசிய கீதம்,] பாடித் தொடங்குதல் போல், வேட்கைப்பத்தின் ஒவ்வொரு பாடலின் தொடக்கமும், 'வாழி ஆதன் வாழி அவினி' என்று அரச வாழ்த்தாக அமைதலும், அதனைத் தலைவியின் கூற்றாக அமைத்தலும் ஓரம்போகியாரின் புரவலர் போற்றும் பண்பிற்கு ஏற்ற எடுத்துக்காட்டாக இலங்குவன ஆகும்.

---

31. ஐங்குறுநூறு ஆராய்ச்சித் தெளிவுரை, ப.16
32. ஐங்குறுநூறு [மருதம்] மூலமும் உரையும், ப. 24-25

/அறம்/ என்பது நல்வினை. இதற்கு மறுதலையாகிய தீவினை அல்லது என்று கூறப்பட்டது. எனவே, ஒரு கருத்தினை உடன்பாட்டாலும் எதிர்மறையாலும் கூறி வலியுறுத்தற் பொருட்டு, "அறம் நனி சிறக்க, அல்லது கெடுக" என்று தலைவி விரும்பியதாக ஓரம்போகியார் படைத்துள்ளார். நாட்டிற்கு நாடு அறம், மறம் வேறுபடினும் உலகம் எங்கும் ஒப்புக்கொள்ளப் பெற்ற பொது அறம் மாறாமை குறிப்பிடத்தக்கது.

இனி, தோழியின் விழைவு எவ்வாறு அமைந்தது என்பதைப் புலப்படுத்தும் இப்பாடலின் பிற்பகுதி வருமாறு:

"..... யாமே, உளைப்பூ மருதத்துக் கிளைக்குருகு இருக்கும்
தண்துறை ஊரன் தன்னூர்க்
கொண்டனன் செல்க எனவேட் டேமே".

பழைய உரை - ஔவை உரை

'........ யாங்கள் உளை பொருந்திய பூக்களை உடைய மருத மரத்தில் குருகுகள் தம் கிளை சூழ இருக்கும் குளிர்ந்த துறையினை உடைய ஊரன், இவளைத் தன்னுடன் கொண்டு செல்வானாக என வேண்டி ஒழுகினேம்.

குருகு விளக்கம்: "இதனைக் கொக்கு என்பாரும் நாரை என்பாரும் அன்னம் என்பாரும் உளர். இப்பெயர் நீர்வாழ் பறவைக்கெல்லாம் பொதுவாய் வருமாயினும், கொக்கினங்காள், குருகினங்காள் என வேறு வேறு விளிக்கப்படுதலின், கொக்கு அன்று என்றும், கருங்கால் கூறப்படுதலின் நாரையும் அன்னமும் அன்று என்றும் துணியலாகும் என்றும், "இது வெண்ணிறம் உடைமையான் வெள்ளாங்குருகு என்றும் வழங்கும் என்றும் இ.வை.அனந்தராமையர் கூறுவர் என்று ஔவை விரிவாக விளக்கம் தந்துள்ளார்.[33]

பெரும்புலவர் ஆகிய இ.வை.அனந்தராமையர் கடல் அனைய தம் புலமை வளம் புலப்படும் பாங்கில் கலித்தொகை நச்சினார்க்கினியரின் உரையினைக் களஞ்சியத்திற்கு ஒப்பாகப் பதிப்பித்து வெளியிட்டவர் என்பது இயைபு கருதி இவண் குறிப்பிடத்தக்கது.

இறைச்சிப் பொருள்

இப்பாடலிற் காணப்படும் இறைச்சிப் பொருளைப் பின்வருமாறு அமைத்துக் காட்டலாம்.

---

33. ஐங்குறுநூறு [மருதம்] மூலமும் உரையும், ப. 24 - 25

கருப்பொருள்		இறைச்சிப் பொருள்
1. மருத மரத்தின் கிளை	-	தலைவன் இல்லம்
2. குருகுகள்	-	சுற்றத்தார்
3. குருகுகள் மருத மரத்தின் கிளையில் தங்குதல் [நிகழ்காலம்]	-	மணம் முடிந்த பின்னர் விருந்தினர், சுற்றத்தார் தலைவன் இல்லத்தில் தங்குதல் [- எதிர்காலம்]

அகப்பாடல்களில் சிந்திப்பதற்கு வேலை கொடுப்பதாகவும் விருந்தாகவும் புலவர் படைக்கும் உள்ளுறை, இறைச்சி என்பன இரண்டுமே கருப்பொருள்களின் வாயிலாகவே வெளிப்பட்டுத் தோன்றுவன. ஆயினும், இரண்டிற்கும் இடையே சுட்டத்தக்க ஒரு நுண்ணிய வேறுபாடு உண்டு. உவமையும் உவமிக்கப்படும் பொருளும் நிகழ்காலத்திற்கு உரியனவாக அமைதல் உள்ளுறைக்கும்; உவமை நிகழ்காலத்திற்கும், உவமிக்கப்படும் பொருள் எதிர்காலத்திற்குமாக அமைதல் இறைச்சிக்கும் உரிய சிறப்பியல்பு என்பதை மனங்கொள்ளுதல் வேண்டும்.[34]

6.8. எட்டாம் பாடல்

களவியல் காலத்துத் தலைவியின் திறத்தினைத் தோழி தலைவனுக்குப் புலப்படுத்துவதாக அமைந்த எட்டாம் பாடலின் முற்பகுதியைக் காண்போம்.

"வாழி ஆதன் வாழி அவினி!
அரசு முறை செய்க; களவு இல் லாகுக
எனவேட் டோளே யாயே ...."

ஔவை உரை

"நின்னை (- தலைவனை) எதிர்ப்பட்ட ஞான்றே தலைமகள் கற்புக்கடம் பூண்டு, அதற்கு வேண்டுவன நினைந்து ஆதனவினி வாழ்க என்றும், அரசன் முறையினைச் செய்க என்றும், களவு முதலிய குற்றங்கள் நிகழாதொழிக என்றும் வேட்டொழுகினாள் .... முறை செய்தலை, ஓர்ந்து கண்ணோடாது இறை புரிந்து யார்மட்டும், தேர்ந்து செய் வஃதே முறை (திருக். 541) என்பதனால் அறிக ....களவு, பிறர்க்கு உரியது ஒன்றனை வஞ்சத்தால் கொள்ளக் கருதுதல்."[35]

---

34. ஐங்குறுநூறு ஆராய்ச்சித் தெளிவுரை, ப. 16
35. ஐங்குறுநூறு [மருதம்] மூலமும் உரையும், ப. 27-28

விளக்கக் குறிப்பு

களவு என்பது இருவகைக் கைகோள்களில் ஒன்றாகிய களவு அன்று, ஒருவர் நெஞ்சத்தினை ஒருவர் பிறர் அறியாமல் கவர்ந்துகொள்ளுதலானும் பிறர் பார்வையில் படாமல் கரந்தும் கலந்தும் மகிழ்வதாலும் அகத்திணையில் பேசப்படும் களவு மேம்பட்டது என்க.

முறை செய்து மக்களைக் காத்தல் மன்னனின் கடமை. ஆதலின், அவன் செங்கோல் செலுத்துக என்று தலைவி விரும்பினாள். மாநிலம் காவல் புரிபவன் ஆகிய அரசன் தன்னாலும், தன் அலுவலராலும் கள்வராலும் பகைவராலும் கொடிய விலங்குகளாலும் மக்களுக்கு இன்னல் உண்டாகாதபடி ஆட்சி புரிதல் வேண்டும். [காண்க: திருத்தொண்டர் புராணம், திருநகரச் சிறப்பு, 36]. 'கள்வனைக் கோறல் கடுங்கோலன்று, வெள்வேற் கொற்றம்' [சிலம்பு. 20. 64 - 65] என்று பாண்டியன் நெடுஞ்செழியன் கூற்றாக இளங்கோ அடிகள் இயம்புவதால், களவு எத்தகைய கொடிய செயல் என்பது புலனாகும்.

பிறர்க்கு உரிமை உடைய பொருளை வஞ்சித்துக் கவர்தல் ஐம்பெரும் தீச்செயல்களில் ஒன்றாகிய களவு எனப்படும்.[36]

தலைவிஅவ்வாறு விரும்பி ஒழுகினாளாக, தோழியின் செயற்பாடுயாதுதலைவி என்பது குறித்து அவளே சொல்கிறாள்:

"யாமே, அலங்குசினை மாஅத்து அணிமயில்
இருக்கும் பூக்கஞல் ஊரன் சூள் இவண்
வாய்ப்ப தாக எனவேட் டேமே".

ஔவை உரை

"அசைகின்ற தளிர்களை உடைய மாமரத்தின்கண் அழகியமயில் தங்கியிருக்கும் பூக்கள் நிறைந்த ஊரன், தலைப்பெய்த பொழுது செய்த சூளுறவு இப்பொழுது பொய்யாதொழிக என விரும்பி ஒழுகினேம்.[37]

களவின்கண், நீ பிரிந்தொழுகிய ஞான்றெல்லாம், யாம் குறிப்பினாலும் வெளிப்படையாலும் வரைவு கடாவியும் நீ (- தலைவன்) அக்களவே விரும்பித் தாழ்த்த இடத்து, தலைமகள்

36. ஐங்குறுநூறு ஆராய்ச்சித் தெளிவுரை, ப. 17
37. ஐங்குறுநூறு [மருதம்] மூலமும் உரையும், ப. 27

எய்திய வேறுபாடு கண்டு நீ செய்த சூளுறவினை மறந்தனை கொல்லோ என அஞ்சினேம் ஆகலின், சூள் இவண் வாய்ப்பதாக எனவேட்டேம் என்றாள்."[38]

விளக்கக் குறிப்பு

களவொழுக்கத்தினால் தலைவியின் உடலில் மாற்றம் தோன்றின் பலரும் பழிபேசுவாராதலின், அவளை எப்படியும் மணப்பேன் என்று தலைவன் சத்தியம் செய்து கொடுத்தலைப் பண்டையோர் சூள் உரைத்தல் என்றனர். சூள் பொய்த்தலும் உண்டு என்பதற்கு,

"இலங்கும் அருவித்து இலங்கும் அருவித்தே
வானின் இலங்கும் அருவித்தே தான்உற்ற
சூள்பேணான் பொய்த்தான் மலை". *(கலி. 41. 18-20)*

எனவரும் கபிலர் பாடல் சான்றாகும்.

தலைவன் ஒருபொழுதும் பொய்ச் சூள் உறான் என்று தலைவிக்கு உறுதி பயக்கும் சொற்களை,

"பொய்த்தற்கு உரியனோ? பொய்த்தற்கு உரியனோ?
அஞ்சலோம்பு என்றாரைப் பொய்த்தற்கு உரியனோ?
குன்றகல் நன்னாடன் வாய்மையில் பொய்தோன்றின்
திங்களுள் தீத்தோன்றி யற்று".- *[கலி. 41. 21-24]*

எனவரும் தோழியின் கூற்றில் வைத்துக் கபிலர் புலப்படுத்தினார். எவ்வாறாயினும் குறிக்கோள் தலைவன் காலம் நீட்டிப்பானே தவிரப் பொய்ச் சூளுற்றுத் தலைவியை ஏமாற்றமாட்டான்.

இறைச்சிப் பொருள்

முன்னைய உரைகளில் குறிக்கப்படாத இறைச்சிப் பொருள் இவ்வடிகளில் பொதிந்திருத்தலை இவண் காண்போம்.[39]

கருப்பொருள்	இறைச்சிப் பொருள்
1. மாமரம்	- தலைவன் இல்லம்
2. அணிமயில்	- அழகிய தலைவி
3. அணிமயில் மாமரத்தில் வீற்றுள்ளது. [-நிகழ்காலம்]	- தலைவி மணம் முடிந்து - தலைவன் இல்லத்தில் வீற்றிருப்பாள். எதிர்காலம்]

38. ஐங்குறுநூறு [மருதம்] மூலமும் உரையும், ப. 29

39. ஐங்குறுநூறு ஆராய்ச்சித் தெளிவுரை, ப. 17

தொல்காப்பியர், 'அன்புறு தகுவன இறைச்சியிற் சுட்டலும்' [தொல். பொருள். 227] என்று இலக்கணம் கூறினார். தலைமக்கள் அன்புறுதற்குத் தகுவனவற்றைக் குறிப்பது இறைச்சிப் பொருள் என்பது புலனாகும். உள்ளுறைப் பொருள் பெரும்பான்மையும் தலைவனின் கொடுமை ஒழுக்கத்தினைக் குறிப்பதாக அமையும்.

6.9. ஒன்பதாம் பாடல்

களவுக் காலத்துத்தலைவி விரும்பி ஒழுகிய திறம்.

"வாழி ஆதன் வாழி அவினி
நன்று பெரிது சிறக்க; தீது இல் லாகுக
எனவேட் டோளே யாயே ...."

என்று இயம்பப் பெற்றது.

பழைய உரை

பிற்பகுதிக்கு மட்டுமே உள்ளது. பின்னர்க் காண்போம்.

ஔவை உரை

"நின்னை எதிர்ந்த பொழுதே வரைந்தாய் எனக் கொண்டு தலைமகள் இல்லறமே நினைந்து, ஆதனவினி வாழ்க என்றும் நன்று மிகவும் பெருகுக என்றும், தீது இல்லை ஆகுக என்றும் வேட்டொழுகினாள் யாய் ....

நன்று இன்பம் பயக்கும் நல்வினை, தீது - துன்பம் பயக்கும் வினை ...... வாழ்க்கையின் பயன் இன்ப நுகர்ச்சியன்றிப் பிறிதின்மையின் நன்று பெரிது சிறக்க எனவும், தீது உளதாயவழிப் பாவமும் பழியும் எய்தி இருமையும் கெடுத்தலின், தீது இல்லாகுக எனவும் வேட்டாள் என்றாள். 'தீதுசேண் இகந்து நன்றுமிகப் புரிந்து' [பதிற். 22] என்றார் பிறரும்."[40]

விளக்கக் குறிப்பு

ஏழாம் பாடலில், 'அறம்நனி சிறக்க அல்லது கெடுக' என்று விரும்பிய தலைவி, இப்பாடலில் 'நன்று பெரிது சிறக்க தீது இல்லாகுக' என்று வேட்டனள். அறம் - நன்று, நன்மை; அல்லது - தீது, தீமை; நனி சிறக்க - நன்று பெரிது சிறக்க, நல்லனயாவும்

40. ஐங்குறுநூறு [மருதம்] மூலமும் உரையும், ப. 29-30

சிறக்க வேண்டும், தீயனயாவும் ஒழிதல் வேண்டும் என்று எண்ணும் அளவிற்கு இளைய தலைவி ஒரு தத்துவ ஞானியைப் போல் பேசுகிறாள். அவள் வாயிலாக ஓரம்போகியார் பேசுகிறார்!

மதுரைக்காஞ்சியில்,

"நன்றும் தீதும் கண்டாய்ந்து அடக்கி
அன்பும் அறனும் ஒழியாது காத்துப்
பழி ஒரீஇ உயர்ந்து பாய்புகழ் நிறைந்த
செம்மை சான்ற காவிதி மாக்களும்" *[496 - 499]*

என்று மாங்குடி மருதனார் பாண்டியன் நெடுஞ்செழியனின் காவிதிப் பட்டம் பெற்ற அமைச்சர்களின் பண்பினைப் பாடியிருத்தல் இவண் ஒப்புநோக்கத்தக்கது.[41]

தொல்காப்பியம் உரியியலில், 'நன்று பெரிது ஆகும்' [343] என்று வரும் நூற்பா இங்கு எண்ணத்தக்கது. நன்றும் பெரிதும் ஒரு பொருளனவாகத் தொல்காப்பியர் குறித்துள்ளார். இப்பாடலில் நன்று - நல்லது என்ற பொருளில் பயின்றுள்ளது.[42] இனி, களவொழுக்கத்தில் தோழியின் செயற்பாட்டினை,

"யாமே, கயலார் நாரை போர்விற் சேக்கும்
தண்துறை ஊரன் கேண்மை
அம்பல் ஆகற்க எனவேட் டேமே".

என வரும் பாடற் பகுதி எடுத்துரைக்கின்றது.

பழைய உரை

"இன்பம் நுகர்ந்தவன் செல்வமனைக்கண்ணே வைகும் வண்ணம் வரையும் துணையும் அவன் கேண்மை அம்பல் ஆகாது ஒழிக என விரும்பினேம் யாங்கள் ....:

ஔவை உரை

"........ கயல்மீனை உண்ட நாரை நெற்போர்வின்கண் தங்கும் தண்ணிய துறையினை உடைய ஊரன் நட்பு அம்பல் ஆகாது ஒழிக என வேட்டேம் யாங்கள் .... தம்மனத்து ஒரு கோட்டம் உடையார் அப்பெற்றியே கருதுவது உலகத்துத் தன்மையாகலின், வேறு நின்று தம் கருமம் உசாவுவாரைத் தன் கருமம் உணர்வாராக உணர்ந்து இவ்வொழுக்கம் இடையீடு

---

41. ஐங்குறுநூறு ஆராய்ச்சித் தெளிவுரை, ப. 18
42. ஐங்குறுநூறு [மருதம்] மூலமும் உரையும், ப. 18

படும் என அஞ்சினாளாயினும், வரைவு நீட்டித்துக் களவு வெளிப்படுத்தற்குரிய நிமித்தம் ஆகிய தலைவனாகலின், அம்பல் ஆகறக எனவேட்டேம் என்றாள்.

தலைவியின் நலன் உண்டு அவளை உடனே வரைந்துகொள்ள நினையாது வரைவிடை வைத்துப் பிரிந்து தன்மனைக்கண்ணே தங்கினான் எனத் தான் அக்காலத்துக் கருதியது தோன்ற, 'கயலார் நாரை போர்விற் சேக்கும்' என உள்ளுறுத்து உரைத்தாள்."[43]

விளக்கக் குறிப்பு

தொல்காப்பியர்,

அம்பலும் அலரும் களவுவெளிப் படுத்தலின்
அங்கதன் முதல்வன் கிழவன் ஆகும்.

[தொல்.பொருள். 137]

என்று வரையறுத்தனர். இளம்பூரணர்,

"அம்பல் என்பது முகிழ்த்தல். அஃது ஒருவர் ஒருவர் முகக்குறிப்பினால் தோற்றுவித்தல். அலராவது சொல்லுதல். அதனானே இவை இரண்டும் களவினை வெளிப்படுத்தலின் அதற்குக் காரணம் ஆவான் தலைவன் என்றவாறு" என்று வரைந்துள்ள விளக்கம் எண்ணத்தக்கது.

நற்றிணையில்,

"சிலரும் பலரும் கடைக்கண் நோக்கி
மூக்கின் உச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி
மறுகில் பெண்டிர் அம்பல் தூற்றச்
சிறுகோல் வலந்தனள் அன்னை அலைப்ப" *[149. 1-4]*

என வரும் பாடற்பகுதி அம்பல் வெளிப்படும் பாங்கினைச் சொல்லோவிய மாக்கிப் புலப்படுத்துகிறது.

நரை - வெள்ளை, நாரை - வெள்ளைப் பறவை, கொக்கு முதலியவற்றைக் குறிக்கும்.

இப்பாடலிற் பொதிந்துள்ளது உள்ளுறை உவமம் எனக் கொண்டவர் ஔவை. அதனை இறைச்சிப் பொருளாகக் கொள்ளுதற்கு இடம் உண்டு.

---

43. ஐங்குறுநூறு [மருதம்] மூலமும் உரையும், ப. 30-31

கருப்பொருள்		**இறைச்சிப் பொருள்**
1. கயல் மீன்	-	இன்பம்
2. நாரைகள்	-	தலைவன், தலைவி
3. நெற்போர்	-	இல்லறம்
[கயல்மீனினை உண்ட நாரைகள் நெற்போரில் தங்கியிருக்கின்றன நிகழ்காலம்]		*[இன்பம் துய்த்த தலைமக்கள் இனிமேல் தான் இல்லறத்தில்- தங்க வேண்டும். எதிர்காலம்]*

எனவே, உவமையாக வரும் நாரைகளின் செயல் நிகழ்காலத்திலும், உவமிக்கப்படும் பொருளாக வரும் தலைமக்களின் இல்லறச் செயல் எதிர்காலத்திலும் அமைவதால் உள்ளுறையாகாது இறைச்சிப் பொருளாகக் கொள்ளற்பாலது என்க.[44]

6.10. பத்தாம் பாடல்

களவொழுக்கத்தில் தலைவியின் நிலையினை வெளிப் படுத்தும் பத்தாம் பாடலின் முற்பகுதியைக் காண்போம்.

"வாழி ஆதன் வாழி அவினி!
மாரி வாய்க்க! வளம் நனி சிறக்க!
எனவேட் டோளே யாயே ...."

பழைய உரை

"இவள் நின்னை எதிர்ப்பட்ட அன்றே வரைந்தாய் எனக் கொண்டு இல்லறத்திற்கு வேண்டுவன விரும்பி ஒழுகினாள் ...."

ஔவை உரை

"இவள் நின்னை எதிர்ப்பட்ட ஞான்றே வரைந்தாய் என உட்கொண்டு ஆதனவினி வாழ்க என்றும், மழை தப்பாது பொழிக என்றும், வளங்கள் மிக உண்டாகுக என்றும் இல்லறத்திற்கு வேண்டுவன விரும்பி ஒழுகினாள் ....

அறம் முதல் மூன்றும் பயக்கும் சிறப்புடைமையின் மாரி வாய்க்க என்றும், அது வாய்த்தவழி இடையீடின்றிப் பெருகி

44. ஐங்குறுநூறு ஆராய்ச்சித் தெளிவுரை, ப. 18

இன்பம் பெருக்கும் முகத்தால் இல்லறத்திற்கு ஏற்றம் பயத்தலின் வளம் நனிசிறக்க என்றும் தலைமகள் வேட்டாள் என்றாள்."[45]

விளக்கக் குறிப்பு

ஒரு நாட்டின் வளத்திற்குப் பருவமழை தவறாது பொழிதல் வேண்டும். அப்பொழுதுதான் நீர்வளம், நிலவளம், தொழில்வளம் உள்ளிட்ட பல்வகை வளங்களும் தழைத்தோங்கும் என்ற விழுமிய விருப்பத்தினைப் புலப்படுத்தும் நங்கையாகத் தலைவியை ஓரம்போகியார் படைத்துள்ளார். திருவள்ளுவர் கடவுள் வாழ்த்தினை அடுத்து வான்சிறப்பு என்னும் அதிகாரம் வகுத்துள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது. திருமுருகாற்றுப்படையில், "மலிதுளி பொழிய ஒரு கை" [116] என்று நக்கீரனார் போற்றினார். இளங்கோ அடிகள் 'மாமழை போற்றும் மாமழை போற்றுதும்' எனப் பரவுதல் காண்க.[46]

இனி, தோழியின் விருப்பத்தினை வெளிப்படுத்தும் இப்பாடலின் பிற்பகுதியைக் காண்போம்.

"யாமே, பூத்த மாஅத்துப் புலால்அம் சிறுமீன்
தண்துறை ஊரன் தன்னோடு
கொண்டனன் செல்க எனவேட் டேமே".

பழைய உரை

"......... யாங்கள் அவன் வரைந்துகொள்ள நினையான் ஆயின், பூத்தமாவினையும் புலாலஞ் சிறுமீனையும் உடைய ஊரனாதலால், அதற்கேற்ப எம்மூர்க்கண் அறத்தொடு நிலை வகையால் கற்புடைமையும், எதிர்ப்பாட்டினால் அலரும் கிளைப்பவாயினும் உடன் கொண்டு செல்வானாக என விரும்பினேம்."

ஒளவை உரை

"....... யாம் பூத்து மணம் கமழும் மாவினையும் புலால் நாறும் மீனினையும் உடைய குளிர்ந்த துறையினை உடைய ஊரன் இவளைத் தன்னுடன் கொண்டு செல்வானாக என வேட்டொழுகினேம்."[47]

விளக்கக் குறிப்பு

பெற்றோரும் சுற்றத்தாரும் திருமணத்திற்கு உடன்படாத சூழ்நிலை உண்டாகும் பொழுது, தலைவன் தலைவியை

45. ஐங்குறுநூறு [மருதம்] மூலமும் உரையும், ப. 31-32
46. ஐங்குறுநூறு ஆராய்ச்சித் தெளிவுரை, ப. 19
47. ஐங்குறுநூறு [மருதம்] மூலமும் உரையும், ப. 31-32

உடன்கொண்டு சென்று தன்னூரில் மணம் முடித்து வாழ்தலும் சங்க காலத்துத் தமிழர் வாழ்வியலில் இடம்பெற்றுள்ளது. எனவேதான், தோழி "தண்துறை ஊரன் தன்னொடு கொண்டனன் செல்க" என்று விரும்பினேம் எனத் தலைவனிடம் பேசுகிறாள்.

உள்ளுறை உவமம்[48]

கருப்பொருள்		உள்ளுறை
1. பூத்து மணம் கமழும் மாமரங்கள்	-	தலைமக்களின் காதற் கேண்மையினை ஆதரிக்கும் நன்மக்கள்.
2. புலால் நாற்றம் வீசும் சிறுமீன்கள்	-	அலர் பேசும் அற்பர்கள்

7. நிறைவுரை

ஓரம்போகியாரின் வேட்கைப்பத்தில் ஓர் அமைப்பு ஒழுங்கு [- Structural Regularity] எழிலுற இலங்குகிறது. முதல் ஐந்து பாடல்களும் கற்புக் காலத்துத் தலைவன் காதற் பரத்தையினை நாடிச் சென்று கசந்தபின், தன் உரிமைத் தலைவியின் நினைவு மீக்கூர்தலால் மீண்டுவந்து அவளிடம் தஞ்சம் புகுதலை மையப் பொருளாகக் கொண்டது. கூடி வாழும் காலத்துத் தோழியிடம் தான் புறத்தொழுக்கம் பூண்டிருந்தபொழுது தலைவியின் ஒழுகலாறும், உயிர்த் தோழியின் ஒழுகலாறும் குறித்துத் தலைவன் தோழியிடம் உசாவிக் கேட்டறிந்தனன் என்பதை மையப் பொருளாகப் புலவர் அமைத்துள்ளார்.

களவொழுக்கத்தின்கண் வரைவு நீட்டித்தபொழுது தலைவியும், தோழியும் எவ்வாறு செயற்பட்டனர் என்பதைத் தோழியிடம் தலைவன் கேட்டறிவதாகப் பின் ஐந்து பாடல்களும் பிறங்குகின்றன.

சொல்லொழுங்கு, கருத்தொழுங்கு, யாப்பியல் ஒழுங்கு என்பனவற்றால் பாடல்கள் மேம்பட்டு விளங்குகின்றன. தலைவியின் விருப்பத்தை வெளிப்படுத்தும் பகுதிகள் இல்லறவியலின் மாட்சியைப் பேசுவன. தோழியின் விருப்பத்தை வெளிப்படுத்தும் பகுதிகள் கருப்பொருள்களின் வழியே புலப்படும் உள்ளுறைப் பொருளையும் ஓரோ வழி இறைச்சிப்

48. ஐங்குறுநூறு ஆராய்ச்சித் தெளிவுரை, ப. 19

பொருளையும் பயந்து ஓரம்போகியாரின் படைப்பாற்றலுக்குச் சான்று பகர்வன.

ஔவை அவர்கள் மருதம் நூற்றுக்கு எழுதிய உரை அவர்தம் மாணாக்கர் புலவர் கா. கோவிந்தன், எம்.ஏ அவர்களால் 1938இல் வெளியிடப்பட்ட முதல் உரை நூல் என்பதால் அதன் முதல் பத்திற்கு அமைந்த பழைய உரையுடன் ஔவை வழங்கியுள்ள ஆக்கம் மிக்க உரையின் திறத்தினை ஆராய்வதாக இம்முதல் இயல் அமைந்துள்ளது. இது மாதிரிக்கணக்கு. இந்நூலின் எஞ்சிய பகுதிகள் பயில்பவரின் வீட்டுக் கணக்கிற்கு விடப்பட்டன.

இனி, ஔவை அவர்கள் நற்றிணை நானூற்றுக்கு எழுதியுள்ள விரிவான விளக்கவுரையின் இயல்புகளை அடுத்து வரும் இயலில் காண்போம்.

2. நற்றிணை உரைத்திறம்

முன்னுரை

எட்டுத்தொகை இலக்கியங்களில் ஐங்குறுநூறு, நற்றிணை ஆகிய அன்பின் ஐந்திணை இலக்கியங்கட்கு உரைவேந்தர் ஔவை அவர்கள் விரிவான உரை வகுத்துள்ளார். இவற்றுள் ஐங்குறு நூற்றின் உரைத்திறம் குறித்து முந்தைய இயலில் கண்டோம். எஞ்சிய நற்றிணைக்கு அவர்கள் வரைந்துள்ள உரைத்திறம் குறித்து ஆய்வதற்கு முன்னர் நற்றிணை உரைத்தோற்றம் பற்றிய சில செய்திகளைக் குறிப்பிடுதல் சாலும்.

நற்றிணையினை ஏடுகளிலிருந்து கண்டெடுத்துப் புலமை நிறைந்த தம் உரையுடன் முதன்முதல் வெளியிட்ட சிறப்புக்குரியவர் பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர் ஆவார். உ.வே.சா. நூல் நிலையத்தார் ஒரு புதிய பதிப்பினை வித்துவான் எச்.வேங்கடராமன் எழுதிய உரையுடன் 1989-இல் வெளியிட்டுள்ளனர். வேறு சில உரையுடன் கூடிய பதிப்புக்களும் வந்துள்ளன.

ஔவை அவர்கள் மதுரைத் தியாகராசர் கலைக்கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றிய காலத்தில் பல ஆண்டுகளாகப் பல இடங்களிலும் தேடித் தொகுத்த ஏட்டுச்சுவடிகளைக் கொண்டு உருவாக்கிய ஒரு புதிய பதிப்பினையும் உரையினையும் சென்னை அருணா பதிப்பகத்தார் இரு தொகுதிகளாக [1966, 1968] வெளியிட்டுள்ளனர். முதல் தொகுதியின் முன்னுரையில்,

"...... இந்த ஆராய்ச்சிக்குப் பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர் பதிப்பும், சென்னை சைவ சித்தாந்த மகாசமாசச் சங்க இலக்கியப் பதிப்பும், தொல்காப்பியம், அகப்பொருள் விளக்கம், யாப்பருங்கலம், இலக்கண விளக்கம், வீரசோழியம் முதலியவற்றின் உரைகளில் காட்டப்பட்ட

நற்றிணைப் பாட்டுக்களும் செய்த உதவியை இங்கே குறிக்காமல் இருக்க முடியாது"[1]

என்று குறித்துள்ளார். தம் பதிப்பில் புதிய பாடங்கள் பற்பல கிடைத்துள்ளமையினையும் குறித்துள்ளனர். செய்யுள்களில் மட்டுமன்றிப் புலவர் பெயர்களிலும் பாடவேறுபாடுகளின் அடிப்படையில் பல மாற்றங்களையும் செய்துள்ளனர்.

இவ்வுரை நூலின் இரு சிறப்புக் கூறுகளை எடுத்துரைத்தல் வேண்டும்:-

1. அரும் பொருட் குறிப்பு [- Subject Index] p. xiii – xxiii.

2. இருவகைக் கைகோளிலும் இலக்கிய மாந்தர் கூற்றுவகை [Discourses of Akam Characters in the PreMarital and Post Marital life] pp. xxiv – xxx.

இவையாவும் இரண்டாம் தொகுதியின் (பாடல்கள், 201 - 400) முகப்பில் இடம்பெற்றவை.

ஒவ்வொரு பாடலுக்கும் உரை வகுப்பதற்கு முன்பு, அதனைப் பாடிய புலவரைப் பற்றிய குறிப்புக்கள் தரப் பெற்றுள்ளமை தனிச்சிறப்பு ஆகும்.

நற்றிணை - தொகுப்பும் அமைப்பும்

சங்ககாலத்துத் தமிழ் மக்களின் இன்ப வாழ்வியலை முதன்மைப் பொருண்மையாகக் கொண்டு புலனெறி வழக்கினைப் பின்பற்றிப் புனையப் பெற்ற தொகை இலக்கியங்களில் நற்றிணை நானூறும் ஒன்றாகும். பல்வேறு காலங்களிலும் இடங்களிலும் வாழ்ந்த புலவர் பெருமக்களால் பாடப்பெற்ற நானூறு பாக்களைத் தொகுத்து **நற்றிணை நானூறு** என்று வழங்கியவர் பெயர் அறியப்படவில்லை. இதனைத் தொகுப்பித்த அரசன் **பன்னாடு தந்த பாண்டியன் மாறன்** வழுதி ஆவான். இத்தொகை இலக்கியம் நற்றிணை என்றே பின்னோரால் வழங்கப்பெற்று அப்பெயரே பின்னர் நிலைபெற்றது. இதில் உள்ள பாக்களைப் பாடிய புலவர் நூற்று எழுபத்தைவர். ஐம்பதுக்கும் மேற்பட்ட பாக்களை யாத்தவர் பெயர் அறியப்படவில்லை. பாடலிற் பயின்றுவரும்

1. **நற்றிணை மூலமும் விளக்கவுரையும்**, முதல் தொகுதி, அருணா பதிப்பகம், சென்னை, 600 017, 1966, ப. X.

அருந்தொடரினால் புலவர் சிலர் பெயர் பெற்றுள்ளனர். அளவிற் குறுகிய குறுந்தொகையினையும் பெருகிய நெடுந்தொகை யினையும் போலன்றி இடைப்பட்ட அளவுடைய பாக்களைப் பெற்றமையால் நற்றிணை (- நல்ல திணை) எனப் பெயர் பெற்றது என்பர் **பேராசிரியர் தெ.பொ.மீ.** அவர்கள். வாழ்க்கையில் காணப்படும் இன்பம், துன்பம் ஆகிய இரண்டு ஓரங்களையும் விலக்கி நடுவே காணப்படுவதைப் **பொற்பாதை** (Golden Mean) எனப்படும் நற்பாதை என்று கிரேக்க மேதை **அரிசுடாட்டில்** தம் **நிக்கோமேக்கியன் எதிக்சு** (Nichomachean Ethics) என்ற அற நூலில் கூறியுள்ளதைப் பேராசிரியர் மேற்கோள் காட்டியுள்ளார். கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அரிசுடாட்டிலுக்கு முந்நூறு ஆண்டுகள் முற்பட்ட புத்தர்பிரான் போதித்த மாத்தியமிகம் (Middle Path) என்னும் நெறி, புலனின்பத்தில் அழுந்தியிருத்தல், நோன்புகளால் உடலை வருத்துதல் என்ற இரண்டிற்கும் இடைப்பட்டதே என்றும் அதுவே நன்னெறி என்றும் சுட்டப்பெற்றது. [His way was the Middle–path between the two extremes of self – indulgence and self mortification]. திருவள்ளுவர், மிகினும் குறையினும் நோய் செய்யும் (திருக். 941) என்றியம்புதல் மருத்துவத்துக்கு மட்டுமன்றி வாழ்வியலுக்கும் பொருந்தும். எனவே, நற்றிணை (-நல்ல திணை) எனப் பெயர் சூட்டப்பட்டமைக்கு அரிசுடாட்டில் மட்டுமல்லாமல், புத்தர் பிரானும் திருவள்ளுவரும் வழிகாட்டியாகக் கருதற்பாலர்.

அகமாந்தர் கூற்றுக்கள்

நற்றிணையில் இடம்பெறும் பாடல்கள் அகமாந்தர் கூற்றுக்களாக (Discourses) அமைந்துள்ளன. இவையாவும் முதன்மை அகமாந்தர் ஆகிய தலைவன், தலைவி, துணைமை அகமாந்தரில் முதலில் சுட்டத்தக்க தோழி, ஏனையோரில் நற்றாய், செவிலி, கண்டோர், தேர்ப்பாகன், விறலி, பொருட் பெண்டிர் என்போர் பேச்சுக்களாக யாக்கப் பெற்றுள்ளன. இருவகைக் கைகோளிலும் தோழியின் கூற்றுக்களாக 216 பாக்கள் இடம்பெறுதலின் காதல் நாடகத்தில் அவள் பங்கு ஏனையோரினும் மிக்கது. நற்றிணைப் பாடல்கள் காதற் பொருண்மையினைப் புனைந்துரைப்பனவெனினும், இடை இடையே வாழ்வியல் தகவுகள் பலவற்றையும் தூவியிருத்தல் பயில்பவரின் உள்ளத்தைப் பண்படுத்தவல்லன. வரலாற்றுக்

கூறுகள் பலவும் புலவர்களின் வரலாற்றுணர்வுக்கு எடுத்துக் காட்டாக இருப்பவை. படிக்கும் உள்ளங்களைப் பிடிக்கும் பாங்கில் உவமை, உருவகம், தன்மை நவிற்சி, உயர்வு நவிற்சி தற்குறிப்பேற்றம், முரண், சொல்லணி, சொற்பொருள் பின்வரு நிலையணி, நிரல்நிறை அணி உள்ளிட்ட பல்வகை அணிகளும் படைக்கப்பட்டிருத்தல் புலவர்களின் கற்பனைத் திறனைப் புலப்படுத்தும்.[2]

மக்களிடையே நிலவிய நம்பிக்கைகள் ஆகிய பல்லி நிமித்தம் *[169. 2 - 3]*, **விரிச்சிகேட்டல்** *[40.4]* குறிக்கப்பட்டுள்ளன. **முருகுபுணர்ந்து இயன்ற வள்ளி போல** *[82.4]* ஒருமுலை அறுத்த திருமா உண்ணி *[216. 8 – 9]* என்றும் வரும் தொன்மங்கள் தமிழகத்திற்கு உரியவை. **பன்னாட்டு வாணிகம்** பேசப்படுகிறது *[31. 8 - 11; 295. 4 - 6]*.

பாடல் அடி வரையறை

நற்றிணைப் பாடல்கள் 9 அடிச் சிறுமையும் 12 அடிப் பெருமையும் கொண்டவை. ஆயினும் ஓரடிமிக்கு 13 அடியில் ஏழு பாடல்களும் ஓரடி குறைந்து 8 அடியில் ஒரு பாடலும் காணப்படுகின்றன. கடவுள் வாழ்த்துப் பாடல் 7 அடியில் வந்துள்ளது.[3]

இப்பின்புலத்துடன் ஒளவை அவர்கள் வரைந்துள்ள **நற்றிணை மூலமும் விளக்கவுரையும்** என்ற நூலிலிருந்து அவர்தம் உரைத்திறனை அறிதற்குச் சில பாடல்களை மட்டும் அகமாந்தர் அடிப்படையில் நிரலே நோக்குவோம்.

களவொழுக்கத்தில் தலைவன் கூற்று

பராயனார்

1. ஒள்ளிழை மகளிரொடு ஓரையும் ஆடாய்
வள்ளிதழ் நெய்தல் தொடலையும் புனையாய்
விரிபூங் கானல் ஒரு சிறை நின்றோய்!
யாரையோநிற் றொழுதனெம் வினவுதும்

---

2. கந்தசாமி.சோ.ந., **நற்றிணை ஆராய்ச்சித் தெளிவுரை**, முதல் தொகுதி, மெய்யப்பன் பதிப்பகம், சென்னை, *2018*, ப. *4-7*.

3. கந்தசாமி.சோ.ந., **நற்றிணை ஆராய்ச்சித் தெளிவுரை**, இரண்டாம் தொகுதி, மெய்யப்பன் பதிப்பகம், சென்னை, *2019*, ப. *524*.

கண்டோர் தண்டா நலத்தை; தெள்திரைப்
பெருங்கடல் பரப்பின் அமர்ந்துறை அணங்கோ?
இருங்கழி மருங்கு நிலைபெற் றனையோ?
சொல்இனி மடந்தை! என்றனென்; அதன் எதிர்
முள்எயிற்று முறுவலும் திறந்தன;
பல்லிதழ் உண்கணும் பரந்தவால் பனியே-- [155].

திணை

நெய்தல்

கூற்று

1. இரண்டாம் கூட்டத்துத் தலைவியை எதிர்ப்பட்டுத் தலைவன் சொல்லியது.

2. உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் சொற்றதூஉம் ஆகும்.

புலவர் பெயர்

இதுவரையும் வந்துள்ள சமாசப்பதிப்பு, உ.வே.சா. நூல் நிலையப் பதிப்பு, மர்ரே பதிப்பு ஆகியவற்றில் இப்பாடலைப் பாடியவர் பெயர் பராயனார் என்றே அச்சிடப்பட்டுள்ளது. எனினும், ஒளவை அவர்கள் பாரதாயனார் என்பதுதான் அவர்தம் பிழையற்ற பெயர் என்பதற்கு இலக்கியச் சான்றும் கல்வெட்டுச் சான்றும் வழங்கியுள்ளார்.

"பாரதாயன் என்ற பெயர் இடைக்காலக் கல்வெட்டுக்களில் பயில வழங்குகிறது. பண்டைத் தமிழகத்தில் ஒரு குடியில் முதற்கண் பிறந்த ஆண்மகற்குப் பின் தோன்றும் மக்கள் அனைவரையும் பேணிப் புறந்தரல் வேண்டும் என்பது கடனாக இருந்தது. முதுமை மிக்குத் தம்மைத் தாமே பேணிக்கொள்ளும் வன்மை இழந்தோரைப் பேணுவதும் அவற்குக்கடன். இவ்வகையில் குடியில் உள்ள முதியரும் இளையரும் ஆகிய அனைவரும் அக்குடியிற் பிறந்த முன்னோனுக்குப் பாரம் எனப்படுவர். "பகடுபுறந் தருநர் பாரம் ஓம்பி" *[புறம். 35. 32]* என்றும், "பசித்தும் வாரேம் பாரமும் இலமே" *[புறம். 145.4]* என்றும் சான்றோர் குறிப்பதும் இக்கருத்துப் பற்றியேயாம்.

பாரத்தைப் புறந்தருதற்கு எனக் குடிப்பிறந்தார்க்கு அமைந்த உரிமை பாரதாயம் என வழங்கிற்று .... பாரதாயன் செல்வன் அரங்கன் எனவும்... பாரதாயன் சிங்கன் எனவும் கல்வெட்டுக்கள் குறிப்பது காண்க."4

பாடவேறுபாடு: பல பதிப்புக்களிலும் ஓரையும் தொடலையும் முறுவலும் திறந்தன எனக் காணப்படும். இவற்றை முறையே ஓரை, தொடலை, முறுவல் முகிழ்ப்ப என்று ஔவை பாடம் கொண்டனர். இவற்றைப் பற்றிய ஆய்வு Textual Criticism எனப்படும்.

பாடலின் பொருண்மை

பாடிய புலவரைப் பற்றிய குறிப்பினைத் தொடர்ந்து, பாடலின் பிழிவினைத் தூய, செவ்விய நடையில் செஞ்சொற்களில் நாடகப் பாங்கில் தந்திருத்தல் படிப்பவர்க்கு இலக்கிய இன்பம் பயப்பது ஆகும்.

இப்பாடலுக்கு இருவகைக் கூற்றுகளைக் கொடுத்துள்ளனர். அவற்றுள் முதல் கூற்றுக்குரிய பொருண்மையினைக் காண்போம்.

"இடந்தலைப்பாட்டின்கண் தலைமகளைக் கண்டு இன்புற்ற திறத்தைத் தன் நெஞ்சொடு கூறுவானாய்த் தலைவி கேட்பக் கூறியது. இருவர் உள்ளத்தும் காதல் உணர்வு ஒத்து நின்றமை உணர்த்துமாறு காண்க."5

இப்பாடலின் இரண்டாம் கூற்றுக்குரிய விளக்கம் இவர் உரையில் இடம்பெறவில்லை. அதன் பொருண்மையினைக் காண்போம்.

"பரத்தையிற் பிரிந்துறையும் தலைவன் தன் மனைவி மகப்பெற்றாள் என்ற செய்தியைத் தோழியின் வாயிலாக அறிந்து வீடு திரும்பினான். அவன் பலவாறு இரந்தும் பணிந்தும் பேசியும் தலைவி ஊடல் தணிந்திலள். தொடர்ந்து அவளை நோக்கி அவன் உரைத்தது.... இப்பாடல் களவொழுக்கத்திற்குப் பொருந்துவதாகக் காணப்படுதலின், பரத்தையிற் பிரிந்து வந்த தலைவன் கூற்றாகக் கொள்ளுதலில் சிறப்பில்லை. எனவே, பொருத்தம் வாய்ந்த முதற் கூற்றிற்குரிய விளக்கத்தினையே ஔவை வழங்கினார் என்று கருதுதல் சாலும்.

4. துரைசாமிப் பிள்ளை, ஔவை, சு., **நற்றிணை மூலமும் விளக்கவுரையும்**, தொகுதி - 1 அருணா பதிப்பகம், சென்னை, 1966, ப. 610-611.
5. துரைசாமிப் பிள்ளை, ஔவை, சு., **நற்றிணை மூலமும் விளக்கவுரையும்**, தொகுதி - 1 அருணா பதிப்பகம், சென்னை, 1966, ப. 615.

இப்பாடற்குச் சொற்பொருள் உரைத்தலும் தொகுத்துக் கூறுதலும், விளக்கம் தருதலும் ஔவையின் உரைப்போக்கில் காணப்படும் தனிச்சிறப்பு ஆகும். இப்பாடற் பொருளைத் தொகுத்துக்கூறும் உரைநடை வனப்பினை நோக்குவோம்.

> "முன்னாள் கானற்சோலையின்கண் தலைமகளை எதிர்ப்பட்டு இயற்கைப் புணர்ச்சி பெற்று நீங்கிய தலைமகன், வழிநாள் அச்சோலைக்குச் சென்றால் அவளைக் காணலாம் என்ற கருத்தில் வந்தான். வந்தவன் கடற்கரையில் உயரிய ஆடையும் ஒள்ளிய இழையும் அணிந்த இளமகளிர் ஓரை ஆடுவதும் சிலர் கழிநெய்தல் கொய்து மாலை தொடுப்பதும் கண்டு, தலைமகளைக் காணாது சோலையிடை அவள் தனித்து முன்னாள் நின்றாங்கு நிற்பாள் என எண்ணி வந்தானாகலின், தன் எண்ணம் பழுதாகாமைக்குப் பெருமகிழ்வு எய்திச் சொல்லாடும் வேட்கையுற்று, ஒள்ளிழை மகளிரொடு ஓரை ஆடாய் என்றான். [ஒள்ளிழை என்றதனைத் தலைவிக்கு அண்மை விளி ஆக்கலும் ஆம்]. ஒத்த திருவும் உருவும் உடையராகலின், அவரோடு கூடி விளையாடப் போந்த நீ, அது செய்யாது ஈண்டுத் தனித்து நிற்பது என்னை அருள்வது கருதிப் போலும் என்றும்; ஓரையாடலை உவவாய் ஆயின் கழிக்கட் பூத்த நெய்தலைக் கொய்து மாலை தொடுக்கும் மாண்புடைச் செயலை மேற்கோடல் நினக்குப் பொருந்திற்றாக, அது தானும் செய்கின்றிலை; என்னையோ நின் கருத்து என்றும் இரந்து பின்னிற்றலின், வள்ளிதழ் நெய்தல் தொடலை புனையாய் என்றான்."6

இவ்வாறே, 'விரிபூங்கானல் ஒருசிறை நின்றோய், யாரையோ நின் தொழுதனம் வினவுதும், கண்டோர்தண்டா நலத்தை, பெருங்கடற் பரப்பின் அமர்ந்துறை அணங்கோ! இருங்கழி மருங்கின் நிலை பெற்றனையோ? சொல் இனி மடந்தை என்றனென், முள்எயிற்று முறுவல் முகிழ்ப்பப் பல்இதழ் உண்கண் பரந்தவால் பனியே' என்ற எஞ்சிய தொடர்களுக்கும் உரிய பொருட் சிறப்பினை நாடகப் பாங்கில் உணர்ச்சி பொங்க ஒள்ளிய தமிழில் பெருமித நடையில் ஔவை அவர்கள் வழங்கியிருக்கும் அழகு பாராட்டற்பாலது.

---

6. துரைசாமிப் பிள்ளை, ஔவை, சு., **நற்றிணை மூலமும் விளக்கவுரையும்**, தொகுதி - 1 அருணா பதிப்பகம், சென்னை, *1966*, ப. *613- 614*.

கற்பொழுக்கத்தில் தலைவி கூற்று - அம்மூவனார்

2. தோளும் அழியும் நாளும் சென்றென;
நீளிடை அத்தம் நோக்கி வாளற்றுக்
கண்ணும் காட்சி தெளிவின; என்நீத்து
அறிவும் மயங்கிப் பிறிதா கின்றே;
நோயும் பெருகும்; மாலையும் வந்தன்று;
யாங்கா குவன்கொல் யானே? ஈங்கோ
சாதல் அஞ்சேன்; அஞ்சுவல் சாவின்
பிறப்புப் பிறிது ஆகுவது ஆயின்
மறக்குவென் கொல் என் காதலன் எனவே. ***[397].***

திணை

பாலை

கூற்று

பிரிவிடை ஆற்றாளாகி நின்ற தலைமகளை வற்புறாநின்ற தோழிக்கு 'ஆற்றுவல்' என்பது பட நின்றது.

புலவர் பற்றிய குறிப்பு

குறிஞ்சிக் கபிலர், பாலை பாடிய பெருங்கடுங்கோ என்பாரைப் போல, நெய்தல் அம்மூவனார் எனப் போற்றப்படுபவர். அகநானூற்றில் ஆறு பாடல்களும் *[10, 35, 140, 280, 370, 390]*, ஐங்குறுநூற்றில் நெய்தல் நூறும் *[101 - 200]*, குறுந்தொகையில் பதினொரு பாடல்களும் *[49, 125, 163, 303, 306, 318, 327, 340, 351, 397, 401]*, நற்றிணையில் பத்துப் பாடல்களும் *[4, 35, 76, 138, 275, 307, 315, 327, 395, 397]* அம்மூவனார் பாடியவை. புறத்திணைப் பாடல் எதுவும் பாடியதாகக் கிடைக்கவில்லை. கடற்கரைப் பகுதியில் இவர் வாழ்ந்தவராதல் வேண்டும் என்பதற்கு நெய்தல் திணையினைப் பற்றி மிகுதியாக இவர் பாடியிருத்தல் சான்றாகக் கொள்ளத்தக்கது.

பாட வேறுபாடு

சென்றன *[1]*, ஏரும், பேரும் *[5]*. மதுரைத் தமிழ்ச் சங்கத்து ஏட்டில் அம்மூவனார் பெயர்க்கு மாறாகக் கழார்க்கீரன் எயிற்றியார் பெயர் காணப்படுகிறது.[7]

---

7. நற்றிணை மூலமும் விளக்கவுரையும், ப. 1-486.

பலர் பதிப்புக்களில், தோளும் அழியும் நாளும் சென்றென– என்று காணப்படுகிறது. இதன் பொருள்: நாளும் சென்றென - தலைவன் திரும்பி வருவதாகக் குறித்துச் சென்ற பருவமும் கழிந்ததால், தோளும் அழியும் - என்தோள்களும் பொலிவு நீங்கும்.[8]

“தோளும் அழியும் - என்தோள்களும் மெலிந்து நலம் அழிந்தன; நாளும் சென்றன - தலைவர் குறித்த நாள்களும் கழிந்தன....”[9]

இவற்றுள் முதல் உரை, குறித்த நாள் கடந்துவிட்டதால் தோளும் நலம் குன்றின; உம்மையால் பிற உறுப்புக்களும் நலம் குன்றின என்று நலம் குன்றியதற்குக் காரணம் காட்டுகிறது.

இரண்டாவதாக உள்ள ஔவை உரை; “ஆற்றாமையால் பேசும் தலைவியின் தோள்களும் மெலிந்தன, குறித்த நாள்களும் சென்றன” என்று மெலிவுக்குக் காரணம் கற்பிக்காமல் கிடந்தாங்குச் செல்கிறது.

பலர் பதிப்புக்களில், / நோயும் பெருகும் / என்றுள்ளது. ஔவைப் பதிப்பில் / நோயும் ஏரும் / என்று பாடம் கொள்ளப்பட்டுக் ‘காதற்காமநோயும் மிக்கு எழா நின்றது’ என்று உரைகூறப்பட்டது. / ஏர் / என்னும் பல பொருள் ஒரு சொல்லுக்கு இங்கு எழுதல் என்று பொருள் கொள்ளப்பட்டது.

பாடலின் பொருண்மை

“என் தோள்களும் மெலிந்து நலம் அழிந்தன. தலைவர் குறித்த நாள்களும் கழிந்தன. நீண்ட சுரத்திடையே அவர் வரும் வழியை நோக்கி நோக்கிக் கண்களும் ஒளியிழந்து காணும் திறம் குன்றின. என் அறிவும் என்னின் நீங்கி மயங்கிச் செயலற்று ஒழிந்தது. காதற் காமநோயும் மிக்கு எழாநின்றது. மாலைப்போதும் வந்துவிட்டது. யான் என்னாவேனோ அறியேன். இவ்விடத்து நோய் கைம்மிகின் எய்தும் இறந்து பாட்டுக்கு அஞ்சேனாயினும், இறந்தால் மறுபிறப்பு வேறாகிவிடுமாயின், என் காதலனை மறந்தொழிவேனோ என்று அஞ்சுகின்றேன் [ஆதலால், அவர் பிரிவை ஆற்றியிருப்பேன், நீகவலற்க] என்றவாறு.[10]

---

8. நற்றிணை ஆராய்ச்சித் தெளிவுரை, தொகுதி – 1, ப. 257.

9. நற்றிணை மூலமும் விளக்கவுரையும், ப. 1486.

10. அதே நூல், ப.1486-1487.

"தோளும் அழியும்; நாளும் சென்றன; அத்தம் நோக்கிக் கண்ணும் வாளற்றுக் காட்சி தவ்வின. அறிவும் என் நீத்து மயங்கிப் பிறிதாகின்றது. நோயும் ஏரும், மாலையும் வந்தன்று; யாங்காகுவென்கொல்; தோழி, ஈங்குச் சாதல் அஞ்சேன்; சாவின் பிறப்புப் பிறிதாகுவதாயின், என் காதலனை மறக்குவென் கொல் என அஞ்சுவல் - எனக்கூட்டி வினைமுடிபு செய்க" என்று சொற்பொருள் இயைபு நோக்கிப் பாடல் தொடர்களைப் பொருள் கொள்ளுதற்கு எளிமையாக ஔவை உரை அமைத்துக் கொடுத்திருத்தல் நோக்கத்தக்கது.[11]

அருஞ்சொற் பயிற்சி

இப்பாடலிற் பயின்றுள்ள அருஞ்சொல், அருந்தொடர்கள் ஏனைய சங்கப் பாக்களில் வந்துள்ளமைக்குச் சில எடுத்துக்காட்டுக்களைக் காண்போம்.

1.வாளற்று – ஒளி மழுங்கி

கண்ணே, நோக்கி நோக்கி வாள் இழந்தனவே *[குறு. 44. 1-2]*

கண்ணே, வாள் ஈர் வடியின் வடிவுஇழந்தனவே *[நற். 133. 1-2]*

வாள்அற்றுப் புற்கென்ற கண்ணும் *[திருக். 1261]*

2.தௌவின - தவ்வின *[ஔவை பாடம்]*

இச்சொல் இவ்வடிவில் இந்த ஒரு பாடலில்தான் *[நற். 397.3]* காணப்படுகிறது.

கற்பொழுக்கத்தில் தோழி கூற்று

வண்ணப்புறக் கந்தரத்தனார்

3. மன்னாப் பொருட்பிணி முன்னி, "இன்னதை
வளை அணி முன்கைநின் இகுளைக்கு உணர்த்தெனப்
பன்மாண் இரத்திர் ஆயின், "சென்ம்" என
விடுநள் ஆதலும் உரியள்; விடினே,
கண்ணும் நுதலும் நீவி, முன்னின்று
பிரிதல் வல்லிரோ? ஐய! செல்வர்
வகைஅமர் நல்இல் அகஇறை உறையும்
வண்ணப் புறவின் செங்கால் சேவல்

11. நற்றிணை மூலமும் விளக்கவுரையும், ப. 1486.அதே நூல், ப. 1487.

வீழ்துணைப் பயிரும் கையறு முரல்குரல்
நும்இலள் புலம்பக் கேட்டொறும்
பொம்மல் ஓதி பெருவிதுப்பு உறவே. [71]

திணை

பாலை

கூற்று

தலைவனைத் தோழி செலவு அழுங்குவித்தது.

புலவர் பற்றிய குறிப்பு

வண்ணப்புறக் கந்தரத்தனார் இப்பாடலை யாத்தவர். சமாசப் பதிப்பில் கந்தரத்தனார், வண்ணப்புறக் கந்தரத்தனார் என்போர் தனித்தனிப் புலவராகவே எண்ணப் பெற்றுள்ளனர். கந்தரத்தனார் என்னும் புலவர் அகநானூற்றில் மூன்று பாடல்களும் *[23, 95, 191]*, குறுந்தொகையில் ஒரு பாடலும் *[155]*, நற்றிணையில் நான்கு பாடல்களும் *[116, 146, 238, 306]* யாத்தவர். இவரின் வேறாக எண்ணப்பெறும் வண்ணப்புறக் கந்தரத்தனார் அகநானூற்றில் ஒரு பாடலும் *[49]*, நற்றிணையில் ஒரு பாடலும் *[71]* பாடியவர்.

ஔவை அவர்கள்,

> "கரந்தரத்தனார் என்ற பெயருடையார் பலர் அந்நாளில் இருந்தமையின், இவர் வண்ணப்புறக் கந்தரத்தனார் என்று குறிக்கப்பட்டனர். புறாவின் சேவலை, "வண்ணப் புறவின் செங்காற் சேவல்" என இப்பாட்டின்கண் *[நற். 71.8]*. சிறப்பித்துப் பாடியிருக்கும் நலன் கண்டு இவ்வாறு இவரைச் சான்றோர் வழங்கினர் எனக் கூறுதலும் உண்டு. வேறு காரணம் புலப்படாமையின் அதனை அவ்வாறே கொள்வது பொருத்தமாகும்."

என்று இப்பாடலில் ஆசிரியரைப் பற்றிக் குறித்துள்ள கருத்து ஏற்புடையது. தொடர்ந்து, இப்புலவர் பாடிய அகநானூற்றுப் பாடலின் *[49]* சாரத்தினைத் தெள்ளிய நடையில் தொகுத்துக் கூறினார். பின்னர், 'மன்னாப் பொருட் பிணி' எனத் தொடங்கும் இந்த நற்றிணைப் பாடலின் பொழிப்பினையும் தந்துள்ளார். பின்னர், பாடலும் பதவுரையும் இடம்பெற்றன.

பாட வேறுபாடு

முன்னைய பதிப்புக்களில் காணப்படாத பல புதிய பாடங்கள் சுவடிகளிலிருந்து ஔவை வழங்கியுள்ளனவற்றைக் காண்போம்.

கொண்ட பாடம்		புதுப்பாடம்
1. நின் இகுளைக்கு உணர்த்தென [2]	-	நின்னின் கிளைக்கு உணர்த்தெனா
2. ஐய [6]	-	தெய்ய
3. வகையமை [7]	-	வகையமர்
4. தாழ்குரல்	-	முரல்குரல்
5. கையறுபு புலம்பும்	-	புலம்பக் கேட்டொறும்
6. பெருவிதுப்புறுமே [11]	-	பெருவிதுப்புறவே.

பாடபேதங்களின் தரத்தினையும் திறத்தினையும் ஆய்வதற்குச் சுவடிகள் மட்டும் போதா. சங்க இலக்கியச் சொற்கோவையில் அச்சொற்கள் பயின்றுள்ளனவா? என்பதும் ஆராயப்பெறுதல் வேண்டும்.

எடுத்துக்காட்டாக, உணர்த்தென, உணர்த்தெனா என்பன வற்றை நோக்குவோம். /என/, /எனா/ என்ற இரு வடிவங்களும் /என்று/என்ற பொருளில் சங்கப் பாக்களில் பயின்றுள்ளன. எ.டு.

1. என - என்று

/என/ என்ற வடிவத்தில் பல நூறு இடங்களில் பயின்றுள்ளது. சில இடங்களைச் சுட்டுதல் சாலும்.

1. 'அறத்தாறு அன்று' என.	அகம், 5. 16 - 17
2. 'வருக இரவலர்' என வேட்டோளே.	ஐங். 5. 2 - 3
3. '....ஈயாமை இழிவு' என	கலி. 2. 15
4. 'நல்லோள் கணவன் இவன்' என.	குறு. 14. 5
5. '.....அரிய ஆகும் நமக்கு' என.	நற். 4.6
6. 'நீ வாழியர் இவ்உலகத்தோர்க்கு' என.	பதிற், 15.24
7. 'தோய்ந்தது யாது' என.....	பரி. 6.91
8. 'நும் அரண் சேர்மின்' என.	புறம். 9.5
9. வாழிய நெடிது' என.....	பெரும். 461
10. 'வம்' எனக் கூஉய்.	பொரு. 101.

இவ்விடங்களில் எல்லாம் /என – என்று/ என்ற பொருளில் ஒரு மேற்கோள் வாக்கியத்தினை (Quotative Sentence) முடிக்கும் சொல்லாக வந்துள்ளது. /என/ உவம உருபாகவும் எண்ணுப் பொருள் உணர்த்தும் இடைச்சொல்லாகவும் வரும் இடங்கள் எண்ணில. இனி, /எனா – என்று/ என்ற பொருளில் வழங்குதல் பற்றிச் சிந்திப்போம்.

2. எனா - என்று [எனாஅ, அளபெடுத்த வடிவம்]

/எனா/ இரண்டு இடங்களில் பயின்றுள்ளது. காண்க:

1. 'புலர்வதுகொல் அவன் நட்பு' எனா. (நற். 72.10)

2. 'யான் இசைப்பின் நனி நன்று' எனா ..... (புறம். 387.15)

/எனாஅ/ என்ற வடிவத்திலும் பயின்றுள்ளது. [பரி. 1.38, புறம். 169.2]

எனவே, /என/ என்று என்ற பொருளில் /எனா/ என்ற சொல்லைக் காட்டிலும் பெருவழக்காகப் பயின்றிருத்தலின் அதுவே மூலபாடமாகக் கொள்ளுவதில் தவறில்லை எனத் தோன்றுகிறது. எனினும் உரையாசிரியர், /எனா/ எதிர்மறைப் பொருளை உணர்த்துவதாகக் கொண்டு, "எனா- என்று என்பாற் சொல்லுதலை விட்டு" என்று புதுப்பொருள் புகன்றனர்.

பாடலின் பொருண்மை

"நிலைபேறு இல்லாத பொருளை ஈட்டுவது நன்று என்று எண்ணி, எனது இப்பிரிவை வளையணிந்த முன்கையை உடைய நின்தோழிக்கு உணர்த்துக என்று என்பாற் சொல்லுதலை விட்டு, தலைமகள்பாற் சொல்லிப் பன்முறையும் இரந்து கேட்பீராயின், சென்று வருவீராமின் என ஒரு கால் விடை தரினும் தருவள். அவ்வாறு விடை நல்கி விடுவாளாயினும், அவளுடைய கண்களையும் நெற்றியையும் தைவந்து, முன்பு நின்று பிரிவு சொல்லி நீங்கவல்லீரோ? ஒருபோதும் மாட்டீர். செல்வர் கட்டிய பல்வேறு வகைகள் அமைந்த நல்ல வீட்டின் இறைப் பக்கத்தில் அமைந்த கூட்டில் வாழும் வண்ணப்புறாவினது சிவந்த காலையுடைய ஆண், தான் காதலிக்கும் பெடைப் புறாவை அழைக்கும் தாழ்ந்த ஒசையையுடைய குரலைக் கேட்குந்தோறும் நும்மோடே நுமது இல்லத்தே கூடியிருந் தாளாயினும், வேட்கைமிக்குச் செயலற்றுத் தனிமைத்துயர் உழக்கும் பொற்புமிக்க கூந்தலை உடைய தலைமகள் நின்னைக் கூடற்கண் பெரிதும் விரைகுவள் ஆகலான் என்றவாறு."[12]

சொற்பொருள் உரைப்பதாக அமைந்த இவ்வுரைப்பகுதி பாடலின் பொருண்மையினைத் தெளிவாகப் புலப்படுத்துதல் தனிச்சிறப்பு ஆகும். உரையாசிரியர், சொற்களைப் பொருளியைபு நோக்கி வினை முடிபு காட்டிச் செல்லுதல் நோக்குக:

---

12. நற்றிணை ஆராய்ச்சித் தெளிவுரை, தொகுதி - 1, ப. 257. ப. 280-281.

"ஐய, பொருட்பிணி முன்னி, இன்னாத இகுளைக்கு உணர்த்து எனாச் சொல்லுதலை விடுத்து இரத்திராயின், சென்ம் என விடுநளாதலும் உரியள்; விடின், பொம்மலோதி பெருவிதுப்புறுமாகலான், நீவிர் முன்னின்று பிரிதல் வல்லிரோ? மாட்டீர் எனக் கூட்டி வினை முடிபு செய்க."[13]

இவ்வாறு கூறிய பின்னர், ஒவ்வொரு தொடராகப் பிரித்தெடுத்து நுண்பொருள் விளக்கம் தந்துள்ள பகுதி படித்து மகிழத்தக்கது.

இறைச்சிப் பொருள்

இப்பாடலிற் பயின்றுள்ள இறைச்சிப் பொருளை நோக்குவோம்.

கருப்பொருள்		**இறைச்சிப் பொருள்**
1. சேவல் புறா	-	தலைவன்
2. துணைப்புறா	-	தலைவி
3. சேவல் புறா மீக்கூர்ந்த	-	தலைவன் தலைவியை இனிமேல்
காதலால் தன்துணைப்		தான் அன்பு பாராட்டி உரையாடி
புறவினைக் குரலெடுத்துக் கூப்பிடும். [நிகழ்காலம்]		இன்புறுவான். [எதிர்காலம்]

அருஞ்சொற் பயிற்சி

இனி, இப்பாடலில் பயின்றுள்ள அருஞ்சொற்கள், தொடர்கள் ஆகியவற்றில் ஒரு சில சங்கப் பாக்களில் வந்துள்ளமைக்குச் சில சான்றுகளைக் காண்போம்.[14]

1. மன்னாப் பொருட்பிணி [மன்னா - மன்னாத, நில்லாத, நிலையில்லாத]

   மன்னாப் பொருட்பிணிப் பிரிதும்யாம் எனவே. (நற். 46.11)

   நில்லாப் பொருட்பிணிப் பிரிந்த நீயே. (அகம். 79.17)

2. பன்மாண் - பலமுறை

   பன்மாண் தாழக் கூறிய தகைசால் நன்மொழி. (அகம். 29.10 - 11)

---

13. நற்றிணை ஆராய்ச்சித் தெளிவுரை, ப. 281
14. அதே நூல், தொகுதி – 2, ப. 393.

பன்மாண் .....நம்மோடு ஆடிய. *(ஐங். 115. 1 - 2)*

குறுமகள் பன்மாண் ஆகம் மணந்துவக் கும்மே.

(நற். 189. 6 - 7)

3. பொம்மல் ஓதி [பொலிவுடைய கூந்தல்; அன்மொழித் தொகையாகக் கூந்தலை உடையவளைக் குறித்தது]

பொம்மல் ஓதி! நம்மொடு ஒராங்குச் செலவயர்ந்தனரால்.

(அகம். 65. 8 - 9)

பொம்மல் ஓதி! நம்மிவண் ஒழியச் செல்ப என்ப......

(நற். 129. 3 - 4)

களவியல் காலத்து நற்றாய் கூற்று

மிளைக்கந்தன் நாகனார்/இனிசந்த நாகனார்

4.மிளகுபெய் தனைய சுவைய புன்காய்
உலறுதலை உகாஅய்ச் சிதர்சிதர்ந்து உண்ட
புலம்புகொள் நெடுஞ்சினை ஏறி நினைந்து தன்
பொறிகிளர் எருத்தம் வெறிபட மறுகிப்
புன்புறா உயவும் வெந்துகள் இயவின்
நயந்த காதலற் புணர்ந்தனள் ஆயினும்
சிவந்தொளி மழுங்கி அமர்த்தன கொல்லோ
கோதை மயங்கினும் குறுந்தொடி நெகிழினும்
காழ்பெயல் அல்குல் காசுமுறை திரியினும்
மாணலம் கையறக் கலுழும் என்
மாயக் குறுமகள் மலர்ஏர் கண்ணே. **[66]**

திணை: பாலை

கூற்று:

மனைமருட்சி [நற்றாய் கூற்று]

பாடவேறுபாடு

புன்கால் [1], காசு [9], மாணலம் [10]. மனையின்கண் தாய் மருண்டது.

பாடிய புலவர்

சமாசப் பதிப்பு உள்ளிட்ட பல பதிப்புக்களிலும் இப்பாடலை யாத்தவர் இனிசந்த நாகனார் என்றே காணப்படுகிறது. எனினும், ஔவை அவர்கள்,

"இச்சான்றோர் பெயர் ஏடுகளில் இளைக்கந்தன் நாகனார் என்றும் அச்சுப்பிரதியில் இனிச்சந்தனாகனார் என்றும்

காணப்படுகிறது. புதுப்பட்டி ஏடு ஒன்றுதான் மிளைக்கந்தன் நாகனார் என்று குறிக்கிறது."[15]

என்று குறிப்பிட்டுள்ளார்.

திணை விளக்கம்

உலறுதலை உகாய், புறா, வெந்துகள் இயவு என்ற குறிப்புக்களால் இப்பாடல் பாலைத் திணைக்கு உரியது.

கூற்று விளக்கம்

எல்லாப் பதிப்புக்களிலும் மனைமருட்சி என்றுள்ளது. ஒளவையின் பதிப்பில் கூடுதலாக, 'மனையின்கண் தாய் மருண்டது' என்று காணப்படுகிறது.

மனைமருட்சி என்ற கூற்று தொல்காப்பியத்தில் கூறப்படவில்லை. நற்றிணைப் பாக்களைத் தொகுத்த பொழுது அல்லது பின்னர் இது சேர்க்கப்பட்டிருத்தல் கூடும்.

நம்பி அகப்பொருள் விளக்கத்தில்,

"நிமித்தம் போற்றலும் சுரம்தணி வித்தலும்
தன்மகள் மென்மைத் தன்மைக்கு இரங்கலும்
இளமைத் தன்மைக்கு உளம்மெலிந்து இரங்கலும்
அச்சத் தன்மைக்கு அச்சமுற்று இரங்கலும்
எனஇவை ஐந்தும் அனைமருட்சிக்கு உரிய". *[186]*

என வரும் நூற்பா எண்ணத்தக்கது. அனை - அன்னை, இடைக்குறை. அனை மருட்சி - அன்னை மருட்சி அடைதல். அன்னை நற்றாய் என்றும் குறிக்கப் பெற்றிருத்தல் சுட்டத்தக்கது. மனை மருட்சி - தன்மனையின்கண் இருந்து அன்னை, தலைவனுடன் உடன்போக்கிற் சென்ற தன் மகளை எண்ணி மயங்குதல் என்பது பொருள்.

இப்பாடலில், சுற்றத்தார் தம்மணத்திற்கு இசைவு தராமையின், தலைவன் தலைவியை உடன்கொண்டு அயலூர் சென்றனனாக, ஈன்ற தாயாகிய நற்றாய், கொடிய பாலை வழியில் தன்னை நயந்த காதலனொடு தன்மகள் சென்றனளாயினும், அவள் மலர்க் கண்கள் வெம்மையால் ஒளி மழுங்கிக் கலங்கினவோ? என்று தன்மனையகத்தில் மருண்டு வருந்திக் கூறியது எனக் கொள்ளுதல் சாலும்.[16]

---

15. நற்றிணை மூலமும் விளக்கவுரையும், ப. 261.
16. நற்றிணை ஆராய்ச்சித் தெளிவுரை, தொகுதி – 1, ப. 391.

பாடற்பொருண்மை

"புல்லிய அடியையும் உலர்ந்த கோடுகளையும் உடைய உகாய் மரத்தின் மிளகைச் சுவைத்தாற் போன்ற சுவையினை உடைய காயை மொய்த்த வண்டுகளை விலக்கிச் சிதைத்து உண்ட புல்லிய புறாவினது சேவல், தனித்துயர்ந்த நெடிய கிளையிடத்தே இருந்து தன்பெடைப் புறாவை நினைந்து, புள்ளி பொருந்திய கழுத்திடம் எல்லாம் உகாய்க் காயின் மணம் உண்டாகக் கோதி வருந்தும் வெவ்விய துகள் படிந்த சுரத்தைக் கடந்து தன்னைக் காதலித்த தலைவனொடு கூடிச் சென்றாளாயினும், வழிநடை வருத்தத்தால் சிவந்து ஒளி மழுங்கி அமர்த்துத் தோன்றுகின்றனவோ என்னவோ அறியேன். தான் சூடிய மாலை சிக்குண்டாலும், கையிலிட்ட சிறுவளை நெகிழ்ந்தாலும், கோவையாகத் தொடுத்துப் பெய்யப்பட்ட மேகலையிடத்துக் காசு நிரல்முறையில் சிறிது மாறினும் ஆயத்தாரால் ஒப்பனை செய்யப்பட்ட தனது அழகு குன்றியதாகக் கருதி வருந்தும், மாமை நிறம் உடைய என் இளமகளின் மலர் போன்ற கண்கள்."[17]

என்று பாடலின் பொருட் கூறுகளைத் தெளிவுபடத் தொகுத்துக் கூறியுள்ள ஔவையின் தமிழ் அனைவராலும் பயின்று மகிழத்தக்கது.

இப்பாடலின் சொல்லோட்டத்தினைக் கருத்திற் கொண்டு,

"மயங்கினும், நெகிழினும், முறைதிரியினும்
ஆய்நலம் கையறக் கலுழும் என் குறுமகள் கண்.
இயவின் புணர்ந்தன ளாயினும், சிவந்து ஒளி
மழுங்கி அமர்த்தன கொல்லோ என மாறிக்கூட்டி
வினைமுடிவு செய்க".

என்று அமைத்திருத்தல் நோக்கத்தக்கது. பின்னர், ஒவ்வொரு தொடரின் நுண்பொருளையும் தெளிந்த சொற்களில் செம்மாந்த நடையில் எடுத்துரைக்கும் பகுதிகளைப் படித்து மகிழ்தல் வேண்டும்.

சேவல்புறா தன் பெடையினை நினைந்து வருந்துதற்குரிய பாலை வழி என்றதால், நயந்த காதலனுடன் செல்லும் தன் மகள் அக்காட்சியைக் கண்டு இன்புறுவாள் என்ற குறிப்பும் நோக்குதற்கு உரியது.

---

17. நற்றிணை மூலமும் விளக்கவுரையும், ப. 262.

களவியல் காலத்துச் செவிலி கூற்று

கயமனார்

5. "சேயின் வரூஉம்[1] மதவலி! யா உயர்ந்து
ஓமை நீடிய கானிடை அத்தம்
முன்நாள்[2] உம்பர்க் கழிந்த என்மகள்
கண்பட நீர் ஆழ்ந் தன்றே[3]; தந்தை
தன்ஊர்[4] இடவயின் தொழூவேன்[5]; நுண்பல்
கோடேந்து அல்குல் அரும்பிய திதலை
வார்ந்திலங்கு வாள்எயிற்றுப் பொலிந்த தாஅர்ச்
சில்வளை பல்கூந்தலலே அவளே;
மையணல் எருத்தின் முன்பின்[6] தடக்கை
வல்வில் அம்பின் எய்யா[7] வண்மகிழ்த்
தந்தை தன்ஊர் இதுவே;
ஈன்றேன்[8] யானே; பொலிகநும் பெயரே! [198]

திணை

பாலை

கூற்று

பின்சென்ற செவிலி இடைச்சுரத்துக் கண்டார்க்குச் சொல்லியது.

பாட வேறுபாடு (ஔவை)

1. சேயென வரூஉம் [1], 2. முன்னாள் [3], 3. கண் படுபு ஆன்றனிர் [4], 4. கொன்னூர் [5], 5. தொழூவேன் உரைமோ [5], 6. மொய்வலி [9] 7. ஒல்கா [10], 8. வந்தேன் [12].

பாடிய புலவர்

அகநானூற்றில் பன்னிரு பாடல்களும் [7, 17, 145, 189, 195, 219, 221, 259, 275, 321, 383, 397], குறுந்தொகையில் நான்கு பாடல்களும் [9, 356, 378, 396], நற்றிணையில் ஆறு பாடல்களும் [12, 198, 279, 293, 305, 324], புறநானூற்றில் ஒரு பாடலும் [254] இவர் பாடியவை.

திணை விளக்கம்

யா, ஓமை, கானிடை அத்தம், உம்பர்க் கழிந்த என்மகள் [பிரிவு] என்ற குறிப்புக்களால் இப்பாடல் பாலைத் திணை ஆயிற்று.

கூற்று விளக்கம்

உடன்போக்கில் தலைவனுடன் சென்ற தலைவியைத் தேடிச் சென்ற செவிலி, வழியில் தலைவி ஒருத்தியும் தலைவன் ஒருவனும் எதிரே வரக்கண்டு, அவர்களைத் தன்மகள் என்றும் மகளின் மணாளன் என்றும் கருதிக் கொண்டிருந்த பொழுது அவர்கள் அருகில் வரக்கண்டு, அவள் இவளைப் போன்றவளே என்று எண்ணினாள். 'நும்மைத் தொழுவேன், அவள் தந்தையின் ஊர் இதுவே, அவளைப் பெற்ற தாய் யானே, நும்புகழ் பொலிக!' என்று வாழ்த்திக் கூறியது.

பாடற் பொருண்மை

"முருகு எனக் காண்போர் கருதுமாறு வருகின்ற வலிமிக்க காளையே! யாமரங்கள் உயர வளர்ந்தும் ஓமை மரங்கள் விரியப் பரந்தும் உள்ள காட்டின்கண் அரியவழி என்று கருதாது, மேலே காளை ஒருவனுடன் புணர்ந்து சென்ற என் மகளைப் போல்வாய். நும்போற் செல்லும் அவர்களைக் கண்டீர் அன்றோ! அவளையன்றிப் பொலிவிழந்த இவ்வூரிடத்தே இருந்து உம்மைத் தொழுகின்றேன். கண்டீராயின் உரைப்பீர்களாக. பக்கம் உயர்ந்த அல்குலையும் மெல்லியவாய்த் தோன்றிய திதலையையும் ஒழுங்குற விளங்கும் கூரிய பற்களையும் புதுப்பூக்களால் அமைந்த மாலையையும் சிலவாய வளைகளையும் பலவாய கூந்தலையும் உடையவள். கரிய வீசையும் தாடியும் கூடிய கழுத்தினையும் மிக்க வலிபடைத்த பெரிய கைகளையும், வலிய வில்லோடு சேர்ந்த அம்பினையும் குறையாத வளவிய கள்ளினையும் உடைய அவள் தந்தையின் ஊர் இதுவே ஆகும். யான் அவளைத் தேடிப் போந்தேன். எனக்கு உரைப்பதால் உங்கள் புகழ் பொலிவுறுக."[18]

பதம்பிரித்துப் பொருள் விளக்கம் தந்துள்ள இவ்வுரைப் பகுதி பாடலின் பொருட்கூறுகளை உள்ளவாறு உணர்தற்கு உறுதுணையாகும். சொற்கள் இலவேனும், விளக்கத்தின் பொருட்டுச் சில சொற்களைச் சேர்த்துப் பொருளை வெளிப்படுத்தியுள்ள பாங்கு பாராட்டிற்குரியது. ஒவ்வொரு தொடரின் நயத்தினையும் உரையாசிரியர் விரித்துரைக்கும் பகுதி, சுவைநலம் பருகும் முருகியல் உணர்வுக்குச் சான்று பகரும்.

18. நற்றிணை மூலமும் விளக்கவுரையும், ப. 788-789.

ஒப்புமைப் பகுதி

கலித்தொகையில் தன்மகளைத் தேடிச் சென்ற செவிலி, இடைச் சுரத்து முக்கோற்பகவரைக் கண்டு உசாவியதாக வரும் பகுதி இப்பாடலுடன் ஒப்பிடற்குரியது.[19]

"..... குறிப்பேவல் செயல்மாலை ஒழுக்கத்திர்! இவ்விடை
என்மகள் ஒருத்தியும் பிறள்மகன் ஒருவனும்
தம்முளே புணர்ந்த தாமறி புணர்ச்சியர்
அன்னார் இருவரைக் காணிரோ? பெரும! [கலி. 9. 4 – 7]

செவிலி காதல் இணையரை எதிரே கண்டு, 'என்மகளும் அவள்காதலுனுமாகக் காட்சி தருகின்றீர்!' என்று வினவுதற்கு ஒத்த பகுதி திருச்சிற்றம்பலக் கோவையில் காணப்படுகிறது.[20]

"மீண்டார் என உவந்தேன் கண்டு நும்மை; இம்மேதகவே
பூண்டார் இருவர்முன் போயினரே? புலியூர் எனை நின்று
ஆண்டான் அருவரை ஆளிஅன் னானைக்கண்டேன்; அயலே
தூண்டா விளக்கனையாய்! என்னையோ அன்னை சொல்லியதே"[21] [16. உடன்போக்கு, 51]

அருந்தொடர்

மதவலி - மிக்கவலிமை. ஆகுபெயராக மிக்க வலிமை படைத்த தலைவனைக் குறித்தது. காண்க:

1. சூர்மருங்கு அறுத்த மொய்ம்பின் மதவலி! (திரு. 275)
2. பதிற்றுக்கை மதவலி! (பரி. 3.40)
3. வில்லோர் வாழ்க்கை சீறூர் மதவலி! (புறம். 331.2)

ஓமை நீடிய கானிடை

1. ஓமை நீடிய உலவை நீளிடை. (அகம். 369.17)
2. ஓமை நீடிய .... கானத்தானே. (ஐங். 316. 4–5)

மைஅணல்

1. மதியுடம் பட்ட மையணற் காளை. (அகம். 221.6)
2. மையணற் காளையொடு பைய இயலி. (ஐங். 389.2)
3. மையணற் காளை பொய்புகலாக. (நற். 179.8)

---

19. நற்றிணை ஆராய்ச்சித் தெளிவுரை, தொகுதி - 1, ப. 415-416.
20. அதே நூல்.
21. அதே நூல்

4. அடிபுனை தொடுகழல் மை அணற் காளைக்கு. (புறம். 83.1)

செவிலித்தாயை ஈனாத்தாயர் என்பர். ஈன்ற தாயின் நிலையில் நின்று இப்பாடலில் அவள் பேசுகின்றாள்.

கற்பியல் காலத்துச் செவிலி கூற்று

போதனார்

6. பிரசம் கலந்த வெண்சுவைத் தீம்பால்
விரிகதிர்ப் பொற்கலத்து ஒருகை ஏந்திப்
புடைப்பின் சுற்றும் பூந்தலைச் சிறுகோல்
'உண்'என்று ஓக்குபு புடைப்பத் தெண்ணீர்
முத்தரிப் பொற்சிலம்பு ஒலிப்பத் தத்துற்று
அரிநரைக் கூந்தல் செம்முது செவிலியர்
பரிமெலிந்து1 ஒழியப் பந்தர் ஓடி
ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந் தனள்கொல்?
கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்
கொடுத்த தந்தை2 கொழுஞ்சோறு உள்ளாள்
ஒழுகுநீர் நுணங்கறல் போலப்
பொழுது மறுத்துண்ணும் சிறுமது கையளே. [110]

திணை

பாலை

கூற்று

1. மனை மருட்சி
2. மகள் நிலை உரைத்ததூஉம் ஆம் [- இதுவே பொருத்தம் மிக்கது].

பாட வேறுபாடு [- ஔவை]

1. பரீஇமெலிந்து/பரிமெலிந்து/ என்ற பாடமே கொண்டனர்.

2. தந்தை [- இதுவே ஔவை கொண்ட பாடம்].

சங்க இலக்கியத்தில் /தாதை/ என்ற சொல் பரிபாடலில் மட்டுமே பயின்றது (பரி. 1.31, 3.13, 4.14]. எனின் /தந்தை/ என்ற சொல் அகநானூற்றில் பன்னிரு இடங்களிலும், ஐங்குறுநூற்றில் நான்கு இடங்களிலும், கலித்தொகையில் ஏழிடங்களிலும், குறுந்தொகையில் நான்கு இடங்களிலும், நற்றிணையில் பன்னிரு இடங்களிலும் பயின்றுள்ளதால் /தந்தை/ என்ற பாடமே மூலபாடமாகக் கருதுதற்குரியது.

திணை விளக்கம்

இப்பாடலில் பாலைத் திணைக்குரிய முதல், கரு, உரிப் பொருள்கள் மூன்றனுள் ஒன்றேனும் காணப்படாமையின், இதனை இத்திணைக்குரியதாகத் தொகுத்தமை ஏற்புடையதாக இல்லை.

தன் கணவன் குடி [- புகுந்த வீடு] வறுமையுற்றதால், தந்தை கொடுத்தனுப்பிய உணவுப் பொருள்களைச் சற்றும் எண்ணாதவளாக, ஒருபொழுது விட்டு மறுபொழுது உண்டு, தன் புகுந்த குடிப் பெருமையினைக் காத்து இல்லறம் புரியும் தலைவியின் மனத்திண்மை மிக்க ஒழுகலாறு கூறப்படுதலின், இப்பாடல் முல்லைத் திணைக்கு உரியதாகக் கொள்ளுதல் பொருந்தும்.[22]

கூற்று விளக்கம்

தலைவனும் தலைவியும் கடிமணம் புரிந்து இல்லறம் புரியும் காலத்து அவளைக் கண்டு வரச்சென்ற வளர்ப்புத்தாயாகிய செவிலித்தாய், தன் மகளின் மனையறத்தின் மாண்பினையும் மனத்திட்பத்தினையும், குடிமாண்பு பேணும் பண்பாட்டினையும் நேரிற்கண்டு வந்து நற்றாய்க்கு உரைத்தது என்ற இரண்டாம் கூற்று மிக்க பொருத்தம் வாய்ந்தது.[23]

பாடிய புலவர்

இப்பாடலைத் தவிர, போதனாரின் பாடல் பாட்டும் தொகையும் ஆகிய சங்க இலக்கியத்தில் காணப்படவில்லை. ஒரு பாடலே பாடியிருப்பினும், புகுந்த வீட்டின் மதிப்பினையும் மாண்பினையும் பேணிக்காக்கும் தலைவியின் பண்புநலனை இனிய சொல்லோவியமாகத் தீட்டியுள்ளார் என்பது தனிச்சிறப்பு.

ஔவை அவர்கள்,

> "இவர் பெயர் அச்சுப்படியிலும் மதுரைத் தமிழ்ச்சங்க ஏட்டிலும் போதனார், பொத்தனார் எனக் காணப்படினும் ஏனை ஏடுகளில் பூதனார் என்பது பயின்ற வழக்கிற்றாகலின், அதுவே ஈண்டுக் கொள்ளப்பட்டது."[24]

என்று வரைந்துள்ளார்.

---

22. நற்றிணை ஆராய்ச்சித் தெளிவுரை, தொகுதி - 1, ப. 415-416. ப. 419.
23. அதே நூல்,
24. நற்றிணை மூலமும் விளக்கவுரையும், I, ப. 423.

கூற்றுப் பொருண்மையும் பாடற் சிறப்பும்

"களவுநெறியில் காதலுற்றுச் சிறந்து பின் கடிமணம் செய்துகொண்டு கற்புக் கடம்பூண்டு நல்லறம் செய்யத் தொடங்கிய தலைமகளை மனையறம் தொடங்கிய சின்னாட்கெல்லாம் அவளை வளர்த்த செவிலி அவளது மனைக்குச் சென்று கண்டாள். அங்கே தலைமகள் செய்யும் மனையறத்தின் மாண்பை நேரிற்கண்டு பெருவியப்புற்றாள். தான் வளர்த்த மகள் கற்பும் காமமும் நற்பாலொழுக்கமும் மெல்லியற் பொறையும் நிறையும் விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும் ஆகிய நற்பண்புகளால் சிறந்து விளங்குவது காணப்பிறக்கும் இன்பத்தினும் மிக்கது பிறிதின்மையின் செவிலியின் உள்ளம் உவகை நிறைந்தது. பின்னர் அவள் தலைமகள்பால் விடை பெற்றுக்கொண்டு, அவள் பிறந்து வளர்ந்த தொன்மனைக்கு வந்தாள். அங்கே தலைவியைப் பெற்ற நற்றாய் தன்மகளுடைய மனைநலத்தை அறிய விரும்பினளாக, செவிலி, "தலைமகளை யான் கண்டதும், அவள் சிறு பெண்ணாகக் காலில் பொற்சிலம்பு அணிந்து விளையாடும் செவ்வியில், பால் கலந்த சோற்றை ஒரு வள்ளத்தில் ஏந்தி ஒரு கையில் சிறு கோல்கொண்டு இச்சோற்றை உண்க என அச்சுறுத்தினால், நரைமுது செவிலியர் ஓடிப் பற்ற முடியாது மெலிந்து அயருமாறு பூம்பந்தலிடையே ஆட்டம் காட்டிய நிலை என் நினைவுக்கு வந்தது. அத்துணை இளையளாகிய அவளுடைய இன்றைய நிலையை நோக்கின், அவள்பால் அறிவும் ஒழுக்கமும் சிறந்து தோன்றுகின்றன. அவற்றை எப்பொழுது எவ்வாறு உணர்ந்தாள் என என் நெஞ்சில் வியப்பின்மேல் வியப்பு வீறுகொண்டெழுந்தது.

தன்னைக் கொண்ட கணவனது குடி ஒருகால் வறன் உற்றது; அதனை அறிந்த அவள் தந்தை அவட்கு வேண்டும் உணவுப் பொருளைக் கொடுத்து விட்டானாக, அதனை வேண்டா என விலக்கிவிட்டுத் தன் கொழுநன் தேடித்தந்தது சிறிதாயினும், அதனைப் பொழுது மறுத்துண்டு வாழும் பொற்புறு மானமாண்பு உடையவளாக விளங்குகின்றாள். என்னே அவளது மனைமாண்பு!"[25]

செவிலித்தாய் தன் வளர்ப்பு மகளை நேரிற் சென்று கண்டு, அவள் வறுமையிலும் செம்மை காக்கும் மாண்புடைய

25. நற்றிணை மூலமும் விளக்கவுரையும், I, ப. 423-424.

மனையறத்தின் சிறப்பினைத் திரும்பி வந்ததும் நற்றாய்க்கு உரைப்பதாக அமைந்த பாடற் பொருண்மையினையும் செவிலியின் நாநலத்தையும் தீவிய, செவ்விய, செம்மாந்த நடையில் நாடகப் பாங்கில் அமைத்து உரைவேந்தர் இடையறவுபடாமல் எடுத்துரைக்கும் மாண்பு அவர்க்குரிய தனிச்சிறப்பு என்பதில் ஐயம் இல்லை.

சொல் நயம் தேர்வதில் உரைவேந்தர் வல்லர் என்பதற்கு இப்பாடலினின்றும் ஓரிரு சான்றுகளைக் காட்டலாம். 'நிறப்பண்பையும் இனிமைப் பண்பையும் விதந்து கூறலின் வெண்சுவைத் தீம்பால் [1] என்றார்.....

செம்முது செவிலியர் [6] என்ற இடத்துச் செம்மை மனத்துக்கும் முதுமை உடற்கும் அமைந்தன. சிறு பெண் இனிது நுழைந்தோடும் பந்தர்க்கீழே தாம் செல்ல இயலாமையின் செவிலியர் பரிமெலிந்து ஒழிந்தனர்......"

இங்ஙனம் பாடிய புலவரின் கற்பனை உணர்வோடு ஒன்றி நின்று, அப்புலவர் எண்ணியனவும் கண்ணியனவும் கண்ணாதனவும் கூட மனக்கண் முன்பு கொண்டு வந்து நிறுத்தும் உரைத்திறத்தினை என் என்பேன்! வடமொழியில் திறனாய்வாளனைச் சக ஹ்ருதய என்று இயம்புவர். இதன் பொருள் ஒத்த உள்ளம் வாய்ந்தவர் என்பதாம். கவிஞர் உள்ளத்தை ஒத்த உள்ளம் கொண்டு உரை நலம் காணும் திறன் படைத்தவர் நம் உரைவேந்தர் என்பதற்கு இன்னோரன்ன எடுத்துக்காட்டுக்கள் எண்ணில.

மேற்கோள்கள், இலக்கணக் குறிப்புக்கள் என்பனவும் ஒவ்வொரு பாடலின் உரையிலும் இடம்பெற்று உரைத் திறத்தினை மேம்படுத்துதல் சுட்டத்தக்கது. இப்பாடலில் பயின்றுள்ள சொற்கள் சில ஏனைய சங்கப் பாக்களில் பயின்றமைக்குச் சில சான்றுகளைக் காண்போம்.[26]

பிரசம் – தேன்

1. பிரசமொடு விரைஇய வயங்குவெள் அருவி (அகம், 172.2)
2. நாறுகொள் பிரசம் ஊறும் நாட்டிற்கு. - குறு, 268.5

பொற்கலம் – தங்கக் கிண்ணம்

1. செம்பொற் புனைகலத்து அம்பொரிக் கலந்த
பாலும் பலஎன உண்ணாள் .... (குறு. 356. 6 - 7)

2. பொன்செய் புனைகலத்து ஏந்தி .... (புறம். 56.19)

---

26. நற்றிணை ஆராய்ச்சித் தெளிவுரை, முதல் தொகுதி, ப. 421-422.

செம்முது செவிலியர் -

1. நரைவிரா வுற்ற நறுமென் கூந்தல்
செம்முது செவிலியர் பல பாராட்ட (அகம். 254. 1-2)

2. நரைவிரா வுற்ற நறுமென் கூந்தல்
செம்முகச் செவிலியர் கைம்மிகக் குழீஇக்
குறியவும் நெடியவும் உரைபல பயிற்றி......... (நெடு. 152–154)

கொழுநன் - கொடி படர்வதற்குக் கொழுவைப் போலத் தலைவி ஆகிய பூங்கொடிக்குப் பற்றுக்கோடாக விளங்கும் கணவன்.

1. கிளையொடு காக்க, தன் கொழுநன் மார்பே. (குறு. 80.7)
2. எழுமினோ எழுமின்எம் கொழுநற் காக்கம். - (நற். 170.5)

நுணங்கு அறல் - நுண்ணிய மணல்துகள்

1. நுண்கொடி அதிரலொடு நுணங்குஅறல் வரிப்ப. (அகம். 237.2)
2. சிறந்த கருமை நுண்வினை நுணங்குஅறல். (மது. 638)

குறிப்பு

சங்கப் பாக்களில் பயின்றுள்ள பொதுத் தொடர்கள், சொற்கள் என்பன ஒருபாடலினின்றும் மற்றொருபாடலிற் கொள்ளப்பட்டதாகக் கருதுதலைக் காட்டிலும், அவை யாவும் அக்காலத்துச் சொற்கோவையில் [Vocabulary] பயின்றவை என்று தெளிதல் சாலும். வீரயுகத்துப் பாக்களில் [Poems of Heroic age] இத்தகைய பொதுச் சொற்கள் இடம்பெறுதல் இயல்பு என்று சாட்விக்கு உள்ளிட்ட ஒப்பிலக்கியர் கருதுவர்.

கற்பியல் காலத்துத் தேர்ப்பாகன் கூற்று

ஒருசிறைப் பெரியனார்

7. விதையர் கொன்ற முதையல் பூழி
இடுமுறை நிரப்பிய ஈர்இலை வரகின்
கவைக்கதிர் கறித்த காமர் மடப்பிணை
அரலையம் காட்டு இரலையொடு வதியும்
புறவிற்று அம்ம நீ நயந்தோள் ஊரே: 5
'எல்லி விட்டன்று வேந்து' எனச் சொல்லுபு1
பரியல்2 வாழ்கநின் கண்ணி! காண்வர
விரிஉளைப் பொலிந்த வீங்குசெலல் கலிமா

வண்பரி தயங்க எழீஇத் தண்பெயல்
கான்யாற்று இகுமணற் கரைபிறக்கு[3] ஒழிய
எல்விருந்து அயரும் மனைவி
மெல்இறைப் பணைத்தோள் துயில்அமர் வோயே! [121].

திணை

முல்லை

கூற்று

வினைமுற்றி மறுத்தரும் தலைமகற்குத் தேர்ப்பாகன் சொல்லியது.[4]

பாடவேறுபாடு [- ஔவை]

1. சொல்லுப 2. வாழி நெஞ்சே! 3. கரைஇவண் ஒழிய 4. தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

குறிப்பு: பல பதிப்புக்களிலும் காணப்படும் பாடமே இப்பாடலில் கொள்ளப் பெற்றது. ஔவை காட்டும் பாடம் ஆய்வுக்குரியது என்பதால் தனியே கொடுக்கப்பட்டுள்ளது.

பாடிய புலவர்

குறுந்தொகையில் ஒரு பாடலும் [272], நற்றிணையில் ஒரு பாடலும் [121], புறநானூற்றில் ஒரு பாடலும் [137] இவர் யாத்தவை. இவர் நாஞ்சில் வள்ளுவன் என்னும் குறுநிலத் தலைவனால் ஆதரிக்கப்பட்டவர் ஆவர்.

திணை விளக்கம்

புறவு [- முல்லை நிலம், முதற்பொருள்] வரகு, மடப்பிணை, இரலை [- கருப்பொருள்], எல்விருந்தயரும் மனைவியின் பணைத்தோள் துயில் அமர்வோய் என்றதால் இருத்தலும் [- உரிப்பொருள்] கூறப்பட்டதால், இப்பாடல் முப்பொருளாலும் முல்லைத் திணைக்கு உரியது.

கூற்று விளக்கம்

1. வினை முடித்துத் திரும்பும் தலைவன் தலைவியை நினைந்து கவன்ற பொழுது, மனைவியின் பணைத்தோளில் துயிலுதலை விரும்பும் தலைவ! நீ நயந்தவள் ஊர் மடப்பிணை இரலையோடு வாழும் முல்லைப்புறவில் அணித்தாக இருப்பதால், விரைந்து போய்க் காணும்படி தேரினைக் கடுகமுடுகுவேன் எனக் கூறியது.

மறுத்தருதல் – திரும்புதல், மீளுதல்.

2. ஔவை அவர்கள், "வினைமுற்றி மறுத்தரும் தலைமகன் தன்நெஞ்சிற்குச் சொல்லியது" என்று கொண்டதால் தேர்ப்பாகன் என்ற இடத்தில் நெஞ்சினை இருத்தி, அது கூறுவதாகக் கொள்ளுதல் வேண்டும்.

பாடற் பொருட் கூறுகள்

1. பிணை, இரலை மானின் காட்சி *[1–5]*

2. மேற்கொண்ட போர் வினை முடிந்ததால் தலைவனை வேந்தன் விடுவித்தல் *[6 – 7]*

3. தேரில் பூட்டப்பட்ட கடுகிச் செல்லும் புரவிகளை மேலும் விரைவுபடுத்திச் செலுத்துதல் *[7 – 9]*

4. எல்விருந்தயரும் மனையோளைக் கூடி இன்புறுதல் *[11– 12]*.

கிடக்கை முறையான்,

"வேந்து விட்டன்று, ஊர் புறவிற்று என்று சொல்லி, நெஞ்சே! நீ பரியல் வாழி, கலிமா எழீஇக் கரைபிறக்கொழியச் சென்று மனையோள் தோள் துயில் அமர்வோய் எனக் கூட்டி வினைமுடிபு செய்க" என்பது ஔவை தரும் விளக்கம்.[27]

தாம் மேற்கொண்ட முறைப்படி ஒவ்வொரு தொடருக்கும் காரணகாரிய அளவை முறைப்படி சொற்பொருள் விரித்துரைத்தல் ஔவை உரைப்போக்கின் தனித்தன்மை எனலாம். எடுத்துக்காட்டாக இரண்டொரு தொடர் விளக்கங்களை நோக்குவோம்.

"வினைக்கண் ஒன்றியிருந்த தலைமகன் உள்ளம் வினை முடிந்த அந்நிலையே தலைமகளின் தோளிடத்தே பெறும் இனிய துயிலைப் பெறவிழைந்து, அவள் உறையும் ஊர்ப் புறவிடத்தே உண்மையை உணர்ந்து வருந்துதலின், புறவிற்று அம்ம யாம் நயந்தோள் ஊரே என்றும், வேந்தன் பொருட்டு வந்தமையின் வினை முடிந்தபின் அவன்பால் விடை பெற்றல்லது சேறல் சீரிது அன்மை பற்றி எல்லி விட்டன்று வேந்து என்றும் நெஞ்சு கூறியதனைக் கொண்டெடுத்து மொழிந்தான். அதனாற் பயன் பாகனைத் தேரை விரைந்து கடாவுக எனப் பணிப்பானாவது .....[28]

---

27. நற்றிணை மூலமும் விளக்கவுரையும், ப. *469*.ப.

28. அதே நூல், *470*.

பாடலில், விரியுளைப் பொலிந்த வீங்கு செலற் கலிமா என்று புரவிகள் மட்டுமே பேசப் பெற்றன. ஆயினும், அவை இழுத்துச் செல்லும்/தேர்/ என்ற சொல் தொக்கு நின்றது. இவ்வாறு தேர் சுட்டப்படாமல் புரவிகள் மட்டும் சுட்டப் பெற்ற பாடல்கள் பல உள்ளன.[29] எடுத்துக்காட்டாக,

1. .... பாக! உளை அணி
உலகுகடப் பன்ன புள்ளியற் கலிமா
வகையமை வனப்பின் வள்புநீ தெரிய......- (அகம், 64. 1-2)

2. .... செந்நிலப் புறவின்,
வாஅப் பாணி வயங்குதொழில் கலிமாத்
தாஅத் தாளிணை மெல்ல ஒதுங்க
இடிமறந்து ஏமதி வலவ! (அகம், 134. 6– 9)

என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

எல்விருந்து – இரவு விருந்து. தலைவன் மாலைப் பொழுதில் தன் இல்லம் அடைவான் என்பதால் இவ்வாறு பொருள் கொள்ளுதல் சிறப்பு. தொல்காப்பியர், "காரும் மாலையும் முல்லை" [தொல். பொருள். 6] என்று சுட்டியிருத்தலால் முல்லைத் திணைக்குரிய சிறுபொழுது மாலை என்பது புலனாகும். மருத நிலத்திற்குச் செந்நெல்லைப் போல, முல்லை நிலத்திற்கு வரகு சிறப்புடைய பயிராகும்.

வரகு பற்றிய குறிப்பு[30]

1. பெரும்புன வரகின் .... (அகம். 194.9)
2. புதுப்புன வரகின் ..... (குறு. 220. 1)
3. புன்புல வரகின் சொன்றியொடு பெறூஉம் (புறம். 197.12)
4. வாதிகை அன்ன கவைக்கதிர் இறைஞ்சி (மலை. 112)

பிறக்கு ஒழிதல்

1. சீறூர் பல பிறக்கு ஒழிய .... (அகம். 104.13)
2. சீறூர் நாடு பல பிறக்கு ஒழிய (அகம். 331. 8)
3. கோள்வல் வேங்கைய மலை பிறக்கு ஒழிய .... (ஐங். 385. 2)
4. நசைதர வந்தோர் நசை பிறக்கு ஒழிய (புறம். 15.15)

எனவே, இத்தகைய தொடர்கள் சங்கத்தமிழில் புலவர் பெருமக்களால் ஆளப் பெற்ற பொதுமைப் பண்பு வாய்ந்தவை என்பது புலனாகும்.

---

29. நற்றிணை ஆராய்ச்சித் தெளிவுரை, தொகுதி – 1, ப. 426.

30. அதே நூல்.

இப்பாடலிற் பொதித்துள்ள இறைச்சிப்பொருள்

கருப்பொருள்	இறைச்சிப்பொருள்
1. அரலைக்காடு	இல்லம்
2. மடப்பிணை	தலைவி
3. இரலையொடு வதியும் (நிகழ்காலம்)	தலைவனொடு இனி தான் உறைதல் வேண்டும். (எதிர்காலம்)

நிறைவுரை

நற்றிணை மூலமும் விளக்கவுரையும் என்ற பெருநூல் இரு தொகுதிகளாக 1560 பக்கங்களில் அருணா பதிப்பகத்தார் 1966, 1968 ஆண்டுகளில் வெளியிட்டனர். உலகச் செம்மொழித் தமிழ்மாநாடு நடந்த காலத்தைச் சார்ந்து [2010] இவ்வுரைப் பெருநூல் டெம்மி அளவில் நான்கு தொகுதிகளாக வேறு பதிப்பகத்தாரால் வெளியிடப் பெற்றன. கல்வெட்டுச்சான்றுகள், பரந்துபட்ட தமிழிலக்கியப் புலமை, ஆய்வு நோக்கு, ஒப்பியல் முறை என்பன பாட வேறுபாடுகளை நுனித்தறிதற்கு ஔவை அவர்கட்கு உறுதுணையாக அமைந்தன. ஒவ்வொரு பாடற்கும் புலவர் பற்றிய குறிப்பும் கூற்று விளக்கமும் பதவுரையும், வினை முடிபு காட்டலும், நயவுரை காண்டலும், இலக்கணக் குறிப்பும், மேற்கோள் தருதலும் இவ்வுரைக் களஞ்சியத்திற்குப் பெருமை சேர்ப்பன ஆகும். சொற்பொருளடைவு [Subject Index] இவ்வுரையின் தனிச்சிறப்பு. இப்பெருந்தகையார் காட்டிய புலமை வெளிச்சத்தில் ஏற்புழி எல்லாம் சில புதிய கருத்துக்களும் விளக்கமும், உள்ளுறை இறைச்சி வேறுபாடு காட்டலும் பிறவும் கூற முயன்றுள்ளேன். தமிழன்பர்கள் ஔவை அவர்களின் இலக்கியச் செவ்வி மிக்க உரைவளத்தைப் பெற்றுக் கற்றுப் பயன் பெறுக என்று விழைகின்றேன்.

அடுத்து வரும் இயலில் உரைவேந்தர் அவர்களின் தத்துவப் புலமையினைப் புலப்படுத்தும் **மணிமேகலை உரைத்திறம்** குறித்து ஆராய்வோம்.

3. மணிமேகலை உரைத்திறம்

1. முன்னுரை

செவ்வியல் தமிழிலக்கிய வரிசையில் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் எண்ணப் பெற்றுள்ளன. தமிழ் தேசியக் காப்பியமாகச் சிலப்பதிகாரம் பாராட்டப்படுதல் போல, மணிமேகலை தலைசிறந்த தத்துவக் காப்பியமாக மதிக்கப்படுகிறது. முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தினைப் பாடிய இளங்கோ அடிகள் கலையுணர்வும், படைப்பாற்றலும் பொது நோக்கும் கொண்ட பெருங்கவிஞர். மணிமேகலையினைப் பாடிய தண்டமிழாசான் சாத்தனார் பன்மொழிப் புலமையும் தத்துவ வித்தகமும் தருக்கப் பேரறிவும் படைப்புத்திறனும் விசாலப் பார்வையும் படைத்த பெருங்கவிஞர். எனினும், ஏனைய சமய, தத்துவங்களை எல்லாம் படிற்றுரை என்று எள்ளிப் பேசுபவர் சாத்தனார். இவர்தம் புறச் சமயப் புறக்கணிப்புக்குக் காரணம் ஆசியப் பேரொளியாகிய புத்தர்பிரானிடமும் அவர்தம் போதனைகளிலும், அவற்றை அயல்நாடுகளிலும் பரப்பும் பணியில் ஈடுபட்டிருந்த மகாதேரர்களின் உரைகளிலும் சாத்தனார் வைத்திருந்த அழுத்தமான நம்பிக்கையும் அசையாத கொள்கைப் பிடிப்புமே ஆகும்.

தமிழ் கூறும் நல்லுலகில் சிலப்பதிகாரம் பரவிய அளவிற்கு மணிமேகலை பரவவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சிலப்பதிகாரத்திற்கு அரும்பத உரை, அடியார்க்கு நல்லார் உரை என்ற பழைய உரை விளக்கங்களும் நவீன காலத்தில் அறிஞர் பெருமக்களால் எழுதப்பட்ட ஆய்வுரைகளும் அக்காப்பியத்தின் பெருமையினையும் கருத்து வளத்தையும் அறிந்தும் மகிழ்ந்தும் பாராட்டுதற்கு ஏதுவாயின. ஆயின், மணிமேகலைக்கு அடியார்க்கு நல்லார் போல ஒருவர் கிடைக்கவில்லை. சீவகசிந்தாமணி காப்பியத்தின் பன்மாண் சிறப்பினையும் பாரித்துரைக்கும் நச்சினார்க்கினியரின் உரையினைப்போல மணிமேகலைக்குக் கடந்த பற்பல நூற்றாண்டுகளாகத் தமிழறிஞர் ஒருவரும் உரை வரைய முன்வாராமைக்கு உரிய காரணம் புலப்படவில்லை.

எனினும், மணிமேகலை ஏட்டுச்சுவடிகளைத் தமிழகம், யாழ்ப்பாணம் உள்ளிட்ட பல இடங்களிலும் தேடிப் பெற்ற உரையில்லாத அரிய சுவடிகளே கிடைக்கப் பெற்று, பதிப்பு வேந்தர் என்று சான்றோரால் பாராட்டப்படும் டாக்டர் உ.வே.சாமிநாதஐயர் அவர்கள் நன்கு பரிசோதித்து, சமய, தத்துவப் பேரறிஞர்களிடம் அத்துறைக்குரிய கலைச் சொற் பொருள்களையும் அவற்றுக்குரிய மூல நூல்களையும் கேட்டறிந்து இக்காப்பியத்தின் முதற்பதிப்பினை 1898-இலும், இரண்டாம் பதிப்பினை 1921-இலும், மூன்றாம் பதிப்பினை 1931இலும் அச்சிட்டு வெளியிட்டனர். இக்காப்பியத்தின் முதல் உரையாசிரியராக டாக்டர் உ.வே.சா. அவர்கள் திகழ்கிறார். ஆதலின், அவர்தம் உரைத்திறனைக் குறித்து முதலில் கூறுதல் பயன் நல்கும்.

2. உ.வே.சா. உரைத்திறம்

உ.வே.சா. அவர்கள் மணிமேகலைக்கு அரும்பதவுரை எழுதுவதற்கு உதவிய அறிஞர் பெருமக்களை நன்றியுணர்வுடன் தம் பதிப்பின் முகவுரையில் குறித்துள்ள பகுதியை இங்குக் காண்போம்.

> "......... ஹிந்து தேசத்து வித்தைகளிலும் ஆங்கிலேய வித்தைகளிலும் மிகப் பயிற்சியடைந்து விளங்கியவரும் சென்னை இராசதானிக் கலாசாலையில் ஸம்ஸ்கிருத போதகாசிரியராக இருந்தவருமான ராவ்பகதூர் மளூர் **ஸ்ரீஅரங்காசாரியரவர்கள்** எம்.ஏ, பௌத்த சமய நூல்களிலும் பாண்டித்தியம் உள்ளவர்கள் என்பதை அறிந்துகொண்டு உரிய காலங்களில் அவர்களிடத்துச்சென்று வினாவி வந்தேன்; வருகையில், **ஒவ்வோரமயத்தும் தடையின்றி உடனுடன் அவர்கள் கூறிய விடைகளால் அதற்கு முன்பு எனக்கிருந்த ஐயங்களிற் பெரும்பாலன நீங்கின; நீங்கவே இந்நூலைப் பரிசோதித்தலில் என் மனம் ஊக்கம் பெற்றது**. அவர்களுடைய பெருதவி இல்லையாயின், மணிமேகலையில் வந்துள்ள துடிதலோகம், பாரமிதை, அருபப் பிரமர், உருபப் பிரமர் முதலிய **சொற்களுக்குக் கூட உள்ளவாறே பொருள் கொள்ளுதல் எனக்கு மிக அரிதாகும்; தமக்குரிய அரிய வேலைகள் அநேகமிருந்தும் இப்பழைய தமிழ்நூல் வெளியே வந்து உலாவுதலையே பயனாகக் கருதி, யான் செல்லுங் காலந்தோறும் சிறிதும் சலிப்பின்றி அவர்கள் செய்து**

வந்த பேருதவி ஒருபொழுதும் மறக்கற்பாலதன்று; அவர்களுடைய பேருதவியாலேயே பௌத்த மதத்துள் மும்மணியென்று வழங்கும் **புத்த சரித்திரம், பௌத்த தர்மம், பௌத்த சங்கம்** என்பவை எழுதப் பெற்றன. அம்மகோபகாரி விஷயத்தில் இத்தமிழ்நாட்டினேமாகிய நாமெல்லாம் நன்றி பாராட்டுதற்கு உரியவர்களாக இருக்கிறோம்."[1]

பௌத்தர்கள் புத்தர்பிரானிடத்தும் அவர் போதித்த தருமத்தினிடத்தும், அத்தருமத்தினை எங்கும் பரப்பும் இயக்கமாகிய சங்கத்தாரிடத்தும் பத்திமை பூண்டு சரண்புகுதலைத் திரிசரணம் எனல் மரபு. காண்க:

1. *புத்தம் சரணங் கச்சாமி*
   [- புத்தரிடம் சரண் புகுகிறேன்]
2. *தம்மம் சரணங் கச்சாமி*
   [தருமத்திடம் சரண் புகுகிறேன்]
3. *ஸங்கம் சரணங் கச்சாமி*
   [சங்கத்திடம் சரண் புகுகிறேன்]

இம்மும்மணிகளையும் அறச்செல்வி மணிமேகலை சரண் புகுந்தனள் என்ற செய்தியை,

"தானம் தாங்கிச் சீலம் தலைநின்று
போன பிறப்பிற் புகுந்ததை உணர்ந்தோள்
புத்த தன்ம சங்கம் என்னும்
முத்திற மணியை மும்மையின் வணங்கிச்
சரணா கதியாய்ச் சரண்சென் றடைந்தபின்" *[மணி. 30. 1 – 5]*

எனவரும் காப்பியப் பகுதியில் சாத்தனார் சாற்றியுள்ளார்.

எனவே, மணிமேகலைக் காப்பியப் பொருளை விளங்கிக் கொள்ளுவதற்கு அடிப்படையானப் "புத்தசரித்திரம், பௌத்த தருமம், பௌத்த சங்கம் என்னும் மூன்றும் மணிமேகலையைப் படிப்பவர்களுக்குப் பயன்படுவதற்காகவே முதலில் எழுதப்பட்டன வாதலின், அவையும் இப்பதிப்பிற் சேர்க்கப் பெற்றுள்ளன."[2]

---

1. சாமிநாதையர், உ.வே. மணிமேகலை மூலமும் அரும்பதவுரையும், சென்னை, *1949*, முகவுரை, ப. xvi.
2. அதே நூல், ப. xix – xx.

இவ்வாறு ஐயரவர்கள், தம் மூன்றாம் பதிப்பில் குறிப்பிட்டுள்ள மும்மணிகள் பற்றிய பகுதி "தனிப் புத்தகமாக வெளிவந்திருப்பதால் இப்போது இப்பதிப்பில் [- நான்காம் பதிப்பில்] சேர்க்கப் பெறவில்லை என்று அவர்தம் புதல்வர் திரு.S.கலியாணசுந்தரம் குறித்துள்ளார் [15.12.48]."[3]

எனவே, உ.வே.சா. அவர்கள் இப்பௌத்தக் காப்பியப் பொருட் கூறுகளைப் புரிந்துகொள்ளுதற்கு மேற்கொண்ட அரிய முயற்சி அறியத்தக்கது. மேலும் முகவுரைப் பகுதியில் அவர் கூறும் செய்திகள் நோக்கத்தக்கவை.

1. "........ 'மணிமேகலை நூல் நுட்பம் கொள்வதெங்ஙன்' என்று ஆன்றோரால் பாராட்டப்பட்டுள்ள இந்நூற்கு அரும்பத வுரை யென்ற ஏதோ வொன்றை எழுதத் தொடங்கினேன்."[4]

2. "மொழிகளுட் [-சொற்களுட்] பெரும்பாலானவற்றிற்குப் பொருள் விளங்கிக் கிடக்கின்றமையின் அரியவற்றிற்கு மட்டுமே பொருள் செய்தும், ஆங்காங்குள்ள வாக்கியங்களை ஒத்தவைகளாக இந்த நூலிலும் வேறு நூலிலும் காணப்பட்ட வாக்கியங்களை அவ்வவ்விடத்தில் தந்து காட்டி அவற்றின் இடங்களை உடனுடன் விளங்கச் செய்தும், பொருள் விளங்காத இடங்களில் [?] இக்கேள்விக்குறியை அமைத்து, கையெழுத்துப் பிரதிகளிற் கண்ட பாட பேதங்களை எடுத்துக்காட்டி அவற்றுள் இன்றியமையாத சிலவற்றிற்கு மட்டுமே பொருளைப் புலப்படுத்தியும், எல்லோருக்கும் எளிதில் பொருள் விளங்குதற் பொருட்டு வடசொற்களைப் பெரும்பாலும் விரவுவித்தும், சிலவற்றிற்குச் சங்கமருவிய நூல்களிலிருந்து மேற்கோள்கள் இப்பொழுது அகப்படாமை யால் அவற்றை விளக்குதற்குப் பிற்காலத்து நூல்களிலிருந்து பிரயோகங்களை எடுத்துக்காட்டியும் ஒருவாறு அதனை எழுதி முடித்தேன்."[5]

3. "பழைய செந்தமிழ்நூற் பரிபாலகரும் இவ்வாராய்ச்சியால் எனக்கு மனச்சோர்வுண்டாகாத வண்ணம் அடிக்கடி ஊக்கமளித்து வந்தவரும் கொழும்பு நகரத்துப் பிரபு சிகாமணியுமாகிய கௌரவம் பொருந்திய ஸ்ரீ.பொ.குமாரசாமி

---

3. சாமிநாதையர், உ.வே. மணிமேகலை மூலமும் அரும்பதவுரையும், சென்னை, 1949, முகவுரை, ப. xx.

4. அதே நூல், ப. xvii.

5. அதே நூல்,

முதலியாரவர்கள், இந்நூலிற் சிற்சில இடங்களில் முன்னம் நிகழ்ந்த ஐயங்களை நீக்கிக்கொள்ளுதற் பொருட்டு யான் கேட்ட வினாக்களுக்கு இலங்கையிலுள்ள பெளத்தவித்தியோதய பாடசாலைத் தலைவராகிய ஸ்ரீஸுமங்களரவர்களைக் கொண்டு விடைகள் எழுதுவித்து அனுப்பிப் பேருதவி செய்து வந்தார்கள்."[6]

'4. "எனக்கு அக்காலத்தில் வட மொழிப் பிரயோகங்களில் உண்டாகிய ஐயங்களை உடனுடன் போக்கியருளிய ஸ்ரீபெருக வாழ்ந்தான் மஹாமஹோபாத்யாய அரங்காசாரி யாரவர்கள், திருமலை ஈச்சம்பாடி சதாவதானம் ஸ்ரீ ஸ்ரீனிவாசா சாரியரவர்கள் என்னும் இருவர்களுடைய நினைவும் என்றும் என் நெஞ்சினின்றும் நீங்கவில்லை."[7]

இதுகாறும், மணிமேகலைக் காப்பியத்தினை அரும்பத உரையுடனும், அரும்பதம் முதலியவற்றின் அகராதியுடனும் வெளியிடுவதற்கு டாக்டர் உ.வே.சா. எடுத்துக்கொண்ட அரும் பெரும் முயற்சியும் அயரா உழைப்பும் புலனாதல் காணலாம்.

இனி, காப்பியப் பகுதியில் இடம்பெறும் பெளத்தம் தொடர்பான ஒருசில தொடர்களுக்கு டாக்டர் உ.வே.சா. வழங்கியுள்ள ஆய்வுக் குறிப்புரைகளை நோக்குவோம்.

ஆய்வுக் குறிப்புரை

1. நான்கு வாய்மை

புத்தர்பிரான் மெய்யுணர்வு [Enlightenment] பெற்றதும் காசிக்கு அருகில் மான்சோலையில் சீடர் ஐவர்க்குப் புகட்டிய அடிப்படைக் கொள்கைகளில் நான்கு வாய்மைகள் [Four Noble Truths] சிறப்பிடம் பெறுகின்றன. நான்கு வாய்மைகளையும் தன்னைச் சரண் புகுந்த மாதவிக்குப் புகட்டும் போதிசத்துவர் அறவண அடிகள்,

"பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது;
பின்னதுஅற்றோர் உறுவது அறி[க]என்று அருளி"

[மணி. 2.64-67]

என்று அருளுரை வழங்குதல் அறியத்தக்கது.

---

6. சாமிநாதையர், உ.வே. மணிமேகலை மூலமும் அரும்பதவுரையும், சென்னை, *1949*, முகவுரை, ப. xvii. ப. xviii.
7. அதே நூல், ப. xviii.

உ.வே.சா. அவர்கள் தம் குறிப்புரையில் இந்த நான்கு வாய்மைகளும் சுட்டும் பகுதியைக் காண்போம்.

"இனி, துக்கம், துக்க நிவாரணம், துக்கோற்பத்தி, துக்க நிவாரண மார்க்கம் என்னும் வாய்மைகள் நான்கும் முறையே கூறப்படும்.

1. பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம் - துன்பம்
2. பிறவார் உறுவது பெரும் பேரின்பம் - துக்க நிவாரணம்
3. பற்றின் வருவது முன்னது - துக்கோற்பத்தி
   ['பற்றெனப்படுவது பசைஇய அறிவே' – மணி. 30. 92]
4. பின்னது அற்றோர் உறுவது - துக்க நிவாரண மார்க்கம்.
   அறிக என்று அருளி - துக்கம் முதலிய வாய்மை நான்கினையும் அறிந்துகொள்வாய் என்று உபதேசித்து ...."[8]

இவற்றின் விரிவான ஆராய்ச்சியுரையினை,

1. **Buddhism As Expounded in Manimekalai,** Annamalai University Publication, 1978, pp. 349 – 352.
2. ***தமிழிலக்கியத்தில்பௌத்தம்***, Dr.S.Radhakrishnan Advanced Centre of Philoso-phy, University of Madras, 1977, pp. 256– 259.
3. ***மணிமேகலையில் தத்துவச் சிந்தனைகள்,*** மெய்யப்பன் பதிப்பகம், சென்னை, 2019, ப. 302 - 305.

என்ற நம் நூல்களில் கண்டுகொள்ளலாம்.

2. ஏது நிகழ்ச்சி

பௌத்த தத்துவம் தொடர்பான ஒரு கலைச்சொல் ஏது நிகழ்ச்சி. இச்சொல் பௌத்தப் பனுவல்களில் ஹேது பிரபாவம் என்று சுட்டப்படுகிறது. பிரபாவம் – நிகழ்ச்சி என்று தமிழாக்கம் செய்த தண்டமிழாசான் சாத்தனார் ஹேது– ஏது என்று வடமொழியாக்கம் செய்து ஏது நிகழ்ச்சி என்று வழங்கினார். உ.வே.சா. தரும் அரும்பதவுரை காண்போம்.

"கன்மங்கள் ஆகிய காரணங்கள் தத்தம் பயனைக் கொடுத்தற்குத் தோற்றுதலை, 'ஏது நிகழ்ச்சி' என்பது பௌத்த நூல்

---

8. சாமிநாதையர், உ.வே. மணிமேகலை மூலமும் அரும்பதவுரையும், சென்னை, 1949, முகவுரை, ப.25, அடிக்குறிப்பு

வழக்கு; இதனை ஹேது ப்ரபவ தர்மம் என்பர்; ‘ஏது நிகழ்ச்சி யீங்கின்றாதலின்’ [9.51], ’ஏது நிகழ்ச்சி யாவும் பலவுள’ [12.105], ‘ஏது நிகழ்ச்சி யாவும் பலவுள’ [21.160] என இந்நூலுள்ளே இப்பெயர் பின்பும் வருதல் காண்க ....” மணி. 3.4.[9]

பாலி மொழியில் வடிக்கப்பட்ட புத்தரின் போதனைகள் பொதிந்துள்ள திரிபிடகத்தின் நடுவணதாகிய சுத்தபிடகத்தின் மஜ்ஜிம நிகாயத்தில்,

“யே தர்மா ஹேது ப்ரபவா: தேஷாம் ஹேதும்
ததாகத:
தேஷாம் யோ நிரோத: ஏவம்வாதீ மஹாச்ரமண”

என்று வரும் பகுதியில் ஏது நிகழ்ச்சி விளக்கப்பட்டுள்ளது. ஏது [ஹேது] அடிப்படையில் எல்லாம் விளைகின்றன [பிரபவம்] என்பதே பெருந்துறவியாகிய புத்தர்பிரானின் கருத்து. காரணத்தினின்று விளையும் தருமங்கள் எவையோ? அவற்றிற்குரிய காரணம் யாதோ? அவற்றின் தடை எதுவோ? இவையெல்லாம் ததாகதனாகிய புத்தர் பெருமானால் ஆராயப்பட்டன. இப்படி இயம்பியவன் மகாச்ரமணன். காரணத்தைக் களைய காரியமும் நீங்கும் என்பது இப்பிடகப் பகுதியின் சாரம் ஆகும்.

ஹேது ப்ரபாவத்தை ஏது நிகழ்ச்சி என்று வழங்கப்பெறுதற்கு வழிகாட்டியாக நெடுநல்வாடையில் வரும் தசநான்கு [115] என்ற சொல் விளங்குகிறது. மொழியியலார் இத்தகைய சொற்களைக் கலவைச் சொல் [Hybrid] என்பர்.[10]

உ.வே.சா. அவர்களின் பௌத்த அறிவுத்திறனுக்கு மேலும் ஒரு சான்றினைக் காண்போம்.

3. பிரதித்திய சமுற்பாதம் [- சார்பில் தோற்றம்]

புத்தர்பிரான் சாங்கியரின் பரிணாமக் கொள்கையினையும் [Theory of Evolution] வைதீக சமயத்தாரின் படைப்புக் கொள்கையினையும் [Theory of Creation] உடன்படவில்லை. பொருள்கள் யாவும் சார்புக் காரணங்களால் தோன்றுவன என்றும்

---

9. சாமிநாதையர், உ.வே. மணிமேகலை மூலமும் அரும்பதவுரையும், சென்னை, 1949, முகவுரை, ப. 27, அடிக்குறிப்பு

10. கந்தசாமி, சோ.ந., **தமிழிலக்கியத்தில் பௌத்தம்**, டாக்டர் எஸ்.இராதாகிருஷ்ணன் தத்துவ உயராய்வு மையம், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1977, ப. 235-236.

இவற்றை எவரும் படைக்கவில்லை என்றும் கருதினார். இக்கருத்தினைப் பிரதித்திய சமுத்பாதம் என்ற கோட்பாட்டினால் விளக்கினார். இத்தொடரினை Dependent Origination என்று பௌத்த இயலார் [Buddhalogists] ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வழங்கினர். சாத்தனார் **சார்பில் தோற்றம்** என்று இனிய தமிழில் அதர்ப்பட யாத்து அளித்தனர் [மணி. 30. 17,23].

காட்சியளவையாலும் கருத்தளவையாலும் அறியப்படும் பொருள்கள் யாவும் துவாதச நிதானம் என்ற பொதுத் தொடரினால் சுட்டப்பட்டது. இது தமிழில் பன்னிரு சார்புகள் என்று சாத்தனாரால் மொழிபெயர்த்து வழங்கப்பெற்றது. அவை யாவன: 1. பேதைமை 2. செய்கை 3. உணர்வு 4. அருஉரு 5. வாயில் 6. ஊறு 7. நுகர்வு 8. வேட்கை 9. பற்று 10. பவம் 11. தோற்றம் '12. வினைப்பயன். இவை முறையே அவிஜ்ஜா, விஞ்ஞான, நாமரூப, சளாயதன, பஸ்ஸோ, வேதனா, தண்ஹா, உபாதான, பவ, ஜாதி, ஜராமரணம் என்ற பாலிச் சொற்களின் தமிழாக்கமாகச் சாத்தனரால் வழங்கப்பெற்றவை. இவற்றை மணிமேகலையில் இருவேறு கதைகளில் [24. 105 - 109; 30. 45 - 48] சாத்தனார் குறித்துள்ளார். இவற்றின் விளக்கத்தினை, "புத்தசரித்திரம், பௌத்ததருமம், பௌத்தசங்கம் என்ற நூலில் உ.வே.சா. வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது[11]

இங்ஙனம் பௌத்தம் தொடர்பான கலைச்சொற்களுக்குரிய விளக்கத்தினை [Technical Terms] பல நூல் பயிற்சியாலும் கேள்வி ஞானத்தாலும் உ.வே.சா. குறித்துள்ளார்.

சாத்தனார் காலத்தில் பௌத்தம் தவிர இந்தியத் திருநாட்டில் அறிமுகம் ஆகியிருந்த பத்துவகைச் சமயக் கொள்கைகளைத் தொகுத்துக் கூறும் முதல் சர்வதரிசன சங்கிரகமாகத் திகழும் சமயக்கணக்கர்தம் திறம் கேட்ட காதையில் இடம்பெறும் சமயம் சார்ந்த அருஞ்சொற்களுக்கும் ஐயரவர்கள் போதிய விளக்கக் குறிப்புக்கள் வழங்கியுள்ளார்[12]

பௌத்தத் தருக்க நூலாக [Buddhist Logic] விளங்கும் 29ஆம் காதைக்கு அவர்களால் போதிய தரவுகள் தொகுத்து அரும்பத உரை

---

11. **புத்த சரித்திரம், பௌத்த தருமம், பௌத்த சங்கம்,** உ.வே.சா. நூல் நிலைய வெளியீடு, சென்னை, 1992, ப. 88-91.

12. மணிமேகலை மூலமும் அரும்பத உரையும், ப. 303-325.

எழுத இயலாமையினை அடிக்குறிப்பில் சுட்டியுள்ளார். அப்பகுதி வருமாறு:-

"…. இவ்வடி முதலியவற்றால் இக்காதையிற் கூறப்பட்டுள்ள பிரத்தியக்கம், அனுமானம் என்னும் இரண்டளவை இலக்கணங்களும், அவற்றின் பாகுபாடுகளும் இன்னநூலின் கருத்தைத் தழுவி வந்தன என்று விளங்காமையானும், தமிழில் உள்ள தருக்கசங்கிரகம், அன்னம்பட்டீயம் முதலியவற்றிலும், சிவஞானசித்தியார் சுபக்கத்துள்ள அளவை இலக்கணத்திற்குப் பலர் எழுதிய உரைகளிலும் வந்துள்ள குறியீடு முதலியவைகள் வேறு முறையாக இருத்தலும், இயன்ற அளவு விசாரித்தும் இந்த முறை'யுள்ள பழைய நூல்கள் இக்காலத்து வழங்கவில்லை என்று வடமொழித்தருக்க நூல்கள் பலவற்றிலும் மிக்க பாண்டித்திய முள்ளவரும், முன்பு கும்பகோணத்தில் வசித்தவருமாகிய குறிச்சி மஹாமஹோபாத்யாய ஸ்ரீ ரங்காசாரியரவர்கள் முதலிய மஹாவித்துவான்கள் பலரும் சொல்லிவிட்டமையாலும், ….. **இந்தப் பாகத்திற்குக் குறிப்புரை எழுதப்படவில்லை.** ஆயினும், முதலிற் கூறிய வித்துவான்களுடைய முன்னிலையில் பல முறை ஆராய்ச்சி செய்து **ஏட்டில் இருந்தவாறே மூலம் மாத்திரம்** பதிப்பிக்கப்பட்டது."[13]

இக்குறிப்பினால் ஐயரவர்களின் வெளிப்படைத் தன்மையும், அயராமுயற்சியும் அடக்கமும் நம்மை வியப்புறச் செய்கின்றன. இவர் காலத்தில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் இருமொழிப் பெரும்புலமை படைத்தவராய் ஒளி வீசிய **திரு.நாரணையங்கார்** 32, 34-ஆம் செந்தமிழ்த் தொகுதிகளில் **நியாயப் பிரவேச - மணிமேகலை** என்ற பொருண்மையில் எழுதி வெளியிட்டிருந்த ஆய்வுக் கட்டுரையும், 1935-இல் [மதுரை] அவருடைய அனுமான விளக்கமும் ஐயரவர்கள் பார்வையில் படாமல் போனது குறிப்பிடத்தக்கது. இவற்றையெல்லாம் கற்றறிந்த தருக்கப்புலமை வாய்ந்த ஒருவர் வரவினை இக்காப்பியம் எதிர்நோக்கி இருந்தது. அவர் யாவர்? என்பதைப் போக்கிச் சொல்லுதும்.

உ.வே.சா. அவர்களுக்குப் பௌத்தம் பற்றிய கருத்துக்களை அவர்தம் அன்பர்கள் எடுத்துக்கூற உதவிய ஆங்கில நூல்களில், Oldenberg Herman: Buddha - His life, His Doctrine, His Order,

---

13. மணிமேகலை மூலமும் அரும்பத உரையும், ப. 350.

Calcutta, 1927 என்ற நூல்தான் சிறப்பாகக் குறிப்பிடுதற்குரியது.

இனி, ஐயரவர்களின் அரும்பதவுரை, காதைச்சுருக்கம், மணிமேகலைப் பிரயோக விளக்கம், உள்ளிட்ட பின்னிணைப்புக்களும் அரும்பதம் முதலியவற்றின் அகராதியும் பின்வந்த உரையாசிரியர்கட்குக் கலங்கரை விளக்கமாக அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.[14]

டாக்டர் உ.வே.சா. அவர்களுக்குப் பின்னர் மணிமேகலை முழுமைக்கும் உரை எழுத முயன்று முதல் 26 காதைகளுக்கும் மட்டும் விரிவாகவும் விளக்கமாகவும் உரை வரைந்த நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டாரின் உரைத்திறம் குறித்து ஆராய்ந்து காண்போம்.

5. நாவலர் ந.மு.வே. உரைத்திறம்

3.1. முன்னுரை

மணிமேகலை மூலமும் நாவலர் பண்டித ந.மு.வேங்கடசாமி நாட்டார், வித்துவான் ஔவை சு.துரைசாமிப்பிள்ளை பதவுரை விளக்கவுரைகளும் பாகனேரி தனவைசிய இளைஞர் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் திருவாளர் வெ.பெரி.பழ.மு.காசிவிசுவநாதன் செட்டியார் அவர்களால் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வழியே சூலை 1946-இல் முதற்பதிப்பு வெளியிடப்பெற்றது. இவ்வெளியீட்டின் முன்னுரையில்,

> "..... இதற்கோர் எளிய நடையில் அமைந்த உரையொன்று வேண்டியிருத்தலை அறிந்த நாவலர் பண்டித ந.மு.வேங்கடசாமி நாட்டாரவர்கள் அவ்வண்ணமே உரை யெழுதத் தொடங்கினார்கள். தளர்வுறு மூப்பும் தடுப்பரும் நோயும் எய்திய வழியும் சிவபரம் பொருளின்பாலும் செந்தமிழ்த் தொண்டின்பாலும் தளராத ஊக்கம் படைத்த அவர்கள் இந்நூல் முழுதும் உரையெழுதி முடித்தற்குள், அவரது மெலிந்த உடம்பு அவரது உயிரைத் தாங்கியிருக்க மாட்டாது தளர்ந்து நீங்குவதாயிற்று. ஆகவே, இந்நூலின் இறுதி நான்கு காதைகள் உரை எழுதப்படாது நின்று எம்மை வருத்தத் தொடங்கிற்று. அக்குறையினை முடித்தற்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்து ஆராய்ச்சிப் பகுதி ஆசிரியர் ஔவை சு.துரைசாமிப்பிள்ளை அவர்கள் முன்வந்து உரை எழுதி உதவினார்கள். இவ்வுரைக்காக அவர்கள்

---

14. மணிமேகலை மூலமும் அரும்பத உரையும், ப. 392-520.

செய்துள்ள முயற்சியின் அருமை பெருமைகள் அவர் உரையினைக் காண்போர் இனிதறிவர்."[15]

என்று அவர்கள் எழுதியுள்ள பகுதி ஊன்றி நோக்கத்தக்கது. இதனால், நாட்டார் அவர்கள் மறைவுக்குப் பின்னரே ஔவை அவர்கள் மணிமேகலையின் இறுதி நான்கு இயல்களுக்கும் உரை எழுதியுள்ளார் என்ற உண்மை புலனாகும்.

எனினும், ஔவை சு.துரைசாமிப்பிள்ளை அவர்களின் நற்றிணை மூலமும் விளக்கவுரையும் [201 முதல் 400] என்ற தலைப்பில் சென்னை அருணா பதிப்பகத்தாரால் செப்டம்பர், 1968-இல் வெளியிடப்பட்ட நூலின் முன்னுரைப் பகுதியில்,

"சிலம்பும் மேகலையும் என்ற காப்பியம் இரண்டனுள் மணிமேகலையின் பிற்பகுதியில் காணப்படும் பௌத்த தத்துவக் கூறுகள் விளங்கவில்லை எனக் கைவிடப்பட்டிருந்தது. அப்போது திருமலை திருப்பதி திருவேங்கடத்தான் கல்லூரியில் யான் விரிவுரையாளராகப் பணிபுரிகையில், வட மொழிப் புலவர்களான திரு.பிரபாகர சாத்திரி, பாலி மொழிப் புலவர் திரு.ஐயாசாமி சாத்திரி ஆகிய இருவருடைய துணையும் ஆதரவும் பெற்றுப் பௌத்த நூல்களை ஆராய்ந்து, விடுபட்டிருந்த அப்பகுதிக்கு விரிவான ஆராய்ச்சியும் விளக்கமும் எழுதினேன். அதனைக் கண்டு வியப்புற்ற நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்கள் எழுதிய மணிமேகலை உரையில் அவர் விருப்பத்திற் கொப்பச் சேர்த்து வெளியிடப் பெற்றது."[16]

என்று ஔவை குறிப்பிடுதல் மேலே பாகனேரி சிவத்திரு. காசிவிசுவநாதன் செட்டியார் முன்னுரையில் குறிப்பிட்டுள்ள செய்தியுடன் முரண்படுதல் புலனாகும். இருவர் குறிப்புக்களில் உண்மை யாது? என்பது பயில்பவர் சிந்தனைக்கு விடப்பட்டது. நிறுத்த முறையான், முதற்கண் நாவலர் நாட்டார் ஐயா அவர்கள் மணிமேகலை முதல் இருபத்தாறு காதைகளுக்கு எழுதியுள்ள உரைப்பகுதியின் சிறப்புக் கூறுகள் சிலவற்றை நோக்குவோம்.

---

15. மணிமேகலை பதவுரை விளக்க உரைகளுடன், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1946, ப. 6-7.

16. துரைசாமிப் பிள்ளை, ஔவை சு., நற்றிணை மூலமும் விளக்கவுரையும் [201 முதல் 400], அருணா பதிப்பகம், சென்னை, 1968, முகவுரை, ப. x

3.2. உரையின் சிறப்புக்கூறுகள்

ஒவ்வொரு காதைக்கும் உரை வரைதற்கு முன், அக்காதையின் பொருண்மையினைப் பயில்பவர் புரிந்துகொண்டு படித்தற்கு உதவியாகக் காதைச் சுருக்கம் பிறைக் கோட்டிற்குள் கொடுக்கப் பட்டுள்ளது. ஏற்புழி இலக்கணம் கூறுதல், பாடபேதம் சுட்டுதல், அருஞ்சொற்பொருள் விரித்தல், வினைமுடிபு காட்டுதல், ஏனைய இலக்கியங்களிலிருந்து மேற்கோள் தருதல் முதலியன நாவலர் நாட்டார் அவர்கள் உரையின் சிறப்புக் கூறுகள் ஆகும். உ.வே.சா. அவர்கள் வழங்கியுள்ள அரும்பதவுரை, மேற்கோள்கள் முதலியவற்றை இவ்வுரை புறக்கணித்துவிடாமல் பின்பற்றி யுள்ளமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. பற்பல புதிய மேற்கோள் களும் நாவலரால் காட்டப்பட்டுள்ளன என்பது சுட்டத்தக்கது. ஒரு சில எடுத்துக்காட்டுக்களை நோக்குவோம்.

3.2.1. உ.வே.சா. உரையினை வழிமொழிதல்

அ. உலகம் திரியா ஓங்குயர் விழுச்சீர் *1.1*

நன்மக்களுடைய ஒழுக்கம் வேறுபடாத மிகவும் உயர்ந்த சீரிய புகழ்.

உ.வே.சா. குறிப்புரை.

நன்மக்களது ஒழுக்கம் வேறுபடாத மிக உயர்ந்த சீரிய புகழ் .... - ந.மு.வே.

ஆ. மெய்த்திறம் வழக்கு நன்பொருள் வீடு எனும் இத்திறம் ...... *1. 11 - 12*

மெய்த்திறம் - மெய்ம்மையை உணர்த்துவனவாகிய நூல் வகைகள். வழக்கு - உலகியல், நன்பொருள் - தத்துவம், வீடு - முத்தி; "மெய்த்திறம் வழக்கென விளம்புகின்ற, எத்திறத்தானும்" *[27. 106 - 7]* என்பர். மேலும், இப்படியே, "அருமறை விதியும் உலகியல் வழக்கும், கருத்துறை பொருளும் விதிப்பட நினைந்து" *[66]* என்றார் கல்லாடத்தும் - **உ.வே.சா.**

"மெய்த்திறம் - மெய்ந்நூல் வகை; ...."மெய்த்திறம் வழக்கென விளம்புகின்ற எத்திறத்தினும் இசையாது இவர் உரை" *[27. 106 – 7]*. என மேல் வருவதனாலும் இப்பொருள் அறியப்படும். நன்பொருள் வீடு என்பவற்றை ஒன்றாயடக்கி, "அருமறை விதியும் உலகியல் வழக்கும், கருத்துறை பொருளும் விதிப்பட நினைந்து" *[66]* என்றார் கல்லாட ஆசிரியர். - ந.மு.வே.

இ. வினையின் வந்தது வினைக்கு விளை வாயது. 4. 113.- கன்மத்தால் வந்தது. கன்மத்திற்கு விளைநிலமாக உள்ளது. - **உ.வே.சா.**

கன்மத்தால் உண்டானது; கன்மத்திற்கு விளைநிலமாக உள்ளது. - **ந.மு.வே.**

ஈ. தகவிலை கொல்'லோ 6. 138 - தகவின்மையை உடையாயோ; தகவு நின்னிடம் இல்லையோ என்றுமாம். **- உ.வே.சா.** - தகவின்மையை உடையயோ என அழைத்து; நின்னிடம் தகவு இல்லையோ என்றுமாம். - **ந.மு.வே.**

[காண்க: மணிமேகலை உரையுடன், சை.சி.நூ.கழகம், சென்னை, 1946, ப. 93-94].

2. உண்டொழி மிச்சில் உண்டு *13.14*

- அவர்கள் உண்டொழிந்த மிகுதியை உண்டு; இது, 'விருந்தோம்பி, மிச்சின் மிசைவான்' [85] என்ற குறளின் பொருளைத் தழுவி வந்தவாறு காண்க.. - **உ.வே.சா.**

"அனைவரும் உண்டு எஞ்சிய உணவை உண்டு....

உண்டொழி மிச்சில் உண்டு என்பது, விருந்தோம்பி மிச்சின் மிசைவான் [குறள், 85] என்பதன் பொருளைத் தழுவி வந்துள்ளது. **- ந.மு.வே.**

முன்னோர் மொழி பொருளைப் பொன்னேபோல் போற்றியமைக்கு இவை ஒருசில எடுத்துக்காட்டுக்கள் ஆகும்.

3.2.2. இலக்கணம் கூறுதல்

1. ஓங்குயர் இரண்டும் ஒருபொருட் பன்மொழிகள் [1.1]
2. நேர் அனையாய் - நேர் ஒப்பாய்; உவமச் சொல் இரண்டிணைந்தது. 2.16.
3. காண்பன - காண்டல் எனத் தொழிற் பெயருமாம். 4.6
4. வால்வெண் - ஒரு பொருள் இருசொல். 4.18
5. பாய்ந்தபுண் - பெயரெச்சம், காரணப் பொருட்டாயது. 5.47
6. அரந்தை கெடும் - இத்துயரினைப் போக்குவீராக..... / கெடும்/ - செய்யும் என்னும் [வாய்பாட்டுச்] சொல்; ஏவலில் வந்தது. 6. 185
7. உண்டி - உண்ணுதி, வேண்டிக்கோடலில் வந்தது. 10.38
8. கண்டன - காணப்பட்டன. "செயப்படுபொருளைச் செய்தது போலத், தொழிற்படக் கிளத்தலும் வழக்கியல் மரபே." [தொல்.வினை. 49] என்பதனாற் போந்த வழுவமைதி. 15.30.

9. செல்லல் செல்லல் - செல்லாதே, செல்லாதே; ஏவல் முற்று; அடுக்கு விரைவு பற்றி வந்தது. 21.27.

10. ஈங்கு - அசையுமாம். 24.66

இவை ஒரு சில எடுத்துக்காட்டுக்கள் ஆகும்.

3.2.3. பாட வேறுபாடு சுட்டுதல்

ஏடெழுதுவோரின் கவனக்குறைவாலும் பாடம் சொல்லுவோரின் கற்பனையாலும் மூலபாடம் இருப்பவும் அவ்விடத்தில் வேறு பாடம் புகுந்துவிடுதல் வழக்கம். மணிமேகலையில் காணப்படும் பாடபேதங்கள் சிலவற்றை நாவலர் உரைக்குறிப்பினின்றும் காணபோம்.

1. கடிப்பிகூஉம் என்னும் பாடத்திற்கும் இகூஉம் - அறையும் என்னும் பொருட்டாம். 1.31.
2. கோடுடை தாழை என்னும் பாடத்திற்குச் சங்கு உடைந்தாற் போலும் தாழையின் மடல் என்க. 4. 17.
3. மீயான் - மாலுமி; நீயான் என்பதும் பாடம். 4. 28.
4. ஆழியந்திருவடி என்ற பாடத்திற்கு ஆயிரம் ஆரங்களை உடைய சக்கர ரேகை பொருந்திய திருந்திய அடி என்றுரைக்க. 5. 104.

இவை ஒரு சில எடுத்துக்காட்டுக்கள் ஆகும்.

3.2.4. அருஞ்சொற்பொருள்

1. கச்சை - அடிவயிற்றில் கட்டும் கயிறு. 1. 28.
2. வஞ்சி - வஞ்சிமரம்; கொடியுமாம். 1. 46.
3. துறவி - துறவு, **'துறந்தோர் தம் முன் துறவி எய்தவும்'** [சிலப். 27. 95]

என்பது காண்க.

4. **வேத்தியல்** - அரசர்க்காடும் கூத்து; **பொதுவியல்** - எல்லார்க்கும் ஒப்ப ஆடும் கூத்து. 2. 18.
5. நன்கனம் - நன்றாக; இச்சொல், நன்கனம் நீத்து 3. 88, நன்கனம் நவிற்றி 13. 24, நன்கனம் அறிந்தபின் 13. 26 என இக்காப்பியத்துப் பயின்று வந்துள்ளது.
6. இலவந்திகை - இயந்திர வாவி. 3. 45.
7. சிறை - அணை; நிறை - காமத்தை உள்ளே அடக்கி நிறுத்துதல். 5. 19 - 20

8. திரைதவழ் பறவை - குளுவை முதலியன. விரிசிறைப் பறவை - போதா முதலியன. எழுந்து வீழ் சில்லை - சிரல் [- மீன்கொத்தி] முதலியன. இவை நான்கும் நீர்வாழ் பறவைகள். 8.28-29.

9. அமுதசுரபி - அமுதத்தைக் கொடுக்கும் காமதேனுவைப் போன்றது என்பது பொருள். சுரபி - பசு. இனி, சுரபி - மணம் எனக்கொண்டு, அமிழ்தம் போன்ற மணம் உடையது என்றும் கூறுவர். 11.44.

10. தாபதக்கோலம் - தவவேடம்; என்றது பிக்குணிக்கோலத்தை. 18.54.

3.2.5. வினைமுடிபு காட்டுதல்

தொடர்நிலைச்செய்யுளாதலின், சொற்களின் இருப்பினைப் பொருள் இயைபு நோக்கி வினை முடிபு காட்டுதல் நச்சினார்க்கினியரை உள்ளிட்ட செவ்வியல் இலக்கிய உரையாசிரியர்களின் போக்காகும். இவர்களைப் பின்பற்றி ந.மு.வே. வினை முடிபு காட்டும் பகுதிகள் இரண்டொன்றினைக் காண்போம்.

1. "பூங்கொடி உருவம் பெயர்ப்ப, சூழ்வோன் சுதமதி முகம் நோக்கி உரையென, உரைப்ப, அகல்வோன் எய்தியது உரையென, அவள் சங்கதருமன் அருளிய வாமன் பாதத்தைப் பாராட்டுதல் அல்லது மிகைநா இல்லேன் என, அவன் போய பின், மணிமேகலை சுதமதியொடு நின்ற எல்லையுள், மணிமேகலா தெய்வம் பைந்தொடியாகிப் பீடிகையை வலங்கொண்டு ஓங்கி ஒதுங்கி நா நீட்டும்; நீட்டுழி, திருமுகவாட்டி பெய்தலும், பசலை மெய்யாட்டி முதிராத்துன்பமொடு மாநகர் மருங்குவந்திறுத்தனள் என்று முடிக்க." - 5. மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய காதை.[17]

2. "ஆதிரை தொழுது கிளவியோடு பசிப்பிணி அறுகெனக் கூறி நிறைதர இட்டனள் என்க." 16. 128 - 135.[18]

---

17. மணிமேகலை பதவுரை விளக்க உரைகளுடன், ப. 77.

18. அதே நூல், ப. 212.

3. "குழலி எழுந்து கேட்டு, எழுந்து நீங்கி வெய்துயிர்த்துப் புலம்பி, அழுதேங்கி அயாவுயிர்த் தெழுதலும், இருந்தெய்வம் உரைத்தலும், பூங்கொடி பொருந்தி, 'நின்பேரருள் பெறுவேன்' என, தெய்வம் கூறும்; அங்ஙனம் கூறும் தெய்வம், 'என் சொல்தேறு' என, மணிமேகலை, 'எனக்கு அருள்' என்றலும் துவதிகன் உரைக்கும்; உரைப்பவன் உரைத்தலும், நல்லாள் நீங்கி மயக்கொழிதலும், கதிரோன் உலகு துயில் எழுப்பினன் என வினை முடிபு செய்க."

3.2.6. மேற்கோள் காட்டுதல்

காதைப் பொருளை விளக்குதற் பொருட்டும் உறுதி செய்தற் பொருட்டும் நாவலர் தக்க இலக்கிய மேற்கோள் தருதல் தனிச் சிறப்புக்களில் ஒன்றாகும். சில எடுத்துக்காட்டுக்கள் சாலும்.

1. நரகர் [1. 23 – 24]

"தவமறைந்து ஒழுகும் தன்மை இலாளர்
அவமறைந்து ஒழுகும் அலவற் பெண்டிர்
அறைபோகு அமைச்சர் பிறர்மனை நயப்போர்
பொய்க்கரி யாளர் புறங்கூற்றாளர்"

என்னும் இவர்" என்று சிலப்பதிகாரத்தினின்றும் மேற்கோள் நல்கினார்.

2. **இலவந்திகை** - "நீராவியைச் சூழ்ந்த வயந்தச் சோலை; அஃது அரசனும் உரிமையும் ஆடும் காவற் சோலை" [சிலம்பு, 10. 30-31]

என்பர் அடியார்க்கு நல்லார்.

3. கரிகாற் பெருவளத்தான் உரை முடிபு காட்டிய இவ்வரலாறு,

உரைமுடிவு காணான் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப - நரை முடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன்; குலவிச்சை
கல்லாமல் பாகம் படும்" [21]

என்னும் பழமொழி வெண்பாவானும் .... அறியப்படும்.[19]

4. திட்டி - திருஷ்டி; திட்டிவிடம் - கண்ணில் நஞ்சுடைய பாம்பு; அது பார்த்தால் உயிர்கள் சாம் என்பர். [9.49]

---

19. மணிமேகலை பதவுரை விளக்க உரைகளுடன், ப. 60-61.

"திட்டியின் விடம்அன்ன கற்பின் செல்வியை"

[கம்ப. கும்ப. 80]

என்றார் கம்பரும்.[20]

5. கேள்வி யாளரின் தோட்ட செவியை நீ ஆகுவை ஆம் எனில் [18. 134 – 135]

"கேள்வியாளர் போல நீ துளைக்கப்பட்ட செவியை உடையை ஆகுவையானால்"

"கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால் தோட்கப் படாத செவி" - [திருக்குறள். 418]

என்பது ஈண்டு உணர்தற்பாலது.[21]

6. கோணம் [18. 163] – தோட்டி என்னும் கருவி. "கோணம் தின்ற வடுவாழ் முகத்த" [மதுரைக் காஞ்சி. 592].

7. பள்ளி [26. 72] – சாலை. இதனைத், "திணிமணற் புதுப்பூம் பள்ளி" [புறம். 33] என்னும் புறநானூற்றினும் காண்க.[22]

நிறைவுரை

நாவலர் பண்டித ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்கள் அஃகி அகன்ற நுண்புலம் வாய்க்கப் பெற்ற தமிழ்ப் பேரறிஞர். மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் சன்மானிக்கப் பெற்றவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றி நன்மாணாக்கர் பலரை உருவாக்கியவர். டாக்டர் உ.வே.சா. அவர்கள் எழுதியுள்ள அரும்பத உரையினை அடிப்படையாகக் கொண்டு எளிய கல்வியாளரும் விளங்கிக் கொள்ளும் வகையில் நனி சிறந்த உரையினை வரைந்ததால் மணிமேகலை காப்பியத்தினைப் பல்கலைக்கழக மாணவர்களே யன்றித் தமிழ் ஆர்வலரும் பயின்று பயன்பெற்று வருகின்றனர்.

நாவலர் அவர்கள் உரையில் காணப்படும் சிறப்புக் கூறுகளில் சிலவற்றை மேலே கண்டோம். புலவர், பி.ஒ.எல், எம்.ஏ, எம்.ஓ.எல், பயிலும் மாணாக்கர்க்கு நாவலர் நாட்டார் ஐயாவின் உரையுடன் கூடிய மணிமேகலை பாட நூலாக வரையறுக்கப் பட்டிருந்தமையால், சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதி முதலாக ஆசிரியர் மாணாக்கர், ஆர்வலர், ஆராய்ச்சியாளர் அனைவர்க்கும் பெரும்பயனாக அவ்வுரை அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

20. மணிமேகலை பதவுரை விளக்க உரைகளுடன், ப. 124.

21. அதே நூல்,, ப. 60-61.

22. அதே நூல், ப. 379-380.

இனி, இக்காப்பியத்தின் பின்னான்கு இயல்களுக்குப் பேருரை வகுத்த உரைவேந்தர் ஒளவை சு.துரைசாமிப்பிள்ளையின் உரைத்திறம் குறித்து உற்றுநோக்குவோம்.

6. உரைவேந்தரின் உரைத்திறம்

4.1. முன்னுரை

இக்காலத்து உரையாசிரியர்களில் மிகுதியான செவ்வியல் இலக்கியங்களுக்கும் சமய இலக்கியங்களுக்கும் உரைவகுத்துள்ள தனிச்சிறப்பு சித்தாந்த கலாநிதி, உரைவேந்தர் ஒளவை சு.துரைசாமிப்பிள்ளை அவர்களைச்சாரும். உரை எழுதப்படாமல் விடுபட்டிருந்த மணிமேகலைக் காப்பியத்தின் பின் நான்கு காதைகட்கும் அவர்கள் எழுதியுள்ள அரிய உரை அறிஞர் பெருமக்கள் அனைவராலும் பாராட்டப்பெறுகிறது. ஒளவை அவர்கள் பதிற்றுப்பத்துக்கு எழுதிய உரையின் சிறப்பினை உரைக்கப் புகுந்த திருமுறைச் செல்வர் க.வெள்ளைவாரணனார்,

.....ஆங்கிலப் பயிற்சியுடன் நிரம்பிய தமிழ் நூற்புலமையும், பண்டைத் தமிழிலக்கியச் சுவைநலன்களை உரை வாயிலாகவும் சொற்பொழிவு வாயிலாகவும் யாவரும் உணரச் செய்தல் வேண்டும் என்னும் பேரார்வத்தால் இடைவிடாது உழைக்கும் நன்முயற்சியும் இனிது வாய்க்கப்பெற்ற திரு.பிள்ளையவர்கள்தம் புலமைத்திறத்தால் தமிழகத்திற்குப் பெருந்தொண்டு செய்து வருகின்றார்கள்.

இவர்கள் பண்டைத் தமிழ் நூல்களுக்கு உரை கூறும் முறையில் பெருந்தொண்டு புரிந்த உரையாசிரியர்கள் ஆகிய இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர் முதலிய செந்தமிழ்ச்சான்றோர்களின் உரைத்திறன்களை எல்லாம் நன்குணர்ந்து செறிவும் தெளிவும் அமைந்த இனிய செந்தமிழ் நடையில் பழந்தமிழ் நூல்களுக்கு விரிவுரை கூறும் மேதகவு உடையராய் விளங்குதல் இவர்களால் இயற்றப்பெற்ற இப்பதிற்றுப்பத்தின் விரிவுரையினால் நன்கு புலனாகிறது. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகிய ஐங்குறுநூற்றுக்கு இன்சுவை கெழும இவர்கள் இயற்றிய விரிவுரை தமிழறிஞர் களால் பெரிதும் பாராட்டப் பெறும் சிறப்புடையதாகும்.

மணிமேகலைக்கு நாவலர் ந.மு.வேங்கசாமி நாட்டாரவர்கள் எழுதிய விரிவுரைப் பகுதியில் எஞ்சிய [நான்கு] காதைகளுக்கு இவர்கள் இயற்றிய உரைப் பகுதி இவர்களது பரந்த

நூற்பயிற்சிக்குச்சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது."[23] என்று இவர்தம் உரைநலத்தினைப் பாராட்டியிருத்தல் இவண் சுட்டுதற்குரியது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தமிழாராய்ச்சித் துறையில் திருமுறைச் செல்வரும் உரைவேந்தரும் ஒரு காலத்தே அரும்பணி ஆற்றிய துறைபோகிய பேரறிவுச் செல்வர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களோடு கல்வெட்டாராய்ச்சிப் பேறறிஞர் தி.வை.சதாசிவப் பண்டாரத்தாரின் உளங்கலந்த கேண்மையும் சுட்டுதற்கு உரியது.

இப்பின்புலத்துடன், ஔவை அவர்களின் உரைத்திறம் குறித்து ஆராய்வோம்.

4.2. பின்னான்கு காதைகள்

சாத்தனார் மணிமேகலை காப்பியத்தினை முப்பது காதைகளில் பாடினார். காதை - கதை தழுவிய பாட்டு. இக்காப்பியத்தின் பதிகம்,

"வளங்கெழு கூல வாணிகன் சாத்தன்
மாவண் தமிழ்த்திறம் மணிமேகலை துறவு
ஆறைம் பாட்டினுள் அறிய வைத்தனென்"

என்று முப்பது காதையினையும் ஆறைம்பாட்டு என்று சுட்டியுள்ளது.

காவிரிப்பூம்பட்டினத்து வணிக மரபில் வந்த கோவலனுக்கும் கலைச் செல்வியாகிய மாதவிக்கும் பிறந்தவள் மணிமேகலை. கணவன் கொலையுண்டபின் மாதவி தன் மகளுடன் போதிசத்துவர் ஆகிய அறவண அடிகளிடம் சரண்புகுந்து உபதேசம் கேட்டுத் துறவு பூண்டாள். அறச்செல்வி மணிமேகலையினைப் பெரிதும் விரும்பி இறுதியில் காஞ்சனன் என்னும் விஞ்சையனால் கொலை செய்யப்பட்ட சோழ இளவரசன் உதயகுமரன் இறப்பிற்குத் தன்னைக் காரணம் காட்டி இராசமாதேவி மணிமேகலையினைச் சிறைப்படுத்திக் கொடுமைப்படுத்தினள். மாதவியின் வேண்டுதலால் அறவண அடிகள் இராசமாதேவியை அணுகி நன்னெறி புகட்டி அவளை விடுவித்தனர். அப்போது, அறவண அடிகள்,

---

23. துரைசாமிப் பிள்ளை, ஔவை சு., பதிற்றுப்பத்து மூலமும் விளக்கவுரையும், சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகவெளியீடு, சென்னை, *1950*, ப. *30-31*

"அரைசன் தேவியோ டாயிழை நல்லீர்!
புரைதீர் நல்லறம் போற்றிக் கேண்மின்!
மறுபிறப்பு உணர்ந்த மணிமேகலை! நீ
பிறவறம் கேட்ட பின்னாள் வந்துனக்கு
இத்திறம் பலவும் இவற்றின் பகுதியும்
முத்தேர் நகையாய்! முன்னுறக் கூறுவல்"

[மணி. 24. 141 – 146]

என்று கூறி எழுதலும், மணிமேகலையும் மற்றவரும் வணங்கி வழியனுப்பினர். மணிமேகலை காவிப்பூம்பட்டினத்தில் பௌத்தப் பள்ளியில் தங்கினள் எனின், மன்னகுமரனுக்குக் கூற்றானவள் இவள் என்று பலரும் இகழ்ந்து பேசுதற்கு அஞ்சி, ஆபுத்திரன் நாட்டிற்கும் மணிபல்லவத்தீவிற்கும் சென்று பல்வகை அனுபவங்களையும் அடைந்தபின் வஞ்சிமாநகர் சென்று தாய் கண்ணகி, தந்தை கோவலன் ஆகியோரின் கோட்டத்தைப் பணியப்போவதாகக் கூறி வான்வழி படர்ந்தனள். *[மணி. 24. 147 - 156].*

வஞ்சிமாநகர் வந்தடைந்த மணிமேகலை கடவுட் கோலத்துக் கண்ணகியைப் பலவாறு பரவினள். அவளுக்கு,

"...... ....

நரை கமழ் கூந்தல் நங்கை! நீயும்
முறைமையின் இந்த மூதூர் அகத்தே
அவ்வவர் சமயத்து அறிபொருள் கேட்டு
மெய்வகை இன்மை நினக்கே விளங்கிய
பின்னர்ப் பெரியோன் பிடகநெறி கடவாய்!

[மணி. 26. 62 – 66]

என்று தாய் அறிவுறுத்தினாள்.

தாயின் அறிவுரையின்படி ஆண் உருத் தாங்கி மணிமேகலை வஞ்சிமாநகரில் வாழ்ந்த பல்வேறு சமயச் சான்றோரிடமும் அணுகி அவரவர்தம் கொள்கைகளைப் பாடம் கேட்டு அவற்றின் பொருந்தாமையினையும் உணர்ந்தனள் என்பது இக்காப்பியத்தின் இருபத்தேழாவது பகுதியாகிய சமயக்கணக்கர்தம் திறம் கேட்ட காதையில் இயம்பப்பெற்றது.

இதனைச் சார்ந்துவரும் இருபத்தெட்டாவது காதை கச்சிமாநகர் புக்க காதை ஆகும். மணிமேகலை வஞ்சிமாநகரில் பல்வேறு பகுதிகளையும் பௌத்தப் பள்ளியினையும் பார்த்த

செய்தியை இக்காதையின் 1 - 162 அடிகளில் விரிவாகக் கூறிய சாத்தனார், அறச்செல்வியாகிய அவள் கச்சிமாநகர் அடைந்த செய்தியையும் பெற்ற அனுபவங்களையும் எஞ்சிய 163 - 245 அடிகளில் எடுத்துரைத்தனர்.

அடுத்துவரும் தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதையில் அறவண அடிகள் அறச்செல்விக்கு முதலில் பௌத்தத் தருக்கக் கொள்கைகளைப் பாடம் சொல்லுதல் விரிவாகக் கூறப்பட்டது. இறுதியில் இடம்பெறும் பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற காதை அடிகள் பௌத்தத் தத்துவக் கொள்கைகளை இளம்பிக்குணி மணிமேகலைக்குக் கற்பித்தலை விரித்துக்கூறுகிறது.

எனவே, புறச்சமயம் எனப்படும் பரபக்கம் **சமயக்கணக்கர்தம் திறம் கேட்ட காதையிலும், சுபக்கமாகப்** பௌத்தத் தருக்கம் **தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதையிலும்,** பௌத்த தத்துவம் **பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற காதையிலும் விளக்கப்பெற்றமை அறியத்தக்கது. இம்மூன்று காதைகளையும் மூன்று நூல்களாகக் கருதுதல் வேண்டும்.** இம்முறையினைப் பின்பற்றியே சகல ஆகமப் பண்டிதர் எனப் போற்றப்படும் அருணந்திசிவம் சிவஞான சித்தியார் பரபக்கத்தை முதலிலும், சுபக்கத்தின் தொடக்கமாக அளவை இலக்கணத்தையும், தொடர்ந்து தாம் நிலைநாட்ட வேண்டிய சைவ சித்தாந்த மெய்ப்பொருட் கருத்துக்களையும் தருக்க முறைப்படி ஆராய்ந்து இனிய பாடல்களில் வடித்துக் கொடுத்துள்ளார் என்பது நோக்குதற்குரியது.

மேற்சுட்டப்பட்ட மூன்று காதைகளையும் மூன்று தனி நூல்களாகச் சாத்தனார் படைத்துத் தம் காப்பியத்தின் இறுதியில் இணைப்பதற்கு வழிகாட்டியாக விளங்கியவர் இளங்கோ அடிகள் ஆவர். கலைக்களஞ்சியமாகத் திகழும் அரங்கேற்று காதை ஒரு தனிநூலாகக் கருதத்தக்க தகுதி படைத்தது என்பதும் அதனைத் தம் ஒப்பற்ற காப்பியம் ஆகிய சிலப்பதிகாரத்தில் இடம் அறிந்து ஒட்டியிருத்தல் சாத்தனாரின் முப்பெரு நூல் இணைப்பிற்கு வழிகாட்டியது என்பதும் குறிப்பிடத்தக்கவை.

சாத்தனார் மேலே சுட்டப்பட்ட மூன்று காதைகளையும் மூன்று சிறுபாட நூல்களாகவே படைத்துள்ளார். இவை நோக்கீட்டு நூல்களாகவும் பயன்படும். ஆங்கிலத்தில் இவற்றை Manuals எனக் கூறுவர். பாலி இலக்கியப் பெரும் பேறறிஞர் ஆகிய டாக்டர் பி.சி.லா,

"The predominant feature of a manual, is this that it presents its theme systematically in a somewhat terse and concise form, purporting to be used as a handbook of constant reference"

என்று விளக்கம் தந்துள்ளமை இங்கு எண்ணிப் பார்ப்பதற்கு உரியது.[24]

இப்பின்புலத்துடன் நிறுத்த முறையான் முதற்கண் சமயக்கணக்கர்தம் திறம்கேட்ட காதையினையும் அதற்கு ஔவை அவர்கள் வரைந்துள்ள உரையினையும் ஆராய்வோம்.

4.2.1. சமயக்கணக்கர்தம் திறம்கேட்ட காதை [மணி. 27]

/கணக்கு/ என்ற பல பொருள் ஒரு சொல் இங்கு /நூல்/ என்ற பொருளில் பயின்றுள்ளது. கீழ்க்கணக்கு, மேற்கணக்கு என்ற வழக்கினை நோக்குக. சமயக்கணக்கு – சமய நூல் ஆகும். சமயக்கணக்கர் - சமய நூல்களில் ஆழ்ந்த புலமையாளர். எனவே, சமயக்கணக்கர் தம் திறம்கேட்ட காதை என்பது வஞ்சிமாநகரில் பல்வேறு சமய நூல்களைக் கற்றுத்தேர்ந்தவர்களிடம் மணிமேகலை அவற்றின் சாரத்தினைப் பாடம் கேட்ட செய்தியைக் கூறும் காப்பியப் பகுதியைக் குறிக்கும் என்பது புலனாகும்.

தத்துவ நூலாசிரியர்கள் தத்தம் காலத்து வழங்கி வந்த தத்துவங்களின் அடிப்படைக் கொள்கைகளைத் தொகுத்துச் சுருக்க விளக்கமாக நூல்கள் வரைந்துள்ளார். இவர்களில் மணிமேகலை ஆசிரியர் தண்டமிழாசான் சாத்தனார் யாத்துள்ள **சமயக் கணக்கர்தம் திறம்கேட்ட காதைதான் இந்தியத் திருநாட்டில் தோன்றிய முதல் சர்வதரிசன நூல்** [First Compendium of Indian Philosophy] என்னும் சிறப்புக்குரியது. இவர்காலம் கி.பி.450- கி.பி. 550 என்பதாம். இதில் பத்து வகைத் தத்துவச் சிந்தனைகள் தொகுக்கப்பட்டுள்ளன.

சாத்தனார் பௌத்த தருக்க நூலறிவு பெறுவதற்கு மூல நூலாகத் திகழ்ந்த **பிரமாண சமுச்சயம்** என்னும் நூலின் ஆசிரியர் திக்கநாகர் [Dignaga] தம்நூலில் நியாயம், வைசேடிகம், சாங்கியம், மீமாம்சம் என்ற நான்கு தரிசனங்களை மட்டும் குறித்துள்ளார். கி.பி. 6ஆம் நூற்றாண்டினராகிய **அரிபத்திரசூரி** என்பாரும் **சட்தரிசன சமுச்சயம்** என்ற நூலில் மேலே சுட்டப்பட்ட

24. கந்தசாமி, சோ.ந., தமிழிலக்கியத்தில் பௌத்தம், ப. 230.

வைதிகத் தத்துவங்கள் நான்கனுடன் சமணம், பௌத்தம் என்ற வேதமறுப்புத் தத்துவங்கள் இரண்டையையும் சேர்த்து ஆறு [-ஷட்] தத்துவங்களைப் [-தரிசனங்களை] பேசியுள்ளார். கி.பி. 8ஆம் நூற்றாண்டினராகிய ஆதிசங்கரரின் பெயரால் வழங்கிவரும் **சர்வதரிசன சித்தாந்த சங்கிரகம்** என்ற நூலில் உலகாயதம், சமணம், நால்வகைப் பௌத்தம் [-சௌத்திராந்திகம், வைபாடிகம், மாத்தியமிகம், யோகாசாரம்] வைசேடிகம், நியாயம், இருவகை மீமாம்சம் [-பூர்வம், உத்தரம்], சாங்கியம், யோகம் [-பாதஞ்சலியம்], பௌராணிகம் [- வேதவியாசர் நெறி], வேதாந்தம் என்பன இடம்பெற்றன. கி.பி. 14ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மாதவர் தம் சர்வதரிசன சங்கிரகத்தில் சார்வாகம், பௌத்தம், ஆருகதம் [-அருகநெறி ஆகிய சமணம்], இராமாநுசம் [- விசிட்டாத்துவிதம்], பாசுபதம், சைவம், பிரதியபிஞ்ஞை [- காசுமீர் சைவம்] இரசேசுவர வாதம், வைசேடிகம், நியாயம், மீமாம்சை, பாணினியவாதம், சாங்கியம், யோகம், வேதாந்தம் என்ற தத்துவங்களை விரிவாகக் கூறியுள்ளார். இவர் காலத்திற்குச் சற்று முன்பு தமிழில் தோன்றிய அருணந்திசிவத்தின் சிவஞான சித்தியார் பரபக்கம், தத்துவப் பிரகாசம், சிவநெறிப்பிரகாசம் என்ற பனுவல்களிலும் பல்வேறு புறச்சமய, தத்துவங்கள் ஆராயப் பெற்றுள்ளன. கி.பி. 9ஆம் நூற்றாண்டில் தோன்றிய **நீலகேசி** என்னும் சமணக் காப்பியத்தில் நால்வகைப் பௌத்தம், ஆசீவகம், சாங்கியம், வைசேடிகம், வேதவாதம், பூதவாதம் என்பன ஆராயப்பெற்றுள்ளன.[25]

சமயக்கணக்கர்தம் திறம்கேட்ட காதையில் 1. அளவை வாதம் [27. 3 – 85], 2. சைவம் [27. 86 – 95], 3. பிரமநெறி [27. 96 – 97], 4. வைணவம் [27. 98 – 99], 5. வேதநெறி [27. 100 – 105], 6. ஆசீவகம் [27. 108 – 165], 7. நிகண்டம் [சமணம், 27. 166 – 201], 8. சாங்கியம் [27. 202 – 240], 9. வைசேடிகம் [27. 241 – 262], 10. பூதவாதம் [உலகாயதம், 27. 263 – 276] என்ற பத்துவகைத் தத்துவங்களின் கருத்துக்கள் அவ்வந்நெறியாளரின் கூற்றில் அமைத்து இந்தக் காதையினை யாத்துள்ளார்.

வேதத்தினை உடன்பட்ட தத்துவங்களை வைதிகத் தத்துவங்கள் [Vedic Systems or Homogeneous Systems] என்றும், உடன்படாத தத்துவங்களை வேதமறுப்பு அல்லது அவைதிகத் தத்துவங்கள் [Non-Vedic Systems or Heterogeneous Systems]

25. கந்தசாமி, சோ.ந., இந்தியத் தத்துவக் களஞ்சியம், தொகுதி - 1, மெய்யப்பன் பதிப்பகம், சென்னை, 2003, ப. 22-23.

என்றும் பேராசிரியர் **எஸ்.என்.தாஸ்குப்தா, டாக்டர் எஸ்.இராதகிருஷ்ணன், மூத்த தத்துவ அறிஞர் ஹிரியண்ணா** என்போர் வகுத்துக் கொடுத்துள்ளனர். இவ்விரண்டனுள் அடங்காத **இறையியல் நெறிகள்** [Theological Systems] ஆகிய 1. சைவம், 2. பிரமநெறி 3. வைணவம் என்பன மூன்றும் தனிவகைத் தத்துவமாகக் கொள்ளப்படும்.

சமயக்கணக்கர்தம் திறம்கேட்ட காதைக்கு உரைவேந்தர் எழுதியுள்ள விரிவான உரையின் திறத்தினை ஆராய்ந்து காண்பதற்கு மேலே வழங்கப்பெற்றுள்ள அடிப்படைகள் வேண்டப்படுவன. இனி, சாத்தனார் வழங்கியுள்ள தத்துவ வரிசையில் முதலில் இடம்பெறும் அளவைவாதம் என்ற பகுதியினை நோக்குவோம்.

4.2.1.1. அளவை வாதம் [27. 5 – 85]

சாத்தனார் காலத்தில் பெண்கள் எளிதில் தத்துவக் கல்வியை அத்துறை ஆசிரியரிடமிருந்து கற்பது எளிதன்று. இதனை,

"இளையள் வளையோள் என்றுனக்கு யாவரும்
விளைபொருள் உரையார் வேற்றுருக் கொள்கென
மையறு சிறப்பின் தெய்வதம் தந்த
மந்திரம் ஓதியோர் மாதவன் வடிவாய்" [மணி. 26. 68 – 71]

என வரும் பகுதி புலப்படுத்துகிறது. வஞ்சிமாநகரில் (பௌத்தம் தவிர] பல்வேறு இந்தியத் தத்துவங்களிலும் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களிடம் பாடம் கேட்க முற்பட்ட அறச்செல்வி மணிமேகலை,

"நவையறு நன்பொருள் உரைமினோ எனச்
சமயக் கணக்கர் தம்திறம் சார்ந்து
வைதிக மார்க்கத்து அளவை வாதியை
எய்தினள்; எய்திநின் கடைப்பிடி இயம்புஎன"
[மணி. 27. 1-4]

என வேண்டினள். அளவைவாதம் என்பது நியாய தத்துவம் ஆகிய நையாயிகத்தினைக் குறிக்கும். வடமொழியில் பிரமாணம் என வழங்கப்படும் சொல், தமிழில் அளவை என்று சாத்தனாரால் தமிழ்ப்படுத்தப் பெற்றது. பொருள் உண்மையினை ஆராய்ந்து காண்பதற்குரிய மூலங்கள், பிரமாணங்கள் அல்லது அளவைகள் என்று கூறப்படும். ஆங்கிலத்தில் Sources of Knowledge என்று குறிப்பிடுதல் வழக்கம்.

மணிமேகலைக்கு அளவை நூற்பொருளைக் கற்பிக்கும் பிரமாணவாதி வைதிக நெறியினன். ஆதலின், வைதிக நெறியினராகிய வேதவியாசன், கிருதகோடி, சைமினி ஆகிய மூவரும் தாம் தாம் கொண்ட அளவைகள் [- பிரமாணங்கள்] முறையே பத்தும், எட்டும், ஆறும் என்றனர் [27. 5 – 8]. தன் உரையினை முடிக்குங்கால் உலகாயதம், பௌத்தம், சாங்கியம், நையாயிகம், வைசேடிகம், மீமாம்சகம் ஆகிய இவற்றின் ஆசிரியர்கள் முறையே பிருகற்பதி, சினன், கபிலன், அக்கபாதன், கணாதன், சைமினி என்றும் இவர்கள் முறையே ஒன்றும் [- காட்சி அளவை], இரண்டும் [- காட்சி, கருதல் அளவை], மூன்றும் [இவ்விரண்டுடன் ஆகம அளவை], நான்கும் [இம்மூன்றுடன் உவமை அளவை], ஐந்தும் [இந்நான்குடன் அருத்தாபத்தி அளவை], ஆறும் [இவ்வைந்துடன் அபாவ அளவை] கொண்டனர் என்றும் முடிக்கிறான் [மணி, 27. 78– 85].

பிரமாணவாதியாக முதலிற் சுட்டப்பட்ட வேதவியாதன் 1. காட்சி 2. கருதல் 3. உவமம் 4. ஆகமம் 5. அருத்தாபத்தி 6. இயல்பு [சுவபாவம்] 7. ஐதிகம் 8. அபாவம் [- இன்மை] 9. பாரிசேடம் [- மீட்சியொழிவு அறிவு] 10. சம்பவம் [- உண்டாம்நெறி] என்ற பத்து அளவைகளைக் கொண்டு பொருள் உண்மையினைச் சாதிப்பவன். கிருதகோடி முதல் எட்டு அளவைகளையும், சைமினி, முதல் ஆறு அளவைகளையும் பொருள் உண்மை சாதிக்க ஏற்றுக் கொண்டவர்கள் என்பது சுட்டப்பட்டது.

ஒளவை அவர்கள் கருத்து

"இங்கே கூறிய வேதவியாதரை, வேதம் முறை செய்தவரும் பிரமசூத்திரம் எழுதியவருமான வியாதரல்லர் என்றும், இவர் பௌராணிகராகிய வியாதராக இருக்கலாம் என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர். கிருதகோடி என்பாரைப் போதாயனர் என்றும் கிருதகோடிகவி என்றும் கூறுப".[26]

வேதவியாசர் யார்?

வேதவியாசரும் பாதராயணரும் ஒருவரே என்று தத்துவ மேதை எஸ்.இராதாகிருட்டிணன் கருதியுள்ளார்.[27] வேறு சிலர் உத்தரமீமாம்சம் தருக்கத்திற்கு முதலிடம் தாராமையின் இருவரும் வேறானவர் என்பர்.

---

26. மணிமேகலை உரையுடன், ப. 391.
27. Radhakrishnan,S., Indian Philosophy vol. 2, Allen & Unwin, London, 1958, pp. 432-433.

பாரதரத்தினம் பி.வி.காணே [P.V.Kane] என்னும் பேரறிஞர், **"சங்கரார்க்கு முற்பட்ட வேதாந்த விரிவுரைகள்"** என்னும் ஆய்வுரையில் **போதாயணரும் கிருதகோடியும் ஒருவரே** என்று முடிபு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.[28]

காட்சி அளவை [- Perception]

காட்சி அளவை [- பிரத்தியட்சப் பிரமாணம்] ஐவகைப்படும். 1. கட்பொறியால் வண்ணமும் 2. செவிப்பொறியால் ஓசையும் 3. மூக்குப் பொறியால் நாற்றமும் 4. நாக்குப் பொறியால் சுவையும் 5. மெய் ஆகிய பொறியால் ஊறும் என்று சொல்லப்பட்ட இவற்றை முறையே கண்டும், கேட்டும் மோந்தும் உண்டும் மெய்யுற்றும் துக்கம் என்றும் சுகம் என்றும் குற்றமற அறிந்து உயிரும் இந்திரியங்களும் மனமும் குற்றமின்றி ஒளியின் துணையோடு பொருளும் இடமும் பழுதின்றி, பொருண்மை மாத்திரம் காண்டலும்; பிறிதொன்றாகக் கோடலும் ஐயுறுதலும் இல்லாமல் சார்ந்து இடம், பெயர், சாதி, குணம், தொழில் என்பவற்றால் சிறப்பித்து அறிவதாம் [மணி, 27. 14 – 24] என்பது ஒளவை உரையின் சாரம் ஆகும். இதனை விளக்குதற்கு உரைவேந்தர் நியாயபிந்து, நியாயமஞ்சரி முதலிய அளவை நூல்களைச் சுட்டுதல் அவர்தம் வடமொழிநூற் புலமைக்குச் சான்றாகும்.

கருத்தளவை [Inference]

கருத்தளவை [- அனுமானப் பிரமாணம்] என்பது, ஏதுவுக்கு [Reason] நிலைக்களமாக உள்ள குறியைக் கொண்டு அனுமானத்தாலே சாதிக்கப்படும் பொருளின் உண்மைத் தன்மையை உணர்த்தும் தன்மை உடையதாகும். அவ்வனுமான அளவை பொது, எச்சம், முதல் என்று மூவகைப்படும் [மணி. 27. 25– 40].

> "இப்பொது முதலிய மூன்றையும் முறையே **சாமானிய திருட்டம், சேடம், பூருவம்** என்று **அளவை நூலார் கூறுவர்"** எனத் தருக்கத் தமிழ்க் கலைச்சொற்களுக்கு இணையான வடசொற்களைக் குறித்துள்ளார். இம் மூன்றையும் "இவ்வாசிரியர் [- சாத்தனார்] வாற்சாயணர் கூறியாங்குக் கூறுகின்றார்."[29]

---

28. Kane, P.V., **Vedanta Commentaries before Sankaracharya,** Proceedings and Transactions of the 5th oriental conference, vol.II, p. *940*.

29. மணிமேகலை உரையுடன், ப. *394*.

இங்குச் சுட்டப்பெறும் வாற்சாயணர் வடமொழியில் காமசூத்திரம் தொகுத்த வாற்சாயணரினின்றும் வேறுபட்டவர் ஆவர். ஔவை அவர்கள் தம் உரையில் பல இடங்களில் சுட்டும் அளவைநூல் அறிஞர் ஆகிய வாற்சாயணர் **திரமிள** [- திரவிட] என்றும் அழைக்கப்படுபவர். இவர் கி.பி. 4ஆம் நூற்றாண்டில் காஞ்சி மாநகரில் வாழ்ந்தவர்.[30] இவர் அக்கபாதரின் நியாய சூத்திரத்திற்கு முதன்முதல் நியாயபாடியம் எழுதியவர் என்று தத்துவ மேதை ச.இராதாகிருட்டிணன் குறித்துள்ளார்.[31]

ஆகம அளவை [Verbal Testimony]

சாத்தனார்,

"ஆகம அளவை அறிவன் நூலால்
போக புவனம் உண்டெனப் புலங்கொளல்"

[மணி. 27. *43– 44*]

என்று சப்தப் பிரமாணத்தினை [-Verbal Testimony] எடுத்துக் காட்டுடன் விளக்கினார். இப்பகுதிக்கு ஔவை உரை நோக்கத்தக்கது:-

"யாவரும் அறிவுடையரே எனினும், அதனால் விளக்கம் உற்றோரே அறிவர் எனப்படுப ஆதலின், அறிவன் என்பதற்கு விளங்கிய அறிவினை உடைய பெரியோன் என்று பொருள் கூறப்பட்டது. அறம் செய்தான் துறக்கம் புகும் என்றும், அல்லது செய்தான் நிரயம் புகும் என்றும் அறிவர் வழங்குதலின், துறக்க நிரயங்களின் உண்மை கொள்ளப்பட்டமை காண்க. "யான் எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்(கு) உயர்ந்த உலகம் புகும்" எனவும், 'அழுக்காறு என ஒரு பாவி திருச்செற்றுத் தீயுழி உய்த்துவிடும் எனவும் அறிவர் கூறுமாறு காண்க. [குறள். *347, 186*]. இன்பமும் துன்பமும் ஆகிய இருவகை நுகர்ச்சியும் போகம் எனப்படுதலின், இருவகைப் புவனத்தையும் 'போகபுவனம்' என்றார்[32] இங்ஙனமே, எஞ்சிய அளவைகளுக்கும் விளக்கமும் புதிய எடுத்துக்காட்டும் மெய்கண்ட சாத்திரங்களினின்றும் மாதவச் சிவஞானயோகிகள் எழுதியுள்ள மாபாடியத்தினின்றும் ஔவை அவர்கள் எடுத்து வழங்கியிருத்தல் அவர்தம் நுண்ணறிவுக்கும் நூலறிவுக்கும் ஏற்ற சான்றாகும்.

---

30. Vidyabhusana,S.C., **A History of Indian Logic**, Motilal Banarsidass, NewDelhi, 1978, p. *117*.

31. Radhakrishnan,S., Indian Philosophy, vol.2, Allen & Unwin, Lon don, *1971*, p.*180*.

32. மணிமேகலை உரையுடன், ப. *397*.

சாத்தனார், அளவைப் போலிகளைப் பற்றியும் குறித்துள்ளார் [27. 57 - 58]. இவற்றைப் **பிரமாண ஆபாசங்கள்** என்ற நையாயிகக் கலைச்சொல்லினால் சுட்டியுள்ளார். ஆங்கிலத்தில் இந்தியத் தருக்க நூல்களை எழுதிய அறிஞர் பெருமக்கள், இவற்றை, Logical fallacies என்று வழங்கினர். அளவைபோல் இருக்கும்; ஆனால் அளவை என்று இவை தருக்கத்திற்கு உதவா. இப்போலிகள் 1. சுட்டுணர்வு 2. திரியக்கோடல் 3. ஐயம் 4. தேராது தெளிதல் 5. கண்டுணராமை 6. இல்வழக்கு 7. உணர்ந்ததை உணர்தல் 8. நினைப்பு என்று சாத்தனார் எண்வகையாக எண்ணியுள்ளார். இவற்றுக்குரிய உதாரணங்களையும் தந்துள்ளார். இப்பகுதிக்கு, **நீலகேசி, சிவஞானசித்தியார் அளவையியல், பதார்த்ததரு மசங்கிரகம்** என்னும் நூல்களினின்றும் தக்க மேற்கோள்களைத் தந்து ஔவை அவர்கள் விளக்கியிருத்தல் பாராட்டிற்கு உரியது.

அளவை வாதத்தினை அடுத்துச் சாத்தனார் சைவவாதம் பற்றிப் பேசுகிறார்.

சைவ வாதம் [27. 86 – 95]

ஞாயிறு, திங்கள், இயமானன், நிலம், நீர், தீ, வளி, வான் என்ற எட்டினையும் தனக்கு உடம்பாகவும் தான் அவற்றை இயக்கும் உயிராகவும் இருப்பவன் இறைவன் ஆகிய ஈசன், பல்வகைக் கலைகளின் வடிவினை உடையவன்; படைப்பு, காப்பு, அழிப்பு என்னும் முத்தொழில் புரிபவன். தனக்கு ஒப்பதும் மிக்கதும் இல்லாத தன்மையன் என்று சைவவாதி மணிமேகலைக்குத் தன் சமய மெய்ப்பொருளைப் போதித்தனன். ஔவை அவர்கள்,

> "இறு என்னும் சொல்லடியாகக் கொண்டு இறைவன் - எப்பொருளிலும் தங்குபவன் என்றலும் ஒன்று")[33]

என்று புதிய விளக்கம் தந்துள்ளார். கடவுள் என்ற சொல் எல்லாப் பொருளையும் கடந்து விளங்குபவன் என்ற பொருளைத் தருதலும் [He is transcendent of all our limits of knowledge], இறைவன் என்ற சொல் எல்லாப் பொருளிலும் இருப்பவன் என்ற பொருளைத் தருதலும் [He is immanent in all animate and inanimate beings] எண்ணுதற்கு உரியன.

திருமுறைப் புலமை தோன்ற, "நாவரசரும் இருநிலனாய்த் தீயாகி நீரும் ஆகி, இயமானனாய் எறியும் காற்றும் ஆகி, அருநிலைய திங்களாய் ஞாயிறு ஆகி, ஆகாசமாய் **அட்டமூர்த்தி ஆகி**" [6. 91.1] என்று எடுத்துக்காட்டுதல் சிறப்பாக அமைந்துள்ளது.[34]

---

33. மணிமேகலை உரையுடன், ப. 406.

34. அதே நூல்.

பிரம வாதி [27. 96 – 7]

மும்மூர்த்திகளில் ஒருவராகிய பிரமனை முதல்வனாகக் கொண்டவன், “பேருலகம் எல்லாம் ஒப்பற்ற பிரமதேவன் இட்ட முட்டை” என்றனன். “இது வைதிகநெறியாகிய அறுவகைச் சமயத்துள்கூறப்படாது புராணங்களில் கூறப்படும் வழக்கு” என்று கூறி, இக்கருத்து **மனுதரும** நூலில் முதல் அத்தியாயத்தில் ஒன்பதாம் சுலோகத்தில் கூறப்பட்டுள்ளது என்று ஔவை அவர்கள் விளக்குதல் அவர்தம் வடமொழிப் புலமைக்கு ஒரு சான்றாக அமைகிறது.

4.2.1.4. வைணவவாதி [27. 98-99]

விட்டுணு புராணத்தை அன்போடு ஓதிப் பயின்றவன் ஆகிய வைணவவாதி, தங்களைக் காக்கும் கடவுள் நாராயணன் என்று நவின்றனன்.

எனவே, சாத்தனார் காலம் சைவம் ஒரு தத்துவமாக வளர்ச்சி பெற்ற அளவிற்கு ஏனைய பிரமவாதம், வைணவவாதம் வளரவில்லை என்பது புலனாகிறது.

4.2.1.5. வேதவாதம் [27. 100 – 105]

வேதபுருடனுக்கு, கற்பம் என்னும் அங்கம் கை; சந்தம் என்பது கால்; கணிதம் என்பது கண்; நிருத்தம் என்ற உறுப்பு செவி; சிட்சை என்னும் அங்கம் மூக்கு; வியாகரணமாகிய சொல்லிலக்கணம் என்பது முகம் ஆகும். யாதொன்றனையும் சார்ந்து தோன்றாமல் தானே தோன்றியதாகிய [- சுயம்பு] வேதபுருடனுக்கு ஆதியும் அந்தமும் இல்லை. வேதத்தினையே பரம்பொருளாகக் கருதும் நெறியாளரின் கருத்தினை இப் பகுதியில் சாத்தனார் குறித்துள்ளார்.

ஔவை அவர்கள்,

“வேதம் அபௌருஷேயம் என்பது பற்றி சார்பில் தோன்றாது என்றார் ....‘மாயா வாய்மொழி [பரி, 3.11] என்பதற்கும், முதுமொழி [பரி, 3.47] என்பதற்கும் கூறப்படும் உரையகத்தும், ‘அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதி’ [குறள், 543] என்பதன் உரையகத்தும் ஆசிரியர் பரிமேலழகர் வேதம் அநாதி நித்தியம் [- It is eternal] என்பது காணப்படும் என்று மேற்கோள் காட்டி விளக்குதல் சுட்டுதற்குரியது.[35]

35. மணிமேகலை உரையுடன், ப. 407.

இதுகாறும் அளவை வாதம், சைவவாதம், பிரமவாதம், வைணவவாதம் என்பனவற்றை அவற்றுக்குரிய ஆசிரியரிடம் கேட்டறிந்த மணிமேகலை, வேதவாதத்தினைக் கேட்ட பின்பு, நூல் வழக்கு, உலக வழக்கு என்று கூறப்படும் எவ்வகையினும் இவ்வேதியர் உரை பொருந்தாது எனக் கருதினாள் [27. 105– 107]. இதுகாறும் அளவை வாதம் முதலாக வேதவாதம் முதலாகக் கேட்டறிந்த கருத்துக்கள் யாவும் பொருந்தா எனக் கருதினாள் என்று ஔவை வரைந்துள்ளார்[36]

4.2.1.6. ஆசீவகம் [27. 110 – 171]

சமணம், பௌத்தம் ஆகிய நெறிகள் தோன்றுதற்கு முன்பே மற்கலி என்னும் ஞானியால் ஆசீவகம் உருவாக்கப்பட்டது. 'மற்கலி நூலின் வகை [27. 165] என்று சாத்தனார் குறித்தல் காண்க. ஆசீவக நெறியினைப் பற்றிப் பல்வேறு மூலங்களினின்றும் தரவுகள் திரட்டி விரிவாக ஆராய்ந்த ஏ.எல்.பாஷம் என்னும் அறிஞர் [Basham, A.L., History and Doctrines of the Ajivakas, London, *1951*] பூரணர், மற்கலி, பகுதர் என்னும் ஞானிகள் மூவரும் முறையே அகிரியா வாதமும், நியதிக் கொள்கையும், அணுக் கொள்கையும் [Atomic Theory] போதித்தனர் என்றும் இவையாவும் சேர்ந்துதான் ஆசீவகமாக உருக்கொண்டது என்றும் தெளிவுறுத்தியுள்ளார்.[37]

ஆசீவக நெறியை மணிமேகலைக்குக் கற்பிக்கும் ஆசிரியர், "வரம்பில் அறிவன் எங்கள் இறைவன். எங்கள் நூல் கூறும் பொருள் ஐந்து. அவையாவன; *1.* உயிர் *2.* நில அணு *3.* நீர் அணு *4.* தீ அணு *5.* காற்று அணு என்பன." என்று கூறி அவற்றின் இயல்புகளைத் தொடர்ந்து போதித்தனன். எனவே, அணுக் கொள்கை ஆசீவகத்தின் மையக் கொள்கை என்பது புலனாகும். அணுச்செறிவுதான் பொருளாகக் காட்சிதரும்.

அணுக்கொள்கை, நியதிக் கொள்கை, சுபாவக் கொள்கை, அறுவகைப் பிறப்பு, அவிசலித நித்தியத்துவம், நால்வகை நியதிகள் என்பன ஆசீவகர் இந்தியத் தத்துவ வளர்ச்சிக்கு வழங்கிய அறிவுக் கொடை என்பது நம் நூல் இந்தியத் தத்துவக் களஞ்சியம், தொகுதி - 1இல் [ப. *102 - 148*] விரிவாக ஆராயப் பெற்றுள்ளமை பயில்வோரால் நோக்கத்தக்கது. ஆதலின், மீண்டும் அப்பொருண்மை

---

36. மணிமேகலை உரையுடன், ப. 408.

37. கந்தசாமி, சோ.ந., **இந்தியத் தத்துவக் களஞ்சியம்**, தொகுதி - *1*, மெய்யப்பன் பதிப்பகம், சென்னை, *2003*, ப. *102-148*.

பற்றிய ஆய்வு இவண் மேற்கொள்ளப்படவில்லை. அடுத்து, சமணநெறியைப் புகட்டும் நிகண்டவாதியை அணுகி மணிமேகலை அவர்க்குரிய மெய்ப்பொருளைப் பாடம் கேட்டனள்.

நிகண்ட வாதம் [27. 171 - 201]

சாத்தனார் சமணநெறியை நிகண்ட வாதம் என்ற பெயரில் அறிமுகம் செய்துள்ளார். நிர்க்கிரந்த என்ற வடசொல் தமிழில் நிகண்ட என்றாகும். கிரந்தம் என்ற சொல்லிற்கு ஆடை, நூல் என்ற பொருள்கள் உண்டு. ஆடை அற்றவர் நிர்+கிரந்த– நிர்க்கிரந்தர் ஆகிய திகம்பர சமணத் துறவியவர் ஆவர். தமிழில் இவர்கள் நிகண்டர் என்று வழங்கப் பெற்றனர். நிக்கந்தன் அருகதேவனைக் குறிக்கும். பிறப்பு இறப்பினின்றும் விடுபட்ட தீர்த்தங்கரரை அருகன் என்று வழிபடுதல் சமணர் மரபு. நிகண்டவாதியை அணுகிய மணிமேகலை, 'நின்னால் பரவப்படும் தலைவன் யார்? நூற்பொருள் யாவை?' என்று வினவினாள். நிகண்டவாதியின் உரையில் இடம்பெறும் கருத்துக்களை 1. இறைவன் [தலைவன்] இலக்கணம் 2. நூற்பொருள் 3. பொருளின் இயல்பு 4. நவபதார்த்தம் என்று வகுத்துக்கொள்ளலாம்.

இறைவன் இலக்கணமும் நூற்பொருளும்

இந்திரர் பலராலும் வணங்கப்படும் அருகபரமேட்டி இறைவன் ஆவன். அவன் உரைத்த ஆகமத்தின் பொருள்கள்: 1. தன்மாத்திகாயம் 2. அதன்மாத்திகாயம் 3. காலம் 4. ஆகாயம் 5. சீவன் 6. பரமாணு 7. நல்வினையும் தீவினையும் 8. பந்தம் (கட்டு) 9. மோட்சம் (வீடு) என்பனவாகும். இவற்றை நவபதார்த்தம் என்பர் சமண நூலோர்.

இந்திரர் என்று பலர்பாலால் கூறப்பெற்றமையால் அவர்களை 1. பவணேந்திரர் 2. வியந்தரேந்திரர் 3. கற்பேந்திரர் 4. மிருகேந்திரர் எனப் பலர் என்று ஔவை கூறும் விளக்கம் அறியத்தக்கது. [காண்க: உ.வே.சா. மணிமேகலை மூலமும் அரும்பத உரையும், ப. 316, அடிக்குறிப்பு, 27.171.]

பொருளின் இயல்பினை, தன்தன்மையும் சார்ந்ததன் தன்மையும் ஆகிய தன்மையும், ஒருகணத்தே நித்தமாயும் அநித்தமாயும் இருப்பதுவும், ஒரு காலத்திலேயே தோற்றம், நிலை, கேடு என்ற மூன்றும் எய்துவதும் பொருட்கு இயல்பு என்பதை விளக்கி, இவற்றுக்குச் சாத்தனார் கூறியுள்ள எடுத்துக் காட்டுகளையும் உரையாசிரியர் தெளிவுறுத்தியுள்ளார் (27.177-82).

தன்மம், அதன்மம் என்ற சொற்கள் முறையே அறம், அதற்குப் புறம்பாகிய மறம் என்ற பொருளில் சமணநெறியில் ஆளப் பெறவில்லை. பொருள்களின் இயக்கத்துக்கு ஏதுவாக அமைவதைத் தன்மாத்திகாயம் என்றும், அவை நிலைத்தற்கு ஏதுவாக அமைவதை அதன்மாத்திகாயம் என்றும் கூறியுள்ள சாத்தனாரின் கருத்தினை ஔவை விளக்கினார்.

நிகழ்ச்சியெல்லாம் காலம் என்னும் தத்துவத்தின் மேலனவாகும். இதன் கீழ் எல்லை கணிகம் மேல் எல்லை கற்பம் எனப்படும். எல்லாப் பொருளும் பொருந்துமாறு விரிந்து இடம் கொடுப்பது ஆகாயம் என்னும் தத்துவம் ஆகும்.

சீவன் என்பது உடம்பெங்கும் பரவி நின்று ஐவகைப் புலன்களையும் நுகரும். புற்கலம் என்பது பரமாணு (Primal atom). பரமாணுக்களைப் புற்கலம் என்றார். அணுக்களின் கூட்டமே பொருள்கள் என்பதும் அவை பிரியும் பொழுது பொருள்கள் மறையும் என்பதும் சமணரின் அணுக் கொள்கை, இந்திய அறிவியலுக்குச் சமணரின் அணுக்கொள்கை ஒரு கொடையாக மதிக்கப்படுகிறது. முதலில் திகம்பர சமணராகப் பல ஆண்டுகள் காலம் கழித்துத் தருமசேனர் என்ற பெயரில் சமண சமயத்தின் தலைவராக விளங்கிப் பின்னர் சைவநெறி திரும்பிய அப்பர் அடிகள் ஒலி என்பது பரமாணுக்களின் கூட்டத்தால் ஆகியது என்ற சமணக் கருத்தை ஏற்றுக்கொண்டு,

"பரமாணுவாய்ப் பழுத்த பண்கள் ஆகி" (திருமுறை 6.26.6)

என்று பாடியிருத்தல் இயைபு கருதி எண்ணத்தக்கது.[38]

மிக நுண்ணிய நிலையில் அணுக்களாகிய புற்கலம் உயிர்களுக்கு நல்வினை, தீவினை ஆகிய இரண்டினையும் பயக்கும். இதனால் உயிர்கள் பிறப்பு, இறப்பு என்னும் சுழற்சியில் அகப்பட்டுப் பந்தம் (கட்டு - Bondage) அடைகின்றன. இரு வினைகளும் வரும் வழிகளை அடைத்துப் பழவினைப் பயன்களை நுகர்ந்து விடுபடுதல் வீடுபேற்றுக்கு (Liberation) ஏதுவாகும்.

இவ்வாறு நிகண்டவாதியாகிய சமணச் சான்றோரிடம் அவர்தம் அடிப்படைக் கருத்துக்களைக் கேட்டறிந்த அறச்செல்வி மணிமேகலை அடுத்துச் சாங்கிய தத்துவவாதியை அணுகிப் பாடம் கேட்டனள். சாங்கியரின் கருத்தினை நோக்குவோம்.

---

38. கந்தசாமி, சோ. ந., **மணிமேகலையில் தத்துவச் சிந்தனைகள்,** மெய்யப்பன் பதிப்பகம், சென்னை, *2019*, ப. *60*.

சாங்கியவாதம் (27, 202 – 240)

'சங்க்யா' என்ற வேரிலிருந்து சாங்கியம் என்ற சொல் தோன்றிது. இவ்வேர்ச் சொல்லிற்கு எண்ணுதல், பகுத்தறிதல் எனப் பொருள் கூறுவர். உலகத் தோற்றத்தில் காணப்படும் பொருள்கள் யாவற்றையும் பகுத்தறிந்து அவற்றை 25 தத்துவங்களாக (Categories) அடைவு செய்து இணைத்து என்று எண்ணியதால் சாங்கியம் எனப் பெயர் பெற்றது. கி.மு. 7 அல்லது 8-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கபிலர் இத்தத்துவத்தினை உருவாக்கியவர் என்பதால் கபிலதரிசனம் என்ற பெயரும் சாங்கியத்திற்கு உண்டு. ஈசுவர தத்துவத்தை ஏற்றுக்கொள்ளாத காரணத்தால் நிரீச்சுவர சாங்கியம் என்றும் இதனைக் கூறுவர்.

சாங்கிய நெறியை மணிமேகலைக்குப் பாடம் சொல்லும் சான்றோர்,

1. **மூலப் பிரகிருதி தத்துவத்தின் இயல்புகள்**
2. **பிரகிருதியினின்றும் பரிணாமம் பெற்ற தத்துவங்கள் (Categories of Primary Evolution)**
3. **துணைப் பரிணாமம் (Secondary Evolution)**
4. **தத்துவங்களின் ஒடுக்கம் (Involution)**
5. **புருடதத்துவத்தின் இயல்புகள்**
6. **புருடன் அறிதற்குரிய தத்துவங்களின் தொகுப்பு**

என்று வரையறுத்து அடிப்படைக் கொள்கைகளைப் புகட்டினார். இவற்றினை நிரலே நோக்குவோம்.

மூலப்பிரகிருதி தத்துவத்தின் இயல்புகள் (27.202-206)

மூலப் பிரகிருதி என்பது தமிழில் மூலப் பகுதி என்றாகும். தன்னை இத்தன்மைத்து என்று அறிதற்கு அரிதாய், தானே மூவகைக் குணமுமாய், மனத்தின் நினைவுக்கு இடம் ஆகாது, மாண்பமைந்த பொது இயல்புடையதாய், எவ்வகைப் பொருளும் தோன்றுதற்கு இடமாவது மூலப் பகுதி (Original Source) எனப்படும். முக்குணம் ஆவன: 1. சத்துவம் 2. இராசதம் 3. தாமசம் என்பன ஆகும்.

மூலப் பகுதியினின்றும் பரிணாமப்பட்ட தத்துவங்கள் (Evolutes)

மூலப் பகுதியினின்று புத்தி தத்துவம் வெளிப்படும். அந்தப் புத்தி தத்துவத்தினின்று ஆகாயம் வெளிப்படும். ஆகாயத்தினின்று காற்றும், காற்றினின்றும் தீயும், தீயினின்று நீரும், நீரினின்று

நிலமும் வெளிப்படும். அந்த நிலம் முதலியவற்றின் கூட்டத்தினின்று மனம் வெளிப்படும். மனத்திலிருந்து ஆங்காரமும், ஆகாயத்தினின்று செவியாகிய பொறியும், ஓசையாகிய புலனும், காற்றினின்று மெய்யாகிய பொறியும், ஊறாகிய புலனும், தீயினின்று கண்ணாகிய பொறியும், ஒளியாகிய புலனும், நீரினின்று வாயாகிய பொறியும், சுவையாகிய புலனும், நிலத்தினின்று மூச்சாகிய பொறியும் நாற்றம் ஆகிய புலனும் வெளிப்பட்டன. மெய்யாகிய பொறியின் விகாரமாக வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம் என்ற தொழிற்கருவிகள் ஐந்தும் தோன்றின. இங்ஙனம் தோன்றுதல் முதற்பரிணாமம் அல்லது தத்துவாந்திர பரிணாமம் (Primary Evolution) எனப்படும். நிலம் மரமாகவோ, புழு பட்டுப்பூச்சியாகவோ இவ்வாறே எஞ்சியன பிறவாகவோ வெளிப்படுதல் துணைப் பரிணாமம் (Secondary Evolution) எனப்படும்.

சாத்தனார் கூறியுள்ள சாங்கிய பரிணாமத்திற்கும் ஈச்சுவர கிருட்டிணர் சாங்கிய காரிகையில் (22 - 26) கூறியுள்ள பரிணாமக் கருத்திற்கும் சுட்டத்தக்க வேறுபாடு உண்டு. ஔவை அவர்கள்

> "இம்முறை பரமார்த்தர் என்னும் சீனநாட்டவர் எழுதிய சாங்கியக் கொள்கையுடன் பெரிதும் ஒத்துள்ளது....."[39]

என்று குறித்துள்ளார்.

புருடதத்துவம்

சாங்கிய நெறியில் பேசப்படும் அடிப்படைத் தத்துவங்கள் இரண்டனுள் பிரகிருதி தத்துவம் பற்றிக் கண்டோம். எஞ்சியுள்ள புருடதத்துவம் பற்றி 227 - 232 அடிகளில் கூறப்பட்டது. எளிதில் அறியப்படுவதாய், முக்குணம் அல்லாததாய், மூலப் பகுதியோடு ஒருவகைப் பொதுத் தன்மையுமின்றி, பொருள்களின் பரிணாமத்திற்கு இடம் கொடுக்காததாய், பொருள்கள் யாவற்றையும் புத்தி தத்துவம் அறிந்துகொள்ளுதற்குரிய உணர்வாய் விளங்கி, ஒருபடித்தாக எல்லா உடல்களிலும் பரவி நித்தியமாய், உள்ளத்து உணர்வுமயமாய் விளங்குவது புருடன் என்னும் தத்துவம்.

மூலப் பிரகிருதிக்கும் புருட தத்துவத்திற்கும் உள்ள ஒரே ஒரு ஒற்றுமைக்கூறு; அவை இரண்டும் ஒன்றினின்றும் தோன்றாதவை, என்றும் உள்ளவை; நித்தியம் ஆனவை (Etermal) என்பதுதான்.

---

39. மணிமேகலை உரையுடன், ப. 421.

அசேதனம் ஆதலின் மூலப் பகுதியைக் குருடன் என்றும், செயலின்மையின் புருடனை முடவன் என்றும் சாங்கியர் மொழிவர்.

சாங்கியத் தத்துவங்கள் இருபத்தைந்து

புருடனால் அறியப்படும் பொருள்கள் ஆகிய தத்துவங்கள் இருபத்தைந்தாகும். அவை யாவன,

I. பூதங்கள் ஐந்து (Gross Elements)
1. நிலம் 2. நீர் 3. தீ 4. வளி 5. வான்

II. அறி கருவிகள் (ஞானேந்திரியம்) ஐந்து (Organs of Knowledge)
1. மெய் 2. வாய் 3. கண் 4. மூக்கு 5. செவி

III. புலன்கள் ஆகிய தன்மாத்திரைகள் ஐந்து (Subtle Elements)
1. சுவை 2. ஒளி 3. ஊறு, 4. ஓசை 5. நாற்றம்

IV. தொழிற்கருவிகள் (கன்மேந்திரியம்) ஐந்து (Organs of Action)
1. வாக்கு 2. பாணி (- கை) 3. பாதம் 4. பாயுரு (ஆசனவாய்) 5. உபத்தம் (கருவாய்)

V. அந்தக்கரணம் மூன்று (Internal Organs)
1. மனம் 2. புத்தி 3. அகங்காரம்

எஞ்சியவை (2)

1. சித்தம் எனப்படும் மூலப் பகுதி

2. உயிரெனும் ஆன்மா (புருடன்)

தத்துவங்களின் ஒடுக்கம் (மணிமேகலை, 27. 232 – 240)

ஒடுக்க முறைப்படி (According to Involution) தத்துவங்களின் தன்மைகளை ஆராய்ந்தறிந்து மூலப் பிரகிருதியினின்றும் புருடன் (- Atman or soul உயிர்) தன்னைத் தனித்துக்கொள்ளுதல் அல்லது விடுவித்துக்கொள்ளுதல் கைவல்யம் என்று கூறப்படும் முத்தி (Liberation) ஆகும்.[40]

ஔவை அவர்கள்,

'புருடன், உயிர், ஆன்மா என்பன ஒருபொருட் கிளவி; ஆயினும், உயிரது கேவல நிலை (- Isolated position) புருடன் என்றும், தத்துவத் தொடர்புற்று நிற்கும் நிலை (- Embodied Condition) சீவன் என்றும் சாங்கிய நூல்கள்

---

40. மணிமேகலையில் தத்துவச் சிந்தனைகள், ப. 73-78.

கூறுகின்றன. ஆன்மா என்பது உபநிடத வழக்கு. உயிர் என்பது தமிழ் வழக்கு"[41]

என்று தெளிவுறுத்தியுள்ளார்.

மணிமேகலை, சாங்கியன் "செப்பிய திறமும் கேட்டு, வைசேடிக! நின் வழக்குரை" *(27. 240 - 241)* என்று வேண்டினள்.

வைசேடிகவாதம் *(27. 242 - 262)*

கி.மு. 3ஆம் நூற்றாண்டினராகிய கணாதர் என்பார் எழுதியுள்ள வைசேடிக சூத்திரம் தான் இந்நெறிக்குரிய தொன்மைமிக்க தத்துவ நூலாகும். குறிப்பிட்ட ஒரு பொருள் ஏனைய பொருள்களிலிருந்து வேறுபடுவதற்குரிய விசேடத் தன்மைகளை ஆராயும் இந்தத் தத்துவத்திற்கு வைசேடிகம் என்பது காரணப் பெயராகும். பொருள்களின் விசேடத் தன்மைகள்தாம் அவற்றின் உண்மையினைச் சாதிப்பன என்பது இத்தத்துவத்தின் மையக் கருத்தாகும்.

வைசேடிகவாதி *1.* பொருள், (- திரவியம், Substance), *2.* குணம் (பண்பு, Quality), *3.* தொழில் (கருமம், Activity), *4.* சாமானியம் (பொது, சாதி, generality or Genus), *5.* சிறப்பு (- விசேடம், Particularity or Speciality) *6.* கூட்டம் (சமவாயம், Inherence) என்று அறுவகைப் பதார்த்தங்களைத் தம் கொள்கையாக எடுத்துரைக்கிறார்.

1.திரவியம் - பொருள் *(27 . 244 - 246)*

குணங்களுக்கும் செயல்களுக்கும் ஆதாரமாகவும், தொகுதியாகவுகுள்ள எவ்வகைப் பொருளுக்கும் ஏதுவாகவும் இருப்பதுதான் திரவியம் (Substance) அல்லது பொருள் எனப்படும். *[வைசேடிக சூத்திரம், 1.1.15].*

பொருள் என்பது நிலம், நீர், தீ, வளி, வான்; திசை, காலம், ஆன்மா, மனம் என்று ஒன்பது வகைப்படும். *(24. 246 - 248; வைசேடிக சூத்திரம் 5.2.19).*

நிலம் என்னும் பொருள் (திரவியம்) சுவை, ஒளி, ஊறு, ஓசை, மணம் என்னும் ஐந்தியல்பு உடையது. *[24. 248 - 250].* எஞ்சிய நான்கு பூதங்களும் சுவை முதலாக ஒவ்வொரு குணம் குறைந்து காணப்படும் *[27. 250 - 251].* நிலம் ஒலி, ஊறு, நிறம், சுவை, நாற்றம்

---

41. மணிமேகலை உரையுடன், ப. 423.

என்னும் ஐந்து குணங்களை உடையது. ஏனைய நீரும், தீயும், காற்றும், விண்ணும் அவ்வொலி முதலிய குணங்கள் ஐந்தனுள் முறையே ஒவ்வொரு குணம் குறைவாக உள்ளவையாகும்.

/நீர் / என்னும் திரவியம் ஒலி முதலிய நான்கு குணமும்; /தீ/ என்னும் திரவியம் ஒலி முதலிய மூன்று குணமும்; /வளி/ என்னும் திரவியம் ஒலி முதலிய இரண்டு குணமும்; /வான்/ என்னும் திரவியம் ஒலி என்னும் ஒரே குணமும் உடையவை.

சாத்தனார் கூறாதவை

ஐம்பூதங்களின் இயல்பினைச் சுட்டிய சாத்தனார், எஞ்சிய திரவியங்கள் ஆகிய காலம், திசை, ஆன்மா, மனம் என்பன வற்றைக் கூறாமைக்குக் காரணம் புலப்படவில்லை.

2. குணம் - பண்பு (Attribute) 27. 252 - 255

வைசேடிகம் சுட்டும் இரண்டாவது பதார்த்தம் குணம் ஆகும். இது சாங்கியத்தில் கூறப்படும் முக்குணத்தினின்றும் வேறுபட்டது. குணம் திரவியத்தை ஆதாரமாகக் கொண்டுதான் நிற்கும். ஓசை, ஊறு, நிறம், நாற்றம், சுவை, பெருமை, சிறுமை, வன்மை, மென்மை, சீர்மை, நொய்ம்மை, வடிவம் என்பனவும்; இடம், வலம் என்ற பக்கமும் இவையொத்த பிறவும் பொருள்களின் குணமாகும்.

3. கருமம் - தொழில் (Activity)

கருமம் என்பது உடல் இயக்கம். திரவியத்தின் நிரந்தரக்கூறு குணம் என்றால், தற்காலிகக்கூறு கருமம் எனலாம். பொருளும் குணமும் செயல் நிகழ்த்துதற்கு உரியன. *(27. 256 - 258)*

4. சாமானியம் - பொது (Generality)

ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்த எல்லாப் பொருள் களிலும் காணப்படும் பொதுத்தன்மை சாமானியம் எனப்படும். இதனைச் சாதி ஒருமை என்று இலக்கணிகள் கூறுவர். எ.டு. நெல் பல்வகைப்படும். ஒருவகை நெல், பிறவகை நெல்லினின்றும் வேறுபட்டாலும், நெல் என்ற பொதுமை சாமானியம் ஆகும். சாமானியத்தினை 1. பரசாமானியம், 2. அபரசாமானியம் என்று வைசேடிகர் கூறுவர். இவற்றை முறையே முதற்பொது, பொது என்று சாத்தனார் குறித்துள்ளார். எல்லாப் பொருட்கும் இருப்பு என்பது [அஸ்தித்வம், Existence] முதற்பொது எனப்படும். போதல், நிற்றல், சாதல், நிகழ்தல் என்பன அவற்றுக்குரிய

பொருள்களுக்கு அபரசாமானியம் (பொது) எனப்படும். (27. 258-260).

5. விசேடம் - சிறப்பு (Particularity or Speciality)

பொருள்கள் யாவும் ஒன்றினின்று ஒன்று வேறுபடுதற்குரிய சிறப்பு இயல்பு விசேடம் எனப்படும். ஆதலின் ஒன்று அணு (27. 261) என்று சுருக்கமாக விசேடத்தினைச் சாத்தனார் சுட்டினார். ஒன்று - விசேடம். பொருள் வேறுபாட்டிற்கு அதனை உருவாக்கும் விசேட அணு வேறுபாடு காரணம் ஆதலின், ஒன்று அணு என்று விசேடத்தினைக் குறித்தனர்.

6. சமவாயம் - கூட்டம் (Inherence)

வைசேடிக சூத்திரத்தில் காரணம் காரியம் இரண்டிற்கும் இடையே அமைந்துள்ள நெருங்கிய உறவினை சமவாயம் என்று கணாதர் கூறினார். எனின், உரையாசிரியர் ஆகிய பிரசத்தபாதர் குணமும் குணியும் போல் பிரிக்க இயலாத ஒன்றியற் கிழமைப் பட்டுள்ளதைச் சமவாயம் என்றார். இவர் கருத்தினையே சாத்தனார், "கூட்டம் குணமும் குணியும் என்று ஒன்றிய" (27. 261 - 262) என்று வழிமொழிந்தனர்.[42]

இதுகாறும், மணிமேகலை வைசேடிகவாதியிடம் பாடம் கேட்ட பாங்கினைப் பார்த்தோம். இறுதியாக, பூதவாதி ஆகிய உலகாயதனிடம் அணுகி அவன் கொள்கையினைக் கேட்டனள்.

பூதவாதம் (27. 264 - 277)

பூதவாதி ஐம்பூதங்களின் (Gross Elements) உண்மையினை மட்டும் ஒத்துக்கொண்டவன். தாதகிப் பூவும் கருப்புக் கட்டியும் கலந்து வேண்டிய பிற பொருள்களையும் இடித்துக் கூட்டிய வழி மதுவில் களிப்பு உண்டாதல் போல, பூதங்களின் சேர்க்கையால் உணர்வு தோன்றும். இந்த உணர்வினைத் தவிர, உயிர் என்று ஏனைய தத்துவவாதிகள் கூறும் பொருள் இந்நெறிக்கு உடன்பாடில்லை. எனவே, சடப்பொருளின் [Matter] வேறாகச் சித்து எனப்படும் உயிர் [Soul] இல்லை என்பதுதான் பூதவாதியின் கொள்கை ஆகும். பூதங்கள் இயற்கைப் பொருள்கள். இவை யாராலும் உண்டாக்கப்படவில்லை. இவற்றின் கூட்டுறவினால் தோன்றும் உணர்வுதான், ஒருவரின் விருப்பம், அறிவு, செயல்களுக்கு உந்தாற்றலாக அமைந்துள்ளது. உணர்வுக்கு

42. கந்தசாமி, சோ.ந., இந்தியத் தத்துவக் களஞ்சியம், தொகுதி – 2, மெய்யப்பன் பதிப்பகம், சென்னை, 2003, ப. 154.

மூலமாக இருப்பது சடப்பொருளாகிய பூதங்களே. ஆதலின், பொருளே [Matter] முதற்பொருள் என்று பூதவாதிகள் கொண்டனர். பூதச்சேர்க்கையால் தோன்றும் /உணர்வு/ அதன் அழிவின்கண் தானும் அழிந்துவிடும் என்பது அவர்தம் கொள்கை.

பூதவாதி காட்சி அளவையினை [Perception] மட்டும் ஏற்றுக்கொண்டவன். கண்ணினாற் காணப்படாத சுவர்க்கம், நரகம், கடவுள், வினை என்பன இல்பொருள் என்றனன்.

ஔவை அவர்கள்,

> "மதுவினிடத்தே களிப்புப் பிறக்குமாற்றினை இவர் [- சாத்தனார்] கூறியது போலச் சாருவாகரும் கூறுகின்றனர். இதனை மாதவர் எழுதிய சருவ தரிசன சங்கிரகத்துச் சாருவாக தரிசனத்துக் காண்க."[43]

என்று எழுதியுள்ளமை நோக்கத்தக்கது. பூதவாதம், உலகாயதம், சாருவாகம் என்பன ஒரு பொருளனவாயினும் தம்முள் சிறுசிறு வேறுபாடு கொண்டவை என்பது சுட்டத்தக்கது.

ஏனைய புறச்சமயங்களை மறுத்துப் பேசாத மணிமேகலை, பூதவாதியின் பேச்சினைக் கேட்டதும் நகைத்தனள். தெய்வ மருளாலும் கனாக்காட்சியாலும் மயங்குவோரின் மனம் திரிபுற்று உரைத்தல் போல் அவன் பேச்சு உள்ளது என்று கூறினாள். தன் தந்தை, தாயை அனுமானத்தால் அல்லது காட்சி அளவையால் காணமுடியாது என்பதால் அனுமான அளவை வேண்டப்படும் என்பதை உணர்த்தினாள்.

4.2.2. தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதை

வஞ்சிமாநகரில் பரபக்கமாக ஏனைய சமய, தத்துவங்கள் பத்தினையும் அவ்வத் துறை வல்லுநரிடம் பாடம் கேட்டறிந்த மணிமேகலை அவற்றின் ஒவ்வாமையினை உணர்ந்து, காஞ்சி மாநகர்க்குப் போந்து பௌத்தப் பள்ளியில் வீற்றிருந்த போதி சத்துவ அறவண அடிகளிடம் முதலில் பௌத்த தருக்கமும் அடுத்துப் பௌத்த தத்துவமும் விளக்கமாகக் கேட்டறிந்து பவத்திறம் அகல வேண்டி நோன்பு மேற்கொண்டனள். இத்திறம் யாவும் மணிமேகலைக் காப்பியத்தின் இறுதி இரண்டு காதைகளிலும் இனிது எடுத்தியம்பப் பெற்றமை சுட்டத்தக்கது.

---

43. மணிமேகலை உரையுடன், ப.427

தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதையில் உரைவேந்தர் ஒளவையின் அஃகி அகன்ற அளவை நூற்புலமை தெற்றெனப் புலப்படக் காணலாம். தம் உரைப்போக்கில் அளவைக் கருத்துக்களை விளக்கும் பொருட்டுத் தமக்கு முற்பட்ட தருக்க நூல், தத்துவ நூல் வல்லுநர்களின் எழுத்துக்களை ஆராய்ந்து ஏற்புழி இணைத்து, சாத்தனாரின் கருத்தினை ஒளிபெறச் செய்துள்ளார். தம் உரையில் நியாயப் பிரவேசம் - மணிமேகலையினை முதன்முதல் விரிவாக ஆராய்ந்து மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் செந்தமிழ் இதழில் வெளியிட்டுப் பௌத்தத் தருக்கத் துறைக்குப் பெருங்கொடை வழங்கிய இருமொழிப் பேறறிஞர் **திரு.நாரணையங்கார்** அவர்களைப் பல இடங்களில் மேற்கோள் காட்டியுள்ளார்.[44] உருசிய நாட்டுப் பௌத்தப் பேரறிஞர் **டி.எச்.ஷேர்பட்ஸ்கியின்** பௌத்த தருக்கம் [Stcherbatsry, T.H.Dr., Buddhist Logic, Leningrad, *1932*] என்ற நூலினை உரைவேந்தர் உரிய இடங்களில் மேற்கோள் காட்டியுள்ளார்.[45] **இத்தாலி நாட்டினராகிய ஜி.துச்சி** [G.Tucci] என்பாரின் 1.Pre - Dignaga Buddhist Texts on Logic from Chinese Soures [Gaekward's Oriental Series, vol. 49], 2. The Nyaya mukha of Dignaga [Heidelberg, *1930*] என்ற நூல்களின் கருத்துக்களும் ஒளவை உரையில் காணப்படுகின்றன. டாக்டர் **ச.வித்யாபூஷண்** என்னும் தருக்க நூல் வல்லார் எழுதியுள்ள இந்திய தருக்கவரலாறு [History of Indian Logic, University of Calcutta] என்ற நூலில் வைதிகம், சமணம், பௌத்தம் சார்ந்த தருக்கக் கருத்துக்களின் வளர்ச்சி பற்றிய விரிவான ஆராய்ச்சி மேற்கொள்ளப் பெற்றுள்ளது. இந்த அரிய நூலையும் ஒளவை ஆழ்ந்து பயின்று தம் உரை விளக்கத்திற்குப் பயன்படுத்தியுள்ளார்.[46]

உரைவேந்தர்,

"திபெத்திய மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட இந்நூலில் [- நியாயப் பிரவேசத்தில்], இந்தப் பிரசித்த சம்பந்தத்துக்குத் தீ வெம்மை உடையது என்று ஓர் எடுத்துக்காட்டுக் காணப்படுவதாக ஆசிரியர்வித்தியாபூஷணர் மொழி பெயர்த்துள்ளார்."[47]

---

44. மணிமேகலை உரையுடன், ப. 479, 482, 485, 487, 489, 495, 499, 502, f.n. *513.*

45. அதே நூல், ப. 478. f.n

46. அதே நூல், ப. 496.

47. அதே நூல் ப. 496.

இக்கருத்து அவர் நூலில் சொல்லப்பட்ட இடம் சுட்டப்படவில்லை. அது சுட்டப்பட்ட இடம் காண்க: - History of Indian Logic, pp. 290 - 292".

உரைவேந்தர், **"விதுசேகரனார்** இப்பிரசித்த சம்பந்தம் என்னும் பக்கப்போலியின் இயல்பை ஆராய்ந்து நியாயப் பிரவேச சமஸ்கிருத மொழிபெயர்ப்பில் கோளாறு உண்டெனத் துணிகிறார்." என்று குறித்துள்ளார்.[48] இக்கருத்து Vidhushekhara Battacharya, The Basic Conception of Buddhism, University of Calcutta, 1934] என்ற நூலில் இடம்பெற்றுள்ளது.

தத்துவமேதை டாக்டர் ச. இராதாகிருட்டிணன் கருத்துக்களையும் உரிய இடங்களில் சுட்டியுள்ளார்.[49]

எனவே, 29ஆம் காதையில் அறவண அடிகளால் அறச்செல்விக்குப் போதிக்கப்பட்ட பௌத்தத் தருக்கக் கருத்துக்களைப் பயில்பவர் விளங்கிக்கொள்ளும் பொருட்டு உரைவேந்தர் எத்துணை முயற்சியும் பயிற்சியும் மேற்கொண்டுள்ளார் என்பதற்கு மேலே காட்டப்பெற்றவை ஒருசில சான்றுகளே ஆகும். இனி, நூல் நுதலும் பொருட் கூறுகளில் சிலவற்றை உரை ஒளியில் ஆராய்ந்து காண்போம்.

4.2.2.1. பௌத்த அளவை நூல் ஆசிரியர்

அறவண அடிகள் எடுத்த எடுப்பில்

ஆதி சினேந்திரன் அளவை இரண்டே
ஏதமில் பிரத்தியம் கருத்தளவு என்ன - 27. 47 - 48

என்று அறச்செல்விக்கு அளவை நூலின் அடிக்கருத்தினை அறிவிக்கிறார். ஔவை,

> **"ஆதி புத்தன்** மேற்கொண்டுரைத்த குற்றம் இல்லாத காட்சியும் கருத்தும் என்று அளவைகள் **இரண்டே** ஆகும் .... காட்சியைப் பிரத்தியட்சம் என்றும் கருத்தை அனுமானம் என்றும் கூறுபவதாலின், அவற்றைப் **பிரத்தியம்** எனச் சிதைத்தும், **கருத்தளவை** என மொழிபெயர்த்தும் கூறினான்"[50]

என்று உரை வரைந்தனர்.

---

48. மணிமேகலை உரையுடன், ப. 496.

49. அதே நூல், ப. 479.

50 அதே நூல், ப. 476.

பத்துவகை அளவைகளில் காட்சியளவை, கருத்தளவை என்ற இரண்டினை மட்டும் ஏற்றுக்கொண்ட ஆதி சினேந்திரன் யார்? என்பதை உரையாசிரியர் கூறினாரல்லர்.

ஷேர்பட்ஸ்கி [Stcherbatsky] என்னும் பௌத்த தருக்க அறிஞர், தேரவாதம் எனப்படும் ஈனயான பௌத்தர்கள் தருக்கம் பற்றி எதுவும் பேசவில்லை என்றும்; மகாயான பௌத்தத்தில் தான் தருக்கமும் அறிவாராய்ச்சியியலும் கற்பிக்கப்பட்டன என்றும்; **மைத்திரேயர்** [Maitreya] என்பாரும் யோகாசார நெறியினை நிறுவிய அசங்கர், வசுபந்து [Vasubandhu] என்னும் சாதோரர்கள் பௌத்த தருக்கத்தின் முதலாசிரியர்கள் என்றும் குறித்துள்ளார்.[51] அசங்கரின் யோகாசார்யா பூமிசாத்திரம் என்ற பனுவல்தான், போதிசத்துவர் அறிந்திருக்க வேண்டிய பாட நூல்களில் தருக்கத்தையும் இணைத்துள்ள முதல் நூலாகும் என்று ஜி.துச்சி [G.Tucci],- On Some Aspects of the Doctrines of Maitreya and Asanga - என்ற ஆய்வு நூலில் குறித்துள்ளார்.[52]

மாத்தியமிக பௌத்தத்தில் 1. பிரத்தியட்சம் [- காட்சி, Perception] 2. அனுமானம் [- கருதல், Inference] 3. உபமானம் [- உவமை, Comparison] 4. சப்தம் அல்லது ஆகமம் [- நூல் அளவை, Verbal testimony] என்ற நால்வகை அளவைகளும் நையாயிகரிடமிருந்து பெறப்பட்டன. முற்கால யோகாசாரத்தில் 1. பிரத்தியட்சம் 2. அனுமானம் 3. சப்தம் என்ற மூன்றும் கொள்ளப் பெற்றன. பிற்கால யோகாசாரம் எனப்படும் சௌத்திராந்திக யோகாசார பௌத்தத்தில்தான் பிரத்தியட்சம் [- காட்சி அளவை], அனுமானம் [- கருதல் அளவை] என்ற இரண்டு அளவைகள் மட்டும் மேற்கொள்ளப்பட்டன.[53]

பிற்காலயோகாசாரம் எனப்படும் சௌத்திராந்திக யோகாசார பௌத்தத்தினை உருவாக்கிய வசுபந்துவும், [Vasubandhu] அவர் மாணவர் திங்நாகரும் [Dignāga] அவர் மாணவர் தருமகீர்த்தியும் [Dharmakirti] காட்சி, கருதல் என்ற இரண்டு அளவைகளும் பொருள்களின் மெய்ம்மைத் தன்மையினைத் தான் புரிந்து

51. i. Stcherbatsky, TH. Buddhist Logic, vol.I, Reprint, Motilal Banarsidass, New Delhi, 1994, pp. 28-31.
ii. Vidyabhusana,S.C., **A History of Indian Logic,** pp. 272-273.

52. Kandaswamy,S.N., **Buddhism as Expounded in Manimekalai,** Annamalai University Publication, Annamalai nagar, 1978, pp. 256-257.

53. Ibid, p. 259.

கொள்ளுவதற்கும், பிறர்க்குப் புலப்படுத்துதற்கும் போதுமானவை என்று கூறியுள்ளனர்.

வசுபந்துவை அவர்தரும் அளப்பரிய ஞானத்தின் அடிப்படையில் இரண்டாம் புத்தர் என்று அழைத்துள்ளனர். காண்க:

Among the great names of later Buddhism, **the name of Vasubandhu occupies an exceptional position; he is the greatest among the great.** He is the only master who is given the title of the second Buddha. His teaching was encyclopaedic, embracing all the sciences **cutivated in India at his time. Dignāga was one of his great disciples.**[54]

எனவே இரண்டாம் புத்தர் எனப் போற்றப் பெற்ற **வசுபந்துதான்** சாத்தனார் சுட்டும் அளவை நூல் ஆசிரியர் ஆகிய **ஆதிபுத்தர்** [- ஆதிசினேந்திரர்] என்பது புலனாகும். பின்னூல் ஆசிரியர் கருத்தினை முன்னூல் ஆசிரியர் கருத்தாக மொழிவது சாத்தனாரிடம் காணப்படும் ஒரு பழக்கம் ஆகும். ஒரு சில எடுத்துக்காட்டுகளைக் கூறுதல் சாலும்.

1. சைமினி [Jaimini] தம் மீமாம்ச சூத்திரத்தில் முதல் மூன்று பிரமாணங்களே கூறியுள்ளார். இந்நூலுக்கு உரை வரைந்த உபவருஷரும், பின்வந்த குமரிலபட்டரும்தாம் மேலும் மூன்று அளவைகளைச் சேர்த்து ஆறு பிரமாணங்களைக் கூறியவர். இப்பிற்காலக் கருத்தினை ஆதி நூலாசிரியர் சைமினியின் கருத்தாகச் சாத்தனார் சாற்றியுள்ளார். [மணி, 27. 5-8].

2. வைசேடிகத் தத்துவத்தினை வரையறை செய்த கணாதர் என்னும் ஞானி காட்சி, கருதல் என்ற இரண்டு அளவைகளையே கொண்டனர். இவர் எழுதிய வைசேடிக சூத்திரத்திற்குப் பதார்த்த தரும சங்கிரகம் என்னும் பேருரை வரைந்த பிரசத்தபாதர் மேலும் மூன்று அளவைகளைச் சேர்த்து ஐந்து அளவைகளைக் கொண்டனர். கணாதர் 1. திரவியம் 2. குணம் 3. கருமம் என்று திரிபதார்த்தங்களைக் கூறியுள்ளார். எனின், உரையாசிரியர் ஆகிய பிரசத்தபாதர் 4. சாமானியம் 5. விசேடம் 6. சமவாயம் [- கூட்டம்] என்பனவற்றையும் சேர்த்து ஷட்பதார்த்தங்களை [- அறுவகைப் பொருள்களை] எண்ணியுள்ளார். இவற்றையெல்லாம் சாத்தனார் கணாதர் கருத்தாகவே கூறியிருத்தல் நோக்கத்தக்கது. [27. 241 - 262].

54. Buddhist Logic, vol.I, p. 32.

3. இவ்வாறே இரண்டாம் புத்தர் எனப் போற்றப் பெற்ற வசுபந்தும், அவர்தம் முதன்மை மாணாக்கர் ஆகிய திக்நாகரும் மேற்கொண்ட காட்சி, கருத்து என்ற இரண்டு அளவைகளையும் **ஆதிபுத்தர்** [- சினேந்திரர்] கூறினார் என்று தொன்மை தோன்றச் சாத்தனார் கூறியுள்ளார் என்று கொள்ளுதல் சாலும்.[55]

வசுபந்துவின் தலைமை மாணாக்கர் ஆகிய திக்நாகர் [Dignaga],

"Pratyaksam anumam ca
Pramanam hi dhvi laksanaml"

என்று பிரமாண சமுச்சயத்தில் கூறியுள்ளதை.

சாத்தனார் மணிமேகலை தருக்கப் பகுதியில்,

"ஆதி சினேந்திரன் அளவை இரண்டே
ஏதமில் பிரத்தியம் கருத்தளவு என்ன" [மணி, 27. 47 – 48]

என்று கூறியுள்ளமை ஒத்திருத்தல் உன்னத்தக்கது.

பொருள்களின் இருப்பினை நேரிடையாகச் சுட்டுணர்வினால் அறிதலும் [-Direct Cognition, காட்சி] மறைமுகமாக அனுமானத்தினால் உய்த்துணர்தலும் [- Indirect cognition or inference] கூடும் என்று செளத்திராந்திக யோகாசார பெளத்த ஞானிகள் எண்ணினர். எனவேதான் காட்சி அளவை, கருதல் அளவை ஆகிய இரண்டனையும் தவிர பிறவற்றை எண்ணவில்லை.

சாத்தனார் காலத்தில் தத்துவவாதிகள் ஆகமம், உபமானம், அருத்தாபத்தி, அபாவம் என்னும் அளவைகளையும் மேற்கொண்டுள்ளனர். இவற்றையெல்லேம் மேற்கூறப்பெற்ற இரண்டளவைகளில் அடக்கிவிடலாம் என்பது திக்நாகரின் கருத்தாகும்.[56] இவர் கருத்தினை ஏற்றுக்கொண்ட சாத்தனார்,

"ஏனை அளவைகள் எல்லாம் கருத்தினில்
ஆன முறைமையின் அனுமானமாம் ...." - 29. 55-56

என்று வழிமொழிந்தனர்.

இனி, காட்சி அளவை, கருதல் அளவைக்குச் சாத்தனார் கூறும் வரைவிலக்கணத்தினை நோக்குவோம்.

---

55. மணிமேகலையில் தத்துவச் சிந்தனைகள், ப. 244-245.

56. Buddhist Logic, vol.I, p. 7.

காட்சி அளவை

சுட்டுணர்வுதான் காட்சி அளவை என்பது சௌத்திராந்திக யோகாசாரரின் கருத்தாகும். இதனைச்,

"சுட்டுணர்வைப் பிரத்தியக்கம் எனச் சொல்லிவிட்டனர்" [மணி. 29. 49-50] என்று சாத்தனார் பிறர் கூற்றாக மொழிந்திருத்தல் எண்ணத்தக்கது. இக்கருத்து,

"Pratyaksam Kalpanapodham"
- Pramana Samuccaya, I. 3.

எனவரும் திக்நாகரின் கருத்துடன் ஒத்துள்ளது. திக்நாகர் சுட்டும் **கல்பனாபோடம்** என்பதும், சாத்தனார் குறிப்பிடும் **சுட்டுணர்வு** என்பதும் அடிப்படையில் ஒரு கருத்தையே உணர்த்துகின்றன. ஷேர்பட்ஸ்கி என்பார், கற்பனையினின்றும் விடுபட்டது என்றும் நேரிடை அறிவு என்றும் இதனை விளக்கினார். **சுத்தம் பிரத்யட்சம், நிர்விகல்ப ஞானம்** என்பன இவ்வுண்மையினையே உணர்த்துகின்றன. இத்தொடர்களின் பொருண்மை சாத்தனாரின் சுட்டுணர்வு என்ற சொல்லில் பொதிந்துள்ளது. **சுட்டுணர்வு** என்பது "**பொருண் உண்மை மாத்திரம் காண்பது**" [27.57] என்று குறித்துள்ளார். புலன்களுக்குப் பொருளைப் புலப்படுத்தும் அளவில் பிரத்தியட்சப் பிரமாணத்தின் செயல் [function] முடிகிறது. இதனை, சாட்சாத்காரித்துவ வியாபரம் என்பர் அளவை நூலோர். ஆங்கிலத்தில், "Cuttunarvu i.e. Direct cognition donotes the knowing of the bare existence of a thing without its adjuncts" என்று கூறுவர். எனவே, **பொருளின் பெயர், இனம், குணம், தொழில்** என்பன அனுமானத்தாலும் அறியப்படும் என்ற கருத்தினை,

"நாமம் சாதி குணம் கிரியைகள்
மற்றவை அனுமானத்தும் அடையும் எனக." மணி.29.50-51

எனவரும் பகுதியில் சாத்தனார் உடன்பட்டுள்ளார்.

ஆதலின், காட்சி அளவையினை விளக்கும் வகையில் திக்நாகரும் சாத்தனாரும் ஒன்றுபடுகின்றனர் எனலாம்.

நையாயிகரின் கருதல் அளவை [29. 52-56]

பௌத்த தருக்கத்திற்குரிய அளவைகள் இரண்டனையும் நுதலிப் புகுந்த சாத்தனார், அடுத்து நையாயிகர்க்குரிய கருதல் அளவைக் குறைபாடுகளை வெளிப்படுத்துகிறார். நையாயிகத்தில் சொல்லப்படும். 1. காரண அனுமானம் [- பூர்வவத்து], 2. காரிய

அனுமானம் [சேஷவத்து] 3. சாமானிய அனுமானம் [-சாமான்யதோதிருஷ்டா] என்ற மூன்றும் ஆராயுமிடத்து ஒரோவழி பிழைபடுதலும் உண்டு [29. 52 – 53]. ஆயின் எவ்வாறு பிழைபடும் என்பதை எடுத்துரைக்கவில்லை. இம்மூன்றனுள் காரிய அனுமானம் மட்டும் தப்புதல் இல்லை. இதற்குச் சாத்தனார், 'கனலில் புகைபோல்' [29.54] என்று மேற்கோளும் தந்தார். புகையுள்ள இடத்தில் நெருப்புண்மை அறியப்படுதலின் நெருப்பின் காரியமாகிய புகை பிழைபடுதல் இல்லை. இவர் கருத்து இவர்க்கு வழிகாட்டியாகிய திக்நாகராலும், பின்வந்தவராகிய தருமகீர்த்தியாலும் கூறப்பட்டுள்ளது.[57]

நையாயிகரின் அளவை உறுப்புக்கள்

அளவையினைத் தங்கள் முதன்மைக் கொள்கையாகக் கொண்டுள்ள நையாயிகரின் கருத்தினைச் சாத்தனார் ஆராய முற்பட்டார். அவர்கள் ஐந்துறுப்புக்களை கொண்ட அனுமானத்தை மேற்கொண்டவர்கள். அவையாவன; 1. பிரதிக்ஞை [- பக்கம், Proposition], ஏது [Reason], 3. உதாஹரணம் [- திருட்டாந்தம், Example], 4. உபநயம் [Application] 5. நிகமனம் [Conclusion]. இவற்றுள் பிரதிஞ்ஞை என்பது நையாயிகரின் குறியீடு என்றும், இதனைப் பக்கம் [பட்சம்] என்று முதன்முதல் வழங்கியவர் திக்நாகர் என்றும் ஷேர்பட்ஸ்கி ஆராய்ந்துணர்த்தினார். இவ்வாறே அவர்களுக்குரிய உதாஹரணம் [- உதாரணம்] என்ற சொல்லை மாற்றித் திட்டாந்தம் [திருஷ்டாந்தம்] என குறியீட்டினைப் பௌத்த தருக்கத்தினர் வழங்கினர். ஐந்துறுப்பு அமைந்த அளவைக் கோவையினை [Five - Membered Syllogism] இவண் நோக்குவோம்.

1. பக்கம்

சாதிக்கப்பட வேண்டிய துணிபொருள் உடைய உறுப்பினைப் பக்கம் என்றனர். துணிய வேண்டிய பொருள் நெருப்பு, அதனைப் பெற்றுள்ளதாகக் கருதப்படும் மலை, பக்கம் என்னும் உறுப்பாகும். சாத்தனார்,

"இம்மலை நெருப்புடைத்து எனல்"

என்பதையேபக்கம் என்றார். [29.59.] இதனை நிலைநாட்டுதற்குரிய உறுப்பு ஏது வருமாறு:

---

57. i. Buddhist Logic, vol.I, pp. 266, p. *284-285*.

ii. Buddhist Logic, vol.II, pp. *109-110*.

2. ஏது

துணி பொருள் இல்லாத இடமெங்கும் தானும் இல்லாததாகவும், துணி பொருள் உள்ள இடமெங்கும் தானும் தோன்றுவதாகவும் உள்ளது ஏது ஆகும். இதனை,

"புகையுடைத்து ஆதலால் எனல் பொருந்து ஏது" [29.60.]

என்று சாத்தனார் குறித்தனர்.

3. திட்டாந்தம்

இது இருவகைப்படும்: 1. சாதன்மியத் திட்டாந்தம் [Homogeneous Example] 2. வைதன்மியத் திட்டாந்தம் [Heterogeneous Example].

1. சாதன்மியத் திட்டாந்தத்திற்கு, "வகையமை அடுக்களை போல்" [29 - 61] என்று எடுத்துரைத்தனர். அடுக்களையில் புகை உண்மையால் நெருப்பின் இருப்பு அறியப்படும். அதுபோல் மலையில் புகை உண்மையால் நெருப்புண்மை அறிதல் வேண்டும்.

2. வைதன்மியத் திட்டாந்தம் என்பது துணி பொருளின் இயைபின்றி இருப்பதாகும். இதனை,

"நெருப்புடைத்து அல்லாது யாதொன்று அதுபுகைப்
பொருத்தம் இன்று புனல்போல் என்றல்
மேவிய பக்கத்து மீட்சி மொழியாய்
வைதன்மிய திட்டாந்தம் ஆகும்" [29. 64 – 67]

என்று சாத்தனார் எடுத்துரைத்தனர். நீருள்ள இடத்தில் புகையிருத்தல் இயலாது நெருப்பில்லாத இடம் எங்கும் புகையும் இல்லை; பொய்கையைப் போல என்பது மேற்காட்டிய பகுதியின் சாரம் ஆகும்.

4. உபநயம்

திட்டாந்தத்துடன் தொடர்புபடுத்தி முடித்துக்காட்டும் உறுப்பினை உபநயம் என்றனர். இதனை,

"மலையும் புகையுடைத்து என்றல்" - [29.62]

என்று இயம்பினர்.

5. நிகமனம்

பக்கப் பொருளை ஏது, எடுத்துக்காட்டுகளால் சாதித்து உறுதிப்படுத்தும் அளவைக் கோவை [Syllogism] உறுப்பினை நிகமனம் என்றனர். இதனை,

"நிகமனம் புகையுடைத்தே நெருப்புடைத்து எனல்" - *[29. 63]*

என்று இசைத்தனர். இம்மலையும் புகையுடைமையால் ஆங்கே நெருப்பும் இருக்கத்தான் வேண்டும் என்று முடிவு செய்தல் நிகமனம் ஆகும்.

வித்யாபூஷணரும் ஷேர்பட்ஸ்கியும் பௌத்த வட்டத்தில் நையாயிகரின் ஐந்துறுப்பு அனுமான அளவைக் கோவையினை அறிமுகப்படுத்திய முதல்வர் அசங்கரே என்று அறுதியிட்டு ரைத்தனர். நியாயப் பிரவேசத்திலும் இந்த அளவைக் கோவை கூறப்பட்டுள்ளது. காலத்தால் முற்பட்ட மைத்திரேயரும், ஸ்திரமதியும் சாந்திரட்சிதரும் இதனைக் கூறியுள்ளனர் என்று ஜி.துச்சி குறித்துள்ளார்.[58]

இதனையே சாத்தனார்,

"ஒட்டிய உபநயம் நிகமனம் இரண்டும்
திட்டாந் தத்திலே சென்றடங்கும்" *[29. 109 – 110]*

என்று சுட்டினார். எனவே பக்கம், ஏது, திட்டாந்தம் என்ற மூன்று உறுப்புக்கள் கொண்ட அளவைக் கோவையே போதும் என்று கருதியுள்ளார். எனின் திக்நாகர் தம் நியாயமுகம் என்னும் தருக்க நூலில்,

I refute the theory of those logicians who consider the thesis [- paksa], the application [- upanaya], and the conclusion [- nigamana] as separate members of the syllogism." என்று கூறியிருத்தல் நோக்கத்தக்கது.[59]

எனவே, திக்நாகர் உபநயம், நிகமனம் என்ற இரண்டு உறுப்புக்களையும் பக்கம் என்னும் உறுப்பில் அடக்கினர் என்பது புலனாகும். எனவே, பௌத்த தருக்க அறிஞர்களின் நடுவே சிறு சிறு கருத்து மாற்றம் இருந்தமை உணரப்படும்.

---

58. i. History of Indian Logic, pp. *263-266*.
ii. Buddhist Logic, vol.I, pp. *305*.
iii. Tucci., Pre-Diñ ñaga Buddhist Texts on Logic from Chinese Sources, p. xix.

59. Buddhism as Expounded in Manimekalai, pp. *270-271*.

பௌத்தரின் முக்கூற்று முடிபுக்குரிய மூவகை வடிவங்கள் [Three Figures of the Buddhist Syllogism]

தம்மில் கொண்டுள்ள கட்டாய இயைபினால் ஒரு பொருள் உண்மையை அறியப் பயன்படும் பக்கம், பக்கதன்ம வசனம் என்னும் இரு தொடர்களுக்கு இடையே காணப்படும் கட்டாயத் தொடர்பினை மூவகை வடிவங்களில் மட்டுமே பௌத்த அளவையியலார் நிலைநாட்டியுள்ளனர்.

முக்கூற்று முடிபுக்குரிய நல்லுறுப்புகள் [Valid Members]

பக்கம், ஏது, திட்டாந்தம் என்ற மூன்றையும் நல்ல உறுப்புக்கள் [Valid members] என்றும் தீய உறுப்புக்கள் [Invalid members] என்றும் பகுத்துள்ளார். நல்லவை - செல்லுபடி ஆகக் கூடியவை. தீயவை– செல்லுபடி ஆகாதவை. இம்மூன்றையும் முறையாகக் காண்போம்.

1. நன்பக்கம் [Valid thesis or proposition] [29. 113 -121]

உபயவாதிகளுக்கும் தன்மியும் சாத்திய தன்மமும் வெளிப்படையாக விளங்குதல் நன்பக்கத்தின் முதல் இலக்கணம் ஆகும். தன்மியையும் சாத்திய தன்மத்தையும் பிறிதொரு பொருளினின்றும் வேறாகும் மாறுபாட்டினையும் தங்கண் சார்த்திக் கூறப்படும் தன்மையினையும் நன்பக்கம் உடையதாகும். சத்தம் நிலைபேறுடையதா? நிலையாமை உடையதா? என்ற ஆராய்ச்சியில் ஏது, எடுத்துக்காட்டுக்களின் உதவியால் ஒன்றினை நிலைநாட்டுதல் நன்பக்கத்தின் நோக்கம் ஆகும். பக்கவசனத்தில் சத்தம் என்பது தன்மி அல்லது பக்கமாகும்; சாதித்தற்குரிய தன்மம் நித்தத்துவமும் அநித்தத்துவமும் ஆகிய இரண்டில் ஒன்றாகும். சத்தம்நித்தம் என்ற கொள்கையர் மீமாம்சகர். சத்தம் அநித்தம் என்ற கருத்தினர் பௌத்தர். இவ்விரண்டினையும் அவரவர் மதம் பற்றிக் சாத்தனார் எடுத்துக்கூறி நன்பக்கத்தை விளக்கியுள்ளார்.

எ.டு,

1. **சத்தம் அநித்தம் [நல்ல பக்க தன்ம வசனம்]**
2. **சத்தம் நித்தம் [நல்ல பக்க தன்ம வசனம்].**

இவ்விரண்டு உரைகளில் [- Statements] சத்தம் என்பது பக்கம். அநித்தத்துவம் என்னும் தன்மத்தை உடையது என்பது சாத்திய தன்மம். இக்கூற்றுப் பௌத்தர்க்குப் பொருந்துவது [Valid].

நித்தத்துவம் என்னும் தன்மத்தை உடையது என்பது சாத்திய தன்மம். இது மீமாம்சகர்க்குப் பொருந்துவது [Valid]. நன்பக்கம் பற்றிய திக்நாகரின் கொள்கையினை,

> "A thesis cannot be something absurd .... and it must be a proposition which the disputant himself believes, which the bonofide really intends to prove. It would be bad logic if a philosopher attempted to make capital out of ideas which he does not share himself."

என்று ஷேர்பட்ஸ்கி இனிதுரைத்தல் இயைபு கருதி இவண் எண்ணத்தக்கது.[60]

2.நல்லேது [Valid reason 29. 121 - 135]

ஒரு புறம் அனுமானத்தின் அடிநிலைக்கும் மறுபுறம் சபக்க விபக்கங்கட்கும் உரிய ஏதுவின் தொடர்பு வசுபந்துவின் திரைரூப்பிய விதிகளில் பொதிந்துள்ளது. வசுபந்துவின் வாதவிதியிலும் திக்நாகரின் நியாய முகம், பிரமாண சமுச்சயம் ஆகிய நூல்களிலும் காணப்படும் மூன்று இலக்கணங்களையும் சாத்தனார்,

1. மொழிந்த பக்கத்து ஊன்றி நிற்றல்
2. சபக்கத்து உண்டாதல்
3. விபக்கத்து இன்றியே விடுதல்

என்று கூறி' அவற்றிற்குரிய விளக்கங்களையும் வழங்கியுள்ளார்.[61]

3. ஏதமில் எடுத்துக்காட்டு [Valid example, 29. 136 – 141]

திக்நாகரைப் பின்பற்றிச் சாத்தனாரும் 1. சாதன்மியத் திட்டாந்தம் [Positive example], 2. வைதன்மிய திட்டாந்தம் [Negative example] என்பனவற்றைக் கூறியுள்ளார். நல்லேது சபக்கத்தில் சாதன்மியத் திட்டாந்தமும் விபக்கத்தில் வைதன்மியத் திட்டாந்தமும் பெற்றிருத்தலைப் புலப்படுத்தும் பொருட்டு இவ்விருவகை முந்துநூல் ஆசிரியர் வழிநின்று சாத்தனார் மொழிந்துள்ளார். சாத்தனார் சாதன்மியத் திட்டாந்தத்திற்கு எடுத்துக்காட்டும், வைதன்மியத் திட்டாந்தத்திற்கு விளக்கம் மட்டுமே தந்துள்ளார்.[62]

---

60. Buddhist Logic, vol.I, pp. 280.

61. Ibid, pp. 281.

62. கந்தசாமி, சோ.ந., தமிழிலக்கியத்தில் பௌத்தம், சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு, 1977, ப. 206-207.

தருக்கப் போலிகள் [Logic fallacies]

முக்கூற்று முடிபின் நல்லுறுப்புக்கள்தாம் தத்துவ வாதியின் வெற்றிக்கு வழிவகுக்கும். அறிந்தோ, அறியாதோ பிழையான உறுப்புக்களைக் கடைப்பிடித்து சொல்தொடுத்தால், அத்தீய உறுப்புக்களே தோல்விக்கு உய்த்துவிடும். ஆதலின், தத்துவக் கொள்கைகளை நிலைநாட்டும் பொருட்டு முக்கூற்று வடிவினைப் புலப்படுத்தற்குரிய விதிமுறைகளைப் பௌத்த தருக்க நூலோர் வரையறுத்துக் கொடுத்துள்ளனர். இவற்றின் பிறழ்ச்சிகள் ஆபாசங்கள் அல்லது போலிகள் [Fallacies] ஆக முடிந்துவிடும். பௌத்தரின் முக்கூற்று முடிபின் உறுப்புக்கள் 1. பக்கம், 2, ஏது 3, திட்டாந்தம் என்ற மூன்றாக இருத்தலின், அவற்றின் பிழையான பகுதிகளும் 1. பக்கப்போலி, 2. ஏதுப்போலி, 3. திட்டாந்தப் போலி என்று வகைமைப்படுத்தப் பெற்றன. திட்டாந்தப் போலி 1.சாதன்மியத் திட்டாந்தப் போலி 2. வைதன்மியத் திட்டாந்தப் போலி என்று இருவகைப்படும்.

மேலே சுட்டப்பெற்ற அளவைப் போலிகளைச் சாத்தனார் முந்துநூல்களைப் பின்பற்றியும் ஒரோ வழி சிறு மாற்றம் செய்தும் தம் அளவை நூலில் 300 அடிகளுக்கு மேல் அறவண அடிகளின் கூற்றில் வைத்து விரித்துக் கூறியுள்ளார். [29. 143 - 470].

ஔவை அவர்கள் தம் உரையில் பௌத்தரின் தருக்கக் கொள்கைக்குச் சார்பாக அமைந்த நூல்களையும், ஒவ்வாத நூல்களையும் எடுத்துக்காட்டியிருத்தல் அவர்தம் அளவை நூற் புலமைக்கு ஏற்ற சான்றாகும்.

இனி, பௌத்த தத்துவத்தினை அறவண அடிகள் அறச்செல்விக்குப் பாடம் சொல்லும் பனுவலாகச் சாத்தனாரால் அமைக்கப்பட்டுள்ள முப்பதாம் காதையின் பொருண்மையினையும் உரைவேந்தரின் விளக்கமும் குறித்து ஆராய்ந்து காண்போம்.

பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற காதை

இக்காதையில் சார்பில் தோற்றம், பன்னிரு சார்புகளின் விளக்கம், சார்பின் நீக்கம், பன்னிரு சார்புகளும் நாற்கண்டங்களில் அடங்குதல், முச்சந்தி, மூவகைப் பிறப்பு, முக்கூறுகள், நான்கு வாய்மைகள், அறுவகை வழக்கு, நால்வகை நயங்கள், நால்வகை வினாவிடைகள், அனான்ம வாதம், முக்குற்றங்களை முனிதல், பாவனை வகைகள் முதலியவை விளக்கப் பெற்றுள்ளன. இக்கருத்துக்களை விளங்க வைக்கும் முறையில் உரைவேந்தர் பல்வேறு நூல்களிலிருந்தும் மேற்கோள்கள் தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அவற்றுள் திரிபிடகம், மூலமாத்தியமிக

காரிகை, தசபூமிக சூத்திரம், தம்மசங்கணி, போதிசத்துவ அவதான கல்பம், லலிதவிஸ்தரம், மகாவஸ்து, சிவஞான சித்தியார், தத்துவப் பிரகாசம் என்ற பனுவல்கள் குறிப்பிடத்தக்கவை.

இலண்டன் பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றுத்தந்த, "The Bodhisattva Doctrine in Buddhist Sanskrit Literature" என்ற தலைப்புடைய டாக்டர் ஹர்தயாளின் ஆய்வு நூல் இலண்டன் நகரில் 1932இல் வெளிவந்துள்ளது. இந்த நூல் எண்ணற்ற வடமொழி, பாலி பௌத்த நூல்களின் வடித்தெடுத்த சாரமாக அமைந்து ஆய்வாளர்க்குப் பெரும்பயன் வழங்கி வருதல் சுட்டுதற்கு உரியது. இந்த நூலினை ஔவை அவர்கள் அணுகியும் நுணுகியும் பயின்று அரிய முத்தனைய தத்துவக் கருத்துக்களை எடுத்துத் தம் உரையில் பெரிதும் பயன்படுத்தியுள்ளார் என்பது நம் ஆய்வினால் புலனாகின்றது. இந்த அரிய நூலினை ஒரே ஒரு இடத்தில்தான் உரைவேந்தர் குறித்துள்ளமை பாராட்டத்தக்கது.[63]

அருஞ்சொற்பொருள் விரித்தல், மேற்கோள் காட்டுதல், இலக்கண விளக்கம், சிவஞான சித்தியார், தத்துவப் பிரகாசம் உள்ளிட்ட சைவ சித்தாந்தம் சார்ந்த மெய்ப்பொருள் நூல்களிலிருந்து பௌத்த தத்துவக் கருத்துக்கள் சிலவற்றைத் தெளிவுபடுத்தல் முதலிய சிறப்புக்களை ஔவை உரையில் கண்டு மகிழலாம். தெள்ளிய தமிழ்நடையில் செவ்விய சொற்களால் நுண் கருத்துக்களை எளிமைப்படுத்திக் கூறும் உரைவேந்தரின் புலமை மாண்பு தொட்ட இடமெல்லாம் தட்டுப்படக் காணலாம்.

இப்பின்புலத்துடன், இக்காதை நுவலும் பொருட்கூறுகளைச் சில தலைப்புக்களில் அடைவு செய்து சுருக்க விளக்கமாக நோக்குவோம்.

4.2.3.1. சார்பில் தோற்றம்

சாத்தனார் அறவண அடிகளின் வாயிலாக அறச்செல்விக்குக் கற்பிக்கும் பௌத்த தத்துவத்தின் மையக் கொள்கை பிரதித்திய சமுற்பாதம் எனப்படும் சார்பில் தோற்றம் ஆகும். இது குறித்து, மணிமேகலை பதிப்பாசிரியர் டாக்டர் உ.வே.சா. உரைத்திறம் பற்றி எழுதிய பகுதியில் சுட்டப்பட்டது. எனினும், இங்கு அதனைப் பற்றிய விரிவான விளக்கம் வேண்டப்படுதலால் மீண்டும் அது பற்றிக் கூற வேண்டிய தேவை உண்டாகிறது. எனவே, கூறியது கூறலாகக் கொள்ளாமல் பயில்வோர் அனுவாதமாகக் கொள்ளுதல் வேண்டும்.

63. மணிமேகலை உரையுடன், ப. 553.

பாலியில் உருப்பெற்ற திரிபிடகங்களிலும் அவற்றின் உரைகளிலும் பிரதித்திய சமுத்பாதம் என்ற வடசொல் படிச்ச சமுப்பாதம் என்று காணப்படுகிறது. பாலி நூல்களில் சார்புகளின் எண்ணிக்கை பன்னிரண்டுக்கு மேல் காணப்படுகின்றன. ஆனால், மகாயான நூல்களில் பன்னிரு சார்புகளே கூறப்பட்டுள்ளன. இவை பேதைமை முதலாக வினைப்பயன் ஈறாக அமைந்த பன்னிரண்டு ஆகும். இவற்றை ஒவ்வொன்றாக நிரல்படக் காண்போம்.

1.பேதைமை [Ignorance] *[30. 51 – 54]*

அவிஜ்ஜா, அவித்யா என்ற பாலி, வட சொற்களின் தமிழாக்கமாகப் பேதைமை என்ற சார்பு அமைகிறது. பௌத்தத்தின் மையக் கொள்கையாகிய பன்னிரு சார்புகளையும் நான்கு வாய்மைகளையும் அறியாமையும் அளவைகளால் அறிந்துகொண்ட மெய்ப்பொருளை மறத்தலும் முயலுக்குக் கொம்பு உண்டு எனப் பிறர் கூறுவதை நம்புதலும் பேதைமை எனப்படும். போதிசத்துவர் களைதற்குரிய பத்துத்தளைகளில் முன்னிற்பது இப்பேதைமை ஆகும்.

2.செய்கை [Disposition] *[30. 59 -81]*

இதனைப் பாலியில் சங்காரா எனவும் வடமொழியில் சம்ஸ்கார எனவும் வழங்குவர். பேதைமையின் காரணமாகச் செய்கை தோன்றுகிறது. இச்செய்கை அறியாமையால் விளைதலின் தீவினை எனப்படும். இது மூவகைப்படும்.

1. உடம்பில் தோன்றுவன மூன்று.

1. கொலை 2. களவு 3. காமத்தீவிழைவு

2. சொல்லில் தோன்றுவன நான்கு.

1.பொய் 2. குறளை 3. கடுஞ்சொல் 4. இன்னாச் சொல்

3. உள்ளத்தில் உருக்கொள்வன மூன்று.

1.வெஃகல், 2.வெகுளல், 3.பொல்லாக்காட்சி [மயக்கம்].

செயல்கள்தாம் ஒருவரின் பிறப்பினைத் தீர்மானிப்பன. தீவினைகளைப் புரிவோர் நரகர், பேய், விலங்கு என்ற மூவகைக் கதிகளில் பிறப்பர். நற்செயல் புரிவோர் மக்கள், தேவர், பிரமர் ஆகிய உயர் கதிகளில் தோன்றுவர்.

3. உணர்வு [Consciousness] [30. 82 - 83]

பாலியில் விஞ்ஞானம் எனவும் வடமொழியில் விக்ஞான எனவும் வழங்கும் சார்பினைச் சாத்தனார் உணர்வு என்று தமிழில் தந்தனர். செயலும் ஈடுபாடும் இன்றி, சாட்சி மாத்திரையாய் உணர்வு விளங்கும்.

4. அருஉரு [Mind and body] [30. 84 – 85]

இதனைப் பாலியிலும் வடமொழியிலும் நாமரூப என்று வழங்கினர். நாமம் என்பது அருவத்தையும், ரூபம் என்பது உருவத்தையும் குறிக்கும். இரண்டும் இணைந்துதான் மனிதனின் ஆளுமையினைச் சுட்டும்.

5. வாயில் ஆறு [Six fields of operation] [30. 86 – 87]

இதனைப் பாலியில் சள் ஆயதன என்றும் வடமொழியில் ஷட் ஆயதன என்றும் குறித்தனர்.

மனத்துடன் சேர்ந்த அறிகருவிகள் [Organs of Knowledge] ஐந்தும் வாயில்கள் எனப்படும். புறத்தே உள்ள பொருள்களுடன் இவ்வறிகருவிகளின் உதவியால் உணர்வு தொடர்பு கொள்கிறது. பௌத்தப் பனுவல்களில் அறிகருவிகள் ஆறும் அகவாயில்கள் என்றும், அவற்றால் அறியப்படும் அறுவகைப் பொருள்கள் புறவாயில்கள் என்றும் கூறப்பட்டுள்ளன. சுத்தபிடகத்தின் சளாயதன சம்யுத்தத்தில் இப்பன்னிரு வாயில்களும் கூறப்பட்டுள்ளன.

6. ஊறு [Contact, Sense Contact] [30. 88 – 89]

இச்சார்பு பாலியில் பஸ்ஸோ என்றும் வடமொழியில் ஸ்பர்ச என்றும் கூறப்பட்டது. அகவாயில்கள் ஆறினாலும் புறப் பொருள்களுடன் தொடர்பு கொள்ளுங்கால் தோன்றும் சார்பினை ஊறு என்றனர்.

7. நுகர்வு [Feeling or Sensation] [30 - 90]

இதனைப் பாலியிலும் வடமொழியிலும் வேதனா என்று கூறினர். உணர்வினால் பொருள்களை நுகரும் திறன் நுகர்வு எனப்படும். நுகர்தல் என்பது 1. இன்பம் தருவது 2. துன்பம் தருவது 3. இரண்டும் அற்றது என்று மூவகைப்படும் என்று சுத்தபிடகத்தின் வேதனா சம்யுத்தம் விளம்புகிறது.

8. வேட்கை [Thirst or Craving] [30 - 91]

இதனைப் பாலியில் தண்ஹா என்றும், வடமொழியில் திருஷ்ணா என்றும் கூறினர். இச்சார்பினை, அவா என்றும் உரைப்பர். பொருள்கள் மேல் வைத்த ஆசையினை மேலும் மேலும் பெருக்கி நிறைவு அடையாத நிலையினை இச்சார்பு சுட்டுகிறது.

9. பற்று [Clinging or Grasping] *[30 - 92]*

இதனைப் பாலியிலும் வடமொழியிலும் உபாதான என்றனர். பொருள்களில் ஒட்டிக்கொள்ளும் பந்தத்தினைப் பற்று என்னும் சார்பாகச் சாத்தனார் குறித்தனர்.

10. பவம் [Becoming] [30. 93 – 94]

இதனைப் பவ என்றே பாலி, வடமொழிப் பௌத்தப் பனுவல்கள் பகர்ந்தன. வேட்கை, பற்று முதலியவற்றின் காரணமாகத் தோன்றும் பவம் என்பது கருமத்தொகுதி என்று சுட்டப்பட்டது.

11. பிறப்பு அல்லது தோற்றம் [Birth] [30. 95 - 97]

இதனை ஜாதி என்றே மேலே சுட்டப்பட்ட இரு மொழிப் பௌத்தப் பனுவல்கள் பகர்ந்தன. பிறப்பு எனப்படும் சார்பு தான் செய்த வினைக்கேற்பப் பொருந்தியிருக்கும் விஞ்ஞானம், முன்னும் பின்னுமாய்ச் சாரும் நிதானங்களும் நால்வகைப் பிறப்புக்களில் காரணகாரிய அடிப்படையில் பொருந்தும் உருவத்தில் தோன்றுதல் ஆகும்.

12. வினைப்பயன் - பிணி மூப்புச் சாக்காடு [Disease, old age ball]

இச்சார்பினை ஜராமரண என்று பாலி, வடமொழிப் பௌத்த நூல்கள் கூறியுள்ளன. வினைகளின் விளைவாக 1. பிணி 2. மூப்பு 3. சாக்காடு [30. 145 - 146] தோன்றுகின்றன. இவற்றுள் பிணி எனப்படுவது இயல்பான உடல்நிலையை வேறாக்கி இடும்பை பயத்தல் ஆகும். [30. 98 - 99]. மூப்பு எனப்படுவது நிலையாமை காரணமாக உடலின் ஆற்றல்கள் குன்றித் தளர்ச்சி அடைதல் ஆகும். இதனை முதுமை என்றும் கூறுவர். [30.100 - 101]. சாக்காடு என்பது, அருவும் உருவும் கலந்த யாக்கை அழிந்து, கதிரவன் மறைதல் போல் மறைந்துவிடுதல் ஆகும்.

பிரதித்திய சமுத்பாதத்தின் சிறப்பியல்புகள்

நாகார்ச்சுனரின் மூலமாத்தியமிக காரிகையினை அடியொற்றிச் சாத்தனார் பிரதித்திய சமுற்பாதத்தின் சிறப்பியல்புகளைச் சுருக்க விளக்கமாகச் சொல்லியுள்ளார். இரு பேராசிரியர்களும் அன்மைச் சொற்களால் இக்கோட்பாட்டினைத் தத்தம் நூல்களின் முகப்பில் மொழிந்துள்ளனர். எண்ணற்ற காரணங்களையும் சூழல்களையும் அடிப்படையாகக் கொண்டு எவ்வகைப் பொருள்களும் சார்பில் தோற்றம் பெறுவன என்பதை இக்கோட்பாடு விளக்குகிறது.

சாத்தனார்,

"நின்மதி இன்றி ஊழ்பாடு இன்றிப்
பின்போக்கு அல்லது பொன்றக் கெடாதாய்ப்
பண்ணுநர் இன்றிப் பண்ணப் படாதாய்
யானும் இன்றி என்னதும் இன்றிப்
போனதும் இன்றி வந்ததும் இன்றி
முடித்தலும் இன்றி முடிவும் இன்றி
வினையும் பயனும் பிறப்பும் வீடும்
இனையன எல்லாம் தானே ஆகிய" - *[30. 37 – 44]*

நாகார்ச்சுனர்

மூலமாத்தியமிக காரிகையின் முகப்புப் பாடலில், எட்டு வகை அன்மைச் சொற்களால் பிரதித்தியச் சமுற்பாதத்தினை நாகார்ச்சுனர் விளக்கியுள்ளார். உத்பாதமும் உச்சேதமும் இல்லாததாய் [- தோற்றமும் கேடும் இன்றி], சாசுவதமும் நிரோதமும் இல்லாததாய் [- நிலைபேறும் நிலையாமையும் இன்றி], ஏகார்த்தமும் நானார்த்தமும் இல்லாததாய் [- ஒருமைப் பொருளும் பன்மைப் பொருளும் இன்றி, ஆகமனமும் நிராகமனமும் இல்லாததாய் [- வருதலும் போதலும் இன்றி] விளங்குவது பிரதித்திய சமுற்பாதம் என்றார்.

ஔவை அவர்கள்,

"இக்கூறிய கருத்தையே [30. 37 - 44], மூலமாத்தியமிக காரிகையில் நாகார்ச்சுனர் எட்டுவகையாகக் கூறுகின்றார்"[64]

என்று கூறி, அடிக்குறிப்பில் *1.* No destruction, no production; no discontinuity, no permanence; no unity, no diversity, no coming

64. மணிமேகலை உரையுடன், ப. 545-546.

[appearance], no going [disappearance]" – *11-13*" என்று எடுத்துக்கூறுதல் பாராட்டத்தக்கது. இவர்கள் இவ்வாறு கூறுதற்குரிய மூல நூலினை யான் ஆய்வு மேற்கொண்டிருந்த காலத்தில் *[1966 – 1970]* தேடினேன். ஒருவாறு கண்டேன்; இங்கே குறிப்பிடுகிறேன்.

"......... Nagarjuna has expressed this view in his famous aphorism [MDH., 11. 13, 592.7]:-

> No destructing no production; no discontinuity no permanence; no unity no diversity; no appearance [coming], no disappearance [going]'[65]

உரைவேந்தர் அவர்கள் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் பணிபுரிந்தவர். அவர்கள் காலத்துத் தமிழறிஞர் பலர்க்கு அயல்மொழிகளில் புலமை இருந்ததா என்பது பற்றித் திட்ட வட்டமாகச் சொல்ல இயலாது. ஆனால், பல்கலைக்கழகத்தில் பயிலாமல், பயின்றவரைக் காட்டிலும் ஆங்கிலப் புலமை மிக்கவராகவும், ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்த பௌத்த ஆராய்ச்சி நூல்களைப் புரிந்துகொண்டு பயின்று நினைவில் நிறுத்தி, உரைவரையும் பொழுது உரிய அடிகளுக்குப் பொருள் விளக்கம் காணுங்கால் அவற்றை மேற்கோள் காட்டியிருத்தல் என்பது வியப்பினும் வியப்பாகவே உள்ளது. அவர்தம் ஆற்றல் மிக்க உரைதான், பூட்டிக்கிடந்த 27, 29, 30ஆம் காதைகளைத் திறப்பதற்குரிய திறவுகோலாக அமைந்துள்ளது என்பது எண்ணி இன்புறத்தக்கது. இவர்தம் உரையில் இங்ஙனம் வரும் இடங்கள் பற்பல. அவற்றுள், ஒருசில பகுதிகளைக் காண்போம்.

பன்னிரு சார்புகளும் அஜந்தா திபெத்திய ஓவியங்களும்

கருத்துருவினைக் காட்சி உருவாக அமைக்கும்பொழுது மக்கள் எளிதில் விளங்கிக்கொள்ளுவர். அவ்வகையில் பன்னிரு சார்புகளை அஜந்தா, திபெத்திய வண்ண ஓவியங்களில் தீட்டியுள்ளனர். இத்திறத்தினை உரைவேந்தர் ஆங்கில நூற் பயிற்சியால் தம் உரைப்போக்கில் சுட்டிச் செல்லுதல் நோக்கத்தக்கது.

65. Har Dayal, The Bodhisattva Doctrine in Buddhist Sanskrit Literature, London, 1932, p. 238, p. 372

1. பேதைமை

"திபெத்திலுள்ள கோயில்களில் இப்பேதைமை ஆகிய நிதானம் குருடனாக உருவு கொடுத்து ஓவியம் எழுதப்பட்டுள்ளது என்று ஆராய்ச்சியாளர் கூறுப"[66]

என்று ஒளவை குறித்துள்ளார்.

காண்க: A Tibetan symbolic picture of the nidanas represents it [- Avidya – *பேதைமை*] a blind man feeling his way with a stick. "[67]

2. செய்கை

"In an Ajanta fresco\, the samskaras *[- செய்கை]* are represented by a potter working at his wheel, surrounded by pots; but the Tibetan picture has only the wheel and the pots, without the potter"[68]

3. உணர்வு –விஞ்ஞானம்

"அஜந்தாக் குகை ஓவியத்தில், ஒரு வால் இல்லாக் குரங்கு மரம் ஏறுவது போலக் காணப்படுவது இந்த நிதானத்தைக் குறிப்பதாம் எனக் கூறுப."[69]

"In the Ajanta fresco and the Tibetan picture, it is represented as an ape, climbing a tree."[70]

4. அருவுரு - நாமரூபம்

"திபெத்தில் காணப்படும் ஓவியங்களுள், இஃது ஓராற்றைக் கடக்கும் படகு போல வரையப்பட்டுள்ளது என்பர்."[71]

In theTibetan picture, it is represented by a boat crossing stream [i.e. a living being on the ocean of samsara or transmigratory existence"[72]

---

66. மணிமேகலை உரையுடன், ப. 547.

67. The Boddisattva Doctrine in Buddhist Sanskrit Literature, p. 240.

68. Ibid, pp. 240.

69. மணிமேகலை உரையுடன், ப. 550.

70. The Bodhisattva Doctrine in Buddhist Sanskrit Literature, pp. 240.

71. மணிமேகலை உரையுடன், ப. 550.

72. The Bodhisattva Doctrine in Buddhist Sanskrit Literature, pp. 240.

5.வாயில் ஆறு – சட் ஆயதனம்

"இது மனிதன் ஒருவன் தலைபோலவும், ஆறு சாளரம் உள்ள வீடுபோலவும் ஓவியம் எழுதப்பட்டுள்ளது."[73]

"In the Ajanta and Tibetan picture, they are represented by a mask of a human face or a house with six windows."[74]

6.ஊறு - பரிசம்

"இந்நிதானம் கண்ணில் அம்பு தைப்புண்டிருக்கும் ஒருவன் போல ஓவியம் செய்யப்படுகிறது என ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்."[75]

"It is represented in the Tibetan picture by a man seated with an arrow entering his eye."[76]

7.நுகர்வு - வேதனை

"இது காதலர் இருவர் தம்மிற் றழீஇ இருப்பது போல் ஓவியம் செய்யப்படுகிறது."[77]

"In the picture, it is represented by a couple of lovers embracing each other."[78]

8.வேட்கை

"இதனைக் கள் அருந்தும் ஒருவனாக உருவகம் செய்து ஓவியம் எழுதியுள்ளனர்."[79]

"In the Tibetan picture, it is represented by a man drinking wine."[80]

9.பற்று - உபாதானம்

"ஒருவன் பல்வகைப் பூக்களைப் பறித்துத் தொகுப்பது போல இதனை உருப்படுத்தி ஓவியம் தீட்டியுள்ளனர்."[81]

---

73. மணிமேகலை உரையுடன், ப. 551.
74. The Bodhisattva Doctrine in Buddhist Sanskrit Literature, pp. 241.
75. மணிமேகலை உரையுடன், ப. 551.
76. The Bodhisattva Doctrine in Buddhist Sanskrit Literature, pp. 241.
77. மணிமேகலை உரையுடன், ப. 552.
78. The Bodhisattva Doctrine in Buddhist Sanskrit Literature, pp. 241.
79. மணிமேகலை உரையுடன், ப. 552.
80. The Bodhisattva Doctrine in Buddhist Sanskrit Literature, pp. 241.
81. மணிமேகலை உரையுடன், ப. 552.

"In the Tibetan picture, upadana is represented as a man picking flowers and storing them up in large baskets."[82]

10. பவம் - கருமத் தொகுதி

"திபெத்தியர் இதனை ஒரு மணமகளாக உருவகம் கற்பிக்கின்றனர்."[83]

"......... the Tibetan picture represents it as a married woman."[84]

11. பிறப்பு –தோற்றம்

"திபெத்திலுள்ள ஓவியங்கள் இதனை மணம் செய்துகொண்டதன் விளைவாக மகப் பெற்ற மனிதன் ஒருவன் போல உருவம் தீட்டிக் காட்டுகின்றனர்."[85]

"The Tibetan picture shows the birth of a child, L.A. Waddell says; It is the maturing of the man's life by the birth of an heir and as a result of the married existence of the tenth stage."[86]

12. பிணி, மூப்பு, சாக்காடு– ஜராமரணம்.

"திபெத்தியர்களால் இங்கே கூறிய பிணி, மூப்பு முதலியன சுடலைக்குக் கொண்டு போகப்படும் பிணம் போல உருவம் எழுதப்பட்டுள்ளன."[87]

"The Tibetan picture shows a corpse, which is being carried off to cremation or burial"[88]

இதுகாறும் பன்னிரு சார்புகளும் வண்ண ஓவியங்களில் வடிவங்களாகக் தீட்டப்பெற்றிருந்த திறனை ஔவை அவர்கள் ஹார்தயாள் அவர்களின் "The Bodhisattva Doctrine" என்ற முந்து நூலின் வழி நின்று விளக்கியுள்ள பாங்கினைக் கண்டோம்.

இனி, காமம், வெகுளி, மயக்கம் என்பன பிறவிக்கு ஏது; இவற்றைக் களைவதற்குச் சாத்தனார் பல்வகைப் பாவனைகளை

---

82. The Bodhisattva Doctrine in Buddhist Sanskrit Literature, pp. 241.

83. மணிமேகலை உரையுடன், ப. 553.

84. The Bodhisattva Doctrine in Buddhist Sanskrit Literature, pp. 242.

85. மணிமேகலை உரையுடன், ப. 553.

86. The Bodhisattva Doctrine in Buddhist Sanskrit Literature, pp. 242.

87. மணிமேகலை உரையுடன், ப. 554.

88. The Bodhisattva Doctrine in Buddhist Sanskrit Literature, pp. 242.

[Meditations] வழங்கியுள்ள திறமும் அவற்றுக்கு உரைவேந்தர் வகுத்துள்ள உரைத்திறமும் குறித்து ஹர்தயாள் அவர்கள் நூலின் வெளிச்சத்தில் ஒப்பிட்டுக் காண்போம்.

முக்குற்றம் முனிதல் [Eradication of Lust, Hatred and Delusion]

சுத்த பிடகத்தில் காமம், வெகுளி, மயக்கம் என்ற முக்குற்றங்களும் பேரின்பப் பேறாகிய நிப்பாணத்திற்கு [நிர்வாணத்திற்குத்] தடைகள் என்றும் இவற்றைக் களையவே அப்பேறு வாய்க்கும் என்றும் கூறப்பட்டுள்ளது. தீவினைகளாகிய பாபச் செயல்கள் யாவும் காமம், வெகுளியாலும், பிழைபட்ட அறிவும் மயக்க உணர்வும் மோகத்தாலும் விளைவன என்று பௌத்தப் பனுவல்கள் பகர்கின்றன. உலகியல் துன்பங்கட்கு எல்லாம் இம்மூன்றுமே காரணம் என்று சாத்தனாரும் சாற்றியுள்ளார். [30. 252 – 253].

தேரவாத பௌத்தம் இம்மூன்றனையும் களைவதற்கு அட்டாங்க நெறியை வற்புறுத்தியது. எனினும், மகாயான பௌத்தம் பிரம விகாரங்கள் எனப்படும் தியான மார்க்கத்தை வற்புறுத்துகிறது. முக்குற்றங்களையும் களையும் முறையினை நிரலாகக் காண்போம்.

காமத்தைக் களைதல்

புலனின்பங்களில் அழுந்தச் செய்து பற்றையும் பாசத்தையும் விளைவிக்கும் காமத்தினைக் களைவதற்கு அசுபபாவனை [- Meditation on the Loath some Nature of human body] என்னும் தியான முறையினை மகாயான பௌத்தம் பரிந்துரைக்கிறது. இந்தத் தியான முறையினை,

> ***"அநித்தம் துக்கம் அநான்மா அசுசிஎனத்***
> ***தனித்துப் பார்த்துப் பற்றறுத் திடுதல்" - 30. 254 – 255***

என்று அறவண அடிகள் அறச்செல்விக்குப் போதிக்கிறார்.

எல்லாப் பொருள்களும் நிலையற்றவை [- அநித்தம்], துன்ப மயமானவை [- துக்கம்], ஆன்மா இல்லாதவை [- அனான்மா], அருவருப்புடையவை [-அசுசி] என்று தியானம் மேற்கொள்ளுதலால் காமம் என்னும் கடும்பகை அகலும்.

உரைவேந்தர்,

"இவ்வநித்தம் முதலிய நான்கினையும் விபரியாசங்கள் என்றும், அநித்தம், அனான்மா, அசுசி, துக்கம் என முறை செய்தும்

அசுவகோஷரும் வாசபந்துவும் [வாசுபந்தும்] சாந்திதேவரும் கூறுவர். நால்வகை மிருதியுபத்தானங்கட்கும் முன்னர் இன்றியமையாது வேண்டப்படுவன இந்நான்கும் என்றும், இதனாற் காமமாகிய பெருங்குற்றம் கெடும் என்றும் ஆசிரியர் பலரும் வற்புறுத்துகின்றனர். இதனை அசுபபாவனை என்றலும் உண்டு.[89] இப்பகுதி, ஹர்தயாள் [Har Dayal] கருத்தினை வழிமொழிவதாகக் காணப்படுகிறது.[90]

"Before discussing each smrty – upasthana in detail, it may not be out of place to refer to certain comments that have been made about them collectively as a group.

Asvaghosa and Vasubandhu agree in regarding these four meditations as antidotes to the four viparyasas [Saud. Ka., xvii, 25; M.S.Al., 140.24]. Asvaghosa declares that the four viparyasas [perversions], which cause evil should he destroyed by the four smrtyupasthanas .....

Santideva explains that a man is afflicted with the four viparyasas, when he harbours wrong opinions:

1. What is really impermanent [anit=ya] is permanent.
2. The things, which have really no substantial permanent indi viduality [anatman], possess it.
3. What is really impure [asusi] is pure."
4. What is really painful [duhkha] is pleasant.

வெகுளியைக் களைதல்

வெறுப்பு, ஆசை நிறைவேறாமை, சினம், அமைதி இன்மை, பகைமை முதலிய காரணங்களால் வெகுளி பிறக்கிறது என்று தம்ம சங்கணி [1060] சாற்றுகிறது. இதனைப் போக்குதற்கு **மைத்திரி, கருணை,** முதிதை என்ற பாவனைகளை அறவண அடிகள் பரிந்துரைத்தனர். [30. 256 - 257].

2.1. மைத்திரி பாவனை

"மைத்திரி பாவனையாவது எல்லா உயிர்களையும் நட்புறவோடு நினைந்து அவையெல்லாம் துன்பம், நோய் முதலியனவின்றி இன்பம் உடையனவாக நினைத்தல் என்று சத சஹஸ்ரிக பிரஞ்ஞாபாரமிதை [1411-1] என்ற நூல் கூறுகிறது. இப்பாவனையால் எவ்வுயிர்க்கும் நலம் செய்தற்கும் அவற்றிற்கு

89. மணிமேகலை உரையுடன் ப. 569-570

90. The Bodhisattva Doctrine in Buddhist Sanskrit Literature, pp. 90-91.

வேண்டுவனவற்றை உதவுதற்கும் உரிய திருந்திய உணர்வு பிறக்கிறது."[91]

இவ்விளக்கத்தின் மூலம்,

> "Maitri is characterised by the desire to do good to others and to provide them with what is useful." [92]

என்று காணப்படுதல் ஹர்தயாளின் ஆய்வு நூலில் அறியத்தக்கது. இந்த ஆங்கில நூலின் நோக்கீட்டு எண் 450 இந்நூலின் பக்கம் 369இல் பிரஞ்ஞாபாரமித சதகம், 1411.1. என்று விளக்கம் தந்துள்ளமை நோக்கத்தக்கது.

2.2. கருணா பாவனை

> "கருணைப் பாவனை யாவது பிற உயிர்கட்கு உண்டாகும் துன்பம் கண்டு உள்ளம் உருகி அதனை நீக்கற்கு விரையும் விரைவுணர்வு எய்துகிறது. இதனைச் செய்வோர், உயிர்கள் வறுமையின்றி இன்பச்செல்வம் உடையவாகுக எனப்பாவிப்பர்."[93]

> "......... He loves and guards others ...... He is also willing to exchange his happiness for the miseries of others."[94]

2.3. முதிதா பாவனை

> "முதிதைப் பாவனையாவது பிற உயிர்கள் பெற்றிருக்கும் ஆக்கமும் இன்பமும் கண்டு மனமகிழ்வும் நிறைவும் அமைதியும் கொண்டு அவை அவற்றின் நீங்காது இருப்பனவாகுக என நினைப்பது. இதனால் எப்போதும் செவ்விய உணர்வுடைய ராயிருக்கும் செம்மை நிலை உண்டாகிறது என்பர்.[95]

> "Muditā [sympathetic joy] .... Its chief characteristics are joy, faith and freedom from despondency, craving, jealousy in-sincerity and hostility ...."[96]

91. மணிமேகலை உரையுடன் ப.570
92. The Bodhisattva Doctrine in Buddhist Sanskrit Litera ture, pp. 227
93. மணிமேகலை உரையுடன் ப.570
94. The Bodhisattva Doctrine in Buddhist Sanskrit Literature, p.179
95. மணிமேகலை உரையுடன் ப.570
96. The Bodhisattva Doctrine in Buddhist Sanskrit Literature, pp.179

மயக்கம் களைதல் [30. 258 – 259]

"சுருதியும் சிந்தனையும் பாவனையும் தரிசனையும் ஆகிய நான்கினையும் ஆராய்ந்துணர்ந்து மயக்கத்தைப் போக்குவாயாக ..... சுருதியாவது அறவுரை கேட்டல். சிந்தனையாவது கேட்டவற்றைச் சிந்தித்தல். பாவனையாவது கேட்டவாறு ஒழுகுதல். தரிசனையாவது உண்மை தெளிதல். இச்சுருதி முதலிய நான்கினையும் உபேட்சா பாவனை என்றும் கூறுப."[97]

"சுருதி, சிந்தனை, பாவனா, தரிசனை என்ற நான்கிலும் சுருதி எனப்படுவது பௌத்த தத்துவ நூல்களைத் தகுதி மிகுதி படைத்த நல்லாசிரியர்களிடம் பாடம் கேட்டல் ஆகும். கேட்டவற்றை ஆழ்ந்து எண்ணிப்பார்த்தல் சிந்தனை எனப்படும். பயிற்சியாலும் மெய்யுணர்வினாலும் சிந்தித்தவற்றைத் தெளிவு செய்துகொள்ளுதல் பாவனை எனப்படும். இம்மூன்று திறங்களையும் போதிசத்துவ பூமி [84.7], மகாயான சூத்திராலங்காரம் [82.2] தரும சங்கிரகம் [110] ஆகிய மகாயான நூல்களில் காணலாம். எனினும், நான்காவது கூறாகச் சாத்தனார் தரிசனை என்பதையும் இணைத்துள்ளார். இதற்கு உண்மை தெளிதல் என்பது பொருள் ஆகும். இதனைப் பாவனையிலும் அடக்கலாம்."[98]

பதிப்பாசிரியர் டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர், "........ ஈண்டுக்கூறிய சுருதி முதலியன உபேட்சா பாவனையின் பாற்படும்." என்று அடிக்குறிப்பில் சுட்டியுள்ளார்.[99] இவரைப் பின்பற்றி ஔவை அவர்களும் அவ்வாறே குறித்துள்ளனர்.

எனினும், ஹர்தயாள் வழங்கும் கருத்தும் நோக்குதற்குரியது.

1. Upeksa [Equanimity] is an important term in Buddhist philosophy in preserving the same mental attitude in all circumstances, in joy and sorrow in fame and obloquy and in gain and loss ...."[100]

இன்ப துன்பங்களை நிகராக நினைக்கும் சமசித்தம் உபேட்சா பாவனையால் அமைவது என்பது புலனாகும்.

சுருதி, சிந்தனை, பாவனை, என்பனவற்றைப் பிரஞ்ஞா என்று ஹர்தயாள் கருதியுள்ளார்.

97. மணிமேகலை உரையுடன் ப.570

98. தமிழிலக்கியத்தில் பௌத்தம், ப. 287-288.

99. மணிமேகலை மூலமும் உரையும், ப. 389.

100. The Bodhisattva Doctrine in Buddhist Sanskrit Literature, pp. *153.*

2. "Prajña is of three kinds: that which depends on hearing the teaching from another person and on the study of Scripture; that which arises from reflection; and that which is developed by cultivation and realisation [srutamayi cintamayi, bhavanamayi."]

[Vide, the Bodhisattva Doctrine, p. 236]

3. "The four brahma vihāras consist in the cultivation of four feelings .... viz., maîtri [love or friendliness], karuna [compassion], mudita [sympathetic joy] and upeksa [equanimity]."[101]

5. நிறைவுரை

சித்தாந்த கலாநிதி என்றும் உரைவேந்தர் என்றும் அறிஞர்களால் பாராட்டப்படும் பேரறிஞர் ஔவை சு.துரைசாமிப்பிள்ளை அவர்கள் நல்லாசிரியராகவும், ஆய்வுத் துறைபோகியவராகவும், பதிப்பாசிரியராகவும், பன் மொழிப் புலமைச் செல்வராகவும், சமய, தத்துவத் துறையில் முத்திரை பதித்தவராகவும் சென்ற நூற்றாண்டில் ஒளி வீசியவர். மணிமேகலை காப்பியத்தின் இறுதிக் காதைகளுக்கு அவர் உரை வரைந்திலரேல் அப்பகுதி மூடியே கிடக்கும் என்பதில் ஐயமில்லை. அவற்றைத் தம் நுண்மாண் நுழைபுலத்தினால் விரிவாகவும் விளக்கமாகவும் ஆராய்ந்து வரைந்திருக்கும் உரைக்களஞ்சியம் யாவர்க்கும் எஞ்ஞான்றும் பயன் நல்குவதாகும். மணிமேகலை உரைத்திறம் பற்றிய இந்த இயலில் அவர்தம் உரையின் ஒரு சில பகுதிகள் பற்றிய ஆய்வுதான் மேற்கொள்ளப்பட்டது. மணிமேகலை காப்பியம் நிலைத்திருக்கும் வரை உரைவேந்தர் ஔவையின் புகழ் ஒளிவீசிக் கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

---

101. ibid, p. 236, p. 226.

பின்னிணைப்புக்கள்

மேற்கோள் நூல்கள்

அ. தமிழ் நூல்கள்

1. **அகநானூறு, களிற்றியானை நிரை,** நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார், கரந்தைக் கவியரசு ரா.வேங்கடாசலம் பிள்ளை, சை.நூ.ப.கழகம், சென்னை, 1962.

   அகநானூறு, மணிமிடைபவளம், நித்திலக்கோவை, புலவர் பொ.வே.சோம சுந்தரனார் உரை, சை.நூ.ப.கழகம், சென்னை, 1970.

2. **ஐங்குறுநூறு பழைய உரையுடன்**, உ.வே.சா. பதிப்பு, சென்னை, 1903, 1994.

3. **ஐங்குறுநூறு, ஜி.சதாசிவ ஐயர் உரையுடன்,** உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1999.

4. **ஐங்குறுநூறு [மருதம்],** ஔவை சு. துரைசாமிப் பிள்ளை உரையுடன், திருவத்திபுரம், 1938.

5. **ஐங்குறுநூறு மூலமும் உரையும்**, ஔவை சு. துரைசாமிப் பிள்ளை உரையுடன், அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு, 1957-1958.

கந்தசாமி, சோ.ந.,

1. **இந்தியத் தத்துவக் களஞ்சியம்,** மூன்று தொகுதிகள், மெய்யப்பன் பதிப்பகம், சென்னை, 2003.

2. **இலக்கியமும் தத்துவமும்**, மெய்யப்பன் பதிப்பகம், சென்னை, 2016.

3. **ஐங்குறுநூறு ஆராய்ச்சித் தெளிவுரை**, மெய்யப்பன் பதிப்பகம், சென்னை, 2014.

4. **தத்துவ நோக்கில் தமிழிலக்கியம்,** மெய்யப்பன் பதிப்பகம், சென்னை, 2005.

5. **தமிழும் தத்துவமும், மணிவாசகர் பதிப்பகம்,** சென்னை, 1976.

6. **தமிழிலக்கியத்தில் பௌத்தம்,** டாக்டர் இராதாகிருட்டிணன் தத்துவ உயராய்வு மையம், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1977.

7. **நற்றிணை ஆராய்ச்சித் தெளிவுரை**, இரு தொகுதிகள், மெய்யப்பன்பதிப்பகம், சென்னை, *2018, 2019.*

8. **மணிமேகலையில் தத்துவச் சிந்தனைகள்**, மெய்யப்பன் பதிப்பகம், சென்னை, *2019.*

9. **மணிமேகலை காப்பியத் திறனாய்வு**, மெய்யப்பன் பதிப்பகம், சென்னை, *2019.*

10. **நற்றிணை மூலமும் ஔவை சு.துரைசாமிப் பிள்ளை விளக்க உரையும்,** இரு தொகுதிகள், அருணா பதிப்பகம், சென்னை, *1966, 1968.*

சாமிநாதையர், உ.வே. மணிமேகலை மூலமும் அரும்பத உரையும், சென்னை, 1949.

நாரணையங்கார், திரு. *1.* **அனுமான விளக்கம்,** மதுரை, *1935.*

2. **நியாயப் பிரவேச மணிமேகலை செந்தமிழ்,** தொகுதி *32-34*, மதுரை.

ஆ. ஆங்கில நூல்கள்

1. Ananda Coomaraswamy: Buddha and the Gospel of Buddhism, London, 1916.

2. Basham,A.L.Dr. : History and Doctrines of the Ajivakas, London, 951.

3. Bhattacharya, Vidhushakhara: The Basic conception of Buddhism, University of Calcutta, 1934.

4. Dignaga : Pramana Samuccaya Edited by H.R.Ramaswamy Ayyangar, Mysore, 1930.

5. Har Dayal, Dr. : The Bodhisattva Doctrine, London, 1932.

6. Horner,I.B., : The Translation of Vinaya Pitaka,vide, The Sacred Books of the Buddhists, Vol.xiv, London, 1951.

7. Kandawamy, S.N., : 1. Buddhism As Expounded in Manimekalai, Annamalai University Publication, 1978.

2. Indian Epistemology As Expounded in the Tamil Classics, International Institute of Tamil Studies, Chennai, 2000.

3. Tamil Literature and Indian Philosophy, I I S, Chennai, 2001.

4. Philosophical Perspectives in Tamil Literature, Institute of Asian Studies, Chennai, 2016.

8. Kane, P.V., : Vedanta Commentaries Before Sankaracharya, Vide, Proceedings and Transactions of the Fifth Oriental Conference Vol.II.

9. Krishnaswamy Ayyangar, S.K., Dr. : Manimekalai in its Historical Settings, London, 1928.

10. Law,B.C., Dr. : 1. Buddhaghosa, Calcutta, 1923.

2. Buddhistic Studies [Edited], Calcutta, 1931.

3. A History of Pali Literature, volumes I & II, London, 1933.

4. The Damilas, Indian Culture, vol. III, 1936-37, pp. 386-389.

11. Oldanberg Hermann : Buddha – His Life, His Doctrine, His or-

der, Cacutta, 1927.

12. Radhakrishnan,S., Dr. : Indian Philosophy, Volumes 1 & 2 London, 1958.

13. Stcherbatsky,TH., Dr. 1. The central conception of Buddhism, London, 1923.

2. Buddhist Logic, volumes 1 & 2, Leningrade, 1932.

14. Subramaniya Pillai,G., Saiva Siddtanta Lectures, Annamalai University Publication, 1948.

15. Tucci,G., : Pre-Dignaga Buddhist Texts on Logic from Chinese Sources, Gaekwad's Oriental Series, vol. 49.

16. Vidhyabhusana,S., Dr. : History of Indian Logic, Motilal Banarsidass, New Delhi, 1978.

சுருக்கச் சொல் விளக்கம்

அகம்	- அகநானூறு
இளம்	- இளம்பூரணர்
உ.வே.சா.	- உ.வே.சாமிநாதையர்
ஐங்	- ஐங்குறுநூறு
கம்ப	- கம்பராமாயணம்
கலித	- கலித்தொகை
கும்ப	- கும்பகருணன், வதைப்படலம்
குறுந்	- குறுந்தொகை
சிலம்பு	- சிலப்பதிகாரம்
திருக்	- திருக்குறள்
தெ.பொ.மீ	-தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்
தொல்.எழுத்து	- தொல்காப்பியம், எழுத்ததிகாரம்
தொல்.சொல்	-தொல்காப்பியம், சொல்லதிகாரம்
தொல்.பொருள்	-தொல்காப்பியம் பொருளதிகாரம்
நற்	- நற்றிணை
நெடு	-நெடுநல்வாடை
பக்	-பக்கம்
பதிற்	-பதிற்றுப்பத்து
பரி	-பரிபாடல்
புறம்	-புறநானூறு
பெரும்	- பெரும்பாணாற்றுப்படை
பொரு	-பொருநராற்றுப்படை
மணி	-மணிமேகலை
மது	-மதுரைக்காஞ்சி
மலை	-மலைபடுகடாம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகளுள் சில :

	ரூபாய்
திராவிட அல்லது தென்னிந்தியக் குடும்ப மொழிகளின் ஒப்பிலக்கணம்	1200
படிமுறைத்தமிழ் மொழியியலும் பயன்பாடும்	900
தமிழர் வரலாறு I, II	530
தமிழ் வரலாறு	240
தமிழ் மொழி வரலாறு I	175
இந்திய விடுதலைக்குப் பின் தமிழிலக்கியச் செல்நெறிகள்	55
அயலகத் தமிழ்க் கலை இலக்கியச் சமகாலச் செல்நெறிகள்	125
மேலை நோக்கில் தமிழ்க் கவிதை	100
சுவடிப் பதிப்புத் திறன் – I, II,	95
இலக்கிய இதழ்கள்	110
இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள் III,IV	105
பரதநாட்டிய சாஸ்திரம்	175
தமிழர் நாட்டு விளையாட்டுகள்	95
இருபதாம் நூற்றாண்டின் இலக்கியக் கோட்பாடுகள்	65
தொல்காப்பியம் – உரைவளம் – 21 தொகுதிகள்	2515
நன்னூல் உரைவளம் – 20 தொகுதிகள்	2535
உலகமொழிகளில் தமிழ்ச் சொற்களும் இலக்கணக் கூறுகளும்	85
உலகச் செம்மொழிகள்	90
தொன்மைத் தமிழ் எழுத்தியல்	1500
ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டு அற நெறிமுறைகள்	200
Landscape and Poetry	50
Critical Studies in Kural	30
A Grammar of Contemporary Literary Tamil	80
Translation Theory and Application	35
Social Life of the Tamils	70
Tamil Culture Vol. I – XII	3200

வெ.எண். 1138
உரைவேந்தரின் உரைமாட்சி
விலை ரூ. 120.00
9 789393 736833